திருப்பாவையில்

எம்பெருமானார்

—— ஓர் ஆய்வு நூல்

ஸ்ரீரங்கம் கோயில் வித்வான்

உ.வே. நரஸிம்ஹாசாரியார்

வெளியிடுவோர்

ஸ்ரீ அண்ணா ஸம்ஸ்க்ருத வித்யாபீட

தருமஸ்தாபனம்

acharya.org

திருப்பாவையில்

எம்பெருமானார்

acharya.org

இந்நூல் ஆசிரியரைப் பற்றி

ஸ்ரீரங்கம் வித்வான் ஸ்ரீ உ.வே.நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி இன்று நம்மிடையே உள்ள வெகுசில உபயவேதாந்த வித்வான்களில் மிக முக்யமானவர். 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஸம்ப்ரதாய காலக்ஷேபங்கள், உபந்யாஸங்கள் செய்து கொண்டு தர்ஶன ப்ரசாரம் செய்து வருகிறார்.

சிறுவயது முதலே தம் தகப்பனார் வித்வான் ஸ்ரீ. உ.வே. ரங்கராஜ அய்யங்கார் ஸ்வாமியிடம் சிக்ஷை தொடங்கிய ஸ்வாமி, அக்காலத்தில் ப்ரஸித்தியாக இருந்த கீர்த்திமூர்த்திகளான ஸ்ரீ. உ.வே. உத்தமசீலி ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. கோவிந்தாசார் ஸ்வாமி, ஸ்ரீ. உ.வே. மதுராந்தகம் வீரராகவாசாரியர் ஸ்வாமி முதலியவர்களிடம் உபய வேதக்ரந்த அருளிச் செயல்களையும் காலக்ஷேபம் கேட்டு இவற்றில் கரை கண்டவராக விளங்குகிறார். சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரியிலிருந்து "மீமாம்ஸாசாஸ்த்ர சிரோமணி" பட்டம் பெற்ற ஸ்வாமி இதர சாஸ்த்ரங்களிலும் அவ்வசாஸ்த்ர விற்பன்னர்களிடம் பாடம் கேட்டுத் தேர்ந்தவரா யிருப்பதோடு தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் ஆழ்ந்த புலமையுடையவர். ஹிந்தி மொழியிலும் "ஸாஹித்ய ரத்ன" பட்டம்பெற்று மும்மொழிப் புலவராக விளங்குகிறார். எல்லா க்ரந்தங்களையும் ஆராய்ச்சி நோக்கோடு, ஆழ்ந்து, அறிந்து பல புதிய கருத்துக்களைச் சொல்லும்திறமை படைத்தவர்.

acharya.org

- முன்னுரை -

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஆண்டாளுடைய திருப்பாவையில் ஆசார்ய வைபவம் தொனிப்பொருளாக விளங்குகிறது. தொனிப்பொருள் செறிந்த காப்பியமோ துதிநூலோதான் பெருமையுடையதாகக் கூறப்படுகிறது.

விட்டு சித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே (நாச். திருமொழி 10-10) என்று சொல்லுகிற ஆசார்யாபிமானத்திலே நிலை நின்ற ஆழ்வார் திருமகளாரான ஆண்டாள் சுபாவத்துக்குச் சேரும்படி இருக்கும் ஆசார்யவைபவம்.

तस्मिन् रामानुजार्ये गुरुरिति च पदं भाति नान्यत्र

என்று சொல்லுகிறபடி ஸ்வாமி எம்பெருமானாரே பரமாசார்யர் ஆவார்.

ஆண்டாள், '**கோயிலண்ணர்**' என்று அர்ச்சகர் மூலமாக எம்பெருமானாருக்கு திருநாமம் ப்ரஸாதித்தாள். ஆண்டாளுடைய உகப்புக்குக் கொள்கலமாயிருந்தார் எம்பெருமானார். மாதுகரத்திலே, திருக்கோட்டியூர் நம்பி திருவாசலில் சீரார் வளையொலிப்பவந்து திறவாய் என்று அநுஸந்திக்கும் போது, திருக்கோட்டியூர் நம்பி திருமகளார் கதவைத் திறந்து கொண்டு வெளியே புறப்பட, எம்பெருமானார் விழுந்து தண்டனிட்டுக் கிடக்க, நம்பி திருமகளார் உள்ளே சென்று எம்பெருமானார் என்னை தண்டனிட்டார் என்று சொல்ல, நம்பிகள் எம்பெருமானார் உள்ளே புகுந்தவாறே, ''இளையாழ்வீர்!, இப்போது 'உந்துமதகளிற்றன்' அநு

acharya.org

ஸந்தானமோ'', என்றார். இந்நிகழ்ச்சியால் எம்பெருமானார் திருப்பாவையில் ஈடுபாடுடையவர் என்று விளங்குகிறது. இவர் திருப்பாவை ஜீயர் என்று போற்றப்பட்டார்.

'அனைத்தில்லத்தாருமறிந்து' (திருப்பாவை பாசுரம் 12) என்கிற இடத்து உரையில், பெரியவாச்சான் பிள்ளை ''எம்பெருமானார்திருவவதரித்தாற் போலே காணும் இப்பெண் பிள்ளையும்'' என்றும், அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இதே பங்க்திகளையும், ஆய்ஸ்வாமி- ''எம்பெருமானார் திருவவதரித்தாற் போலே காணும் இந்நாச்சியார் அவதரித்த பின்பு எல்லாரும் பகவத் விஷய மறிந்தது'' என்றும் அருளியுள்ளனர். குணஸாம்யத்தாலே (பண்புகள் ஒத்திருப்பதால்) எம்பெருமானாரை தொனிப்பொருளாக திருப்பாவையில் காட்டுவது இயல்பே.

இக்காரணங்களால், ''திருப்பாவையில் எம்பெருமானார்'', என்ற தலைப்பில் அநுபவிக்க ஆவல் ஏற்பட்டது.

ஸ்ரீ உ.வே. அண்ணன் திருவேங்கடாசாரியர் ஸ்வாமி நியமனம் இந்த ஆவலை மேன் மேலென வளர்த்தது. கோயில் திருப்பாணாழ்வார் ஸந்நிதியில் 1996-97 (தாதுவருஷம்) மார்கழி மாதம் திருப்பாவைப்ரவசனத்திலே எம்பெருமானார் அநுபவம் அடியார் குழாங்களுடன் கூடியிருந்து பரிமாறும் பேறு பெற்றேன். **ஸ்ரீ அண்ணா ஸம்ஸ்க்ருத ட்ரஸ்டின் பேருதவியால்** அடியேன் அநுபவம் இதோ உங்கள் கையில் நூலாக உள்ளது. அநுபவித்து இன்புறுமாறு ப்ரார்த்திக்கிறேன்.

குறைகளைக் காணாக் கண்ணிட்டு நற்குணம் கொள்ள வேணுமாய் ப்ரார்த்தித்து விடை பெறுகிறேன்.

தாஸன்

R. நரஸிம்ஹாசாரியர்

வித்வான்

acharya.org

திருப்பாவையில் எம்பெருமானார் - நூல் விளக்கம்

மார்கழி நீராட என்று ஒருவ்யாஜத்தையிட்டு, நோன்பு என்றொரு வ்யாஜத்தாலே, பத்து பெண்களை எழுப்பிக் கொண்டு குழாங்களாய் எம்பெருமான் பக்கலிலே சென்று, உனக்கு சேஷமாயிருக்கிற ஆத்மா, அநர்த்தப்படாதபடி பண்ணி, இதுக்கு உசிதமான கைங்கர்யங்களைக் கொடுத்து, அந்த கைங்கர்யம் நித்யமாயிருக்கும்படி செய்தருளவேணும் என்று அபேக்ஷிக்கிறது.

திருப்பாவையில் பல உட்பொருள்கள் அமைந்துள்ளன. இந்நூலில், 'எம்பெருமானார்' உட்பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளார்.

பாசுரம் 1

திருப்பாவை

சிறுமியரை நீராட வருகவென அழைத்து அதற்கு வாய்த்த காலத்தைக் கொண்டாடுகிறார்கள். நீராட்டம் கிருஷ்ணாநுபவம். நீராடினால் நாராயணன் நமக்கு பறை தருவான் என்கிறார்கள்.

உட்பொருள்

இராமானுசாநுபவம் செய்ய வைணவர்களை அழைத்து அதற்கு வாய்த்த காலத்தைக் கொண்டாடுகிறார்கள். நீராட்டம்: ராமானுசாநுபவம். நீராடினால் யதிராஜரே பகவதநுபவகைங்கர்யங்களைத் தருவார் என்கிறார்.

பாசுரம் 2

திருப்பாவை

நோன்புக்காகச் செய்ய வேண்டியதையும் தவிர்க்க வேண்டியதையும் தீர்மானிக்கிறார்கள்.

செய்ய வேண்டியது. நாட்காலே நீராடுதல்-ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டுதல். செய்யக்கூடாதது : நெய் பால் உண்ணல் - மையிடுதல், செய்யாதன செய்தல்.

acharya.org

உட்பொருள்

ராமானுஜாசார்யாநுபவமாகிய நோன்புக்கு விட வேண்டுமவற்றையும் செய்ய வேண்டுமவற்றையும் தீர்மானிக்கிறார்கள்.

பாசுரம் 3

திருப்பாவை

நாராயணன் நமக்கே பறை தருவான் என்றிருப்பவர்கள் உத்தமன் பேர் பாடி நீராடினால் நல்ல மழை பெய்து நாடு ஸுபிக்ஷமடையும் என்கிறார்கள்.

உட்பொருள்

ராமானுசரே உபாயம். பேறும் அவரே என்றிருப்பவர்கள் எம்பெருமானார் திருநாமம் சொல்லி அநுபவித்தால் நாடு ஸுபிக்ஷமடையும் என்கிறார்கள்.

பாசுரம் 4

திருப்பாவை

எம்பெருமானையே பற்றி இருப்பார்க்கு தேவதைகள் தாங்களே இவர்கள் நியமித்ததைச் செய்வார்கள் என்கிறார்கள்.

உட்பொருள்

ஆசார்யாபிமானத்திலே ஒதுங்கி அர்ச்சிராதி மார்க்கமாகச் சென்று விரஜையாற்றில் நீராடும் பேறு பெற்று நாங்கள் மகிழ ஞான வறட்சி நீங்கி பகவத் குண மழை பொழிய வேணும் என்று யதிராஜரை வேண்டுகிறார்கள்.

பாசுரம் 5

திருப்பாவை

தூய உள்ளத்தராய் தாமோதரன் திருநாமம் செப்பினால் அனைத்துப்பாவங்களும் தீயிலிட்ட பஞ்சு போலே உருமாய்ந்து போகும்.

acharya.org

உட்பொருள்

எம்பெருமானார் திருநாமம் சொல்லவே அனைத்துப் பாவங்களும் அழிந்து போகும் என்கிறார்கள்.

பாசுரம் 6

திருப்பாவை

பகவதநுபவத்துக்குத் துணை தேட்டமாய் பெண்களை எழுப்புகிறார்கள். பகவதநுவத்துக்குப் புதியவளான ஒரு பெண்ணை பொழுது விடிந்தமைக்கு அடையாளம் கூறி எழுப்புகிறார்கள்.

அநுபவத்துக்குப் புதுமை:- அடியார் குழாத்தை நீக்கித் தனியே அநுபவிப்பது.

உட்பொருள்

திவ்ய தேசங்களில் ஆழங்கால்பட்ட எம்பெருமானாரை பொழுது விடிந்தமைக்கு அடையாளம் கூறி ஞானிகள் உணர்த்தினார்கள். விபரீத ஜ்ஞானத்தை நீக்கி பிறப்பிறப்புச் சுழலை திருவடியால் அழித்து பரம புருஷாநுபவமுடையவரும் முக்திக்கு காரணமான எம்பெருமானாரை மனதில் தியானித்துக் கொண்டு சிஷ்யர்கள் அவர் திருநாமம் சொல்லிக் கொண்டு வந்தனர். பள்ளி உணர வேண்டும் என்கிறார்கள்.

பாசுரம் 7

திருப்பாவை

க்ருஷ்ணாநுபவத்தின் சுவையறிந்திருந்தும் மறந்து கிடக்கும் இக் குழாத்திற்கு தலைவியாயிருக்கும் தகுதியுடைய ஒரு பெண்ணை எழுப்புகிறார்கள்.

acharya.org

உட்பொருள்

எம்பெருமானிடம் மயல் கொண்டவரும் குரு பரம்பரையில் நடுநாயகமாய் மிக்க ஒளிபடைத்தவரான யதிராஜர். ஞானமனுட்டானமுடைய சீடர்கள் சமதமாதி குணமுடையராய் ஆசார்யனிடம் வ்யாமோஹ முடையராய் தேவரீர் புகழ் பாடுகிறுர்கள். எழுந்திருக்க வேண்டும் என்கிறுர்கள் யதிராஜரை.

பாசுரம் 8

திருப்பாவை

எல்லோரும் வந்தழைக்கும்படி க்ருஷ்ணனிடம் செல்வாக்குடைய பெண்ணை விடிந்தமையை உணர்த்தி எழுப்புகிறுர்கள்.

உட்பொருள்

யதிராஜர் அவதாரத்தால் லீலா விபூதி ஞானம் பெற்றது. ஸம்ஸாரிகள் ஆத்மாநுபவமுடையராய்த் திரிகிறுர்கள். உன்னைக் கூவ அனைத்து வைணவரும் வந்தனர். சீடரே ! யதிராஜர் புகழ் பாட எழுந்திருங்கள்.

பாசுரம் 9

திருப்பாவை

கண்ணன் வந்தபோது வருகிறுன் என்று கவலையற்றுக் கிடக்கிற ஒரு பெண்ணை எழுப்புகிறுர்கள்.

உட்பொருள்

பரமஞானியாய் அழகிய மணவாளனை சேவித்துக் கொண்டிருக்கும் எம்பெருமானுரே! எழுந்திரும். பெரிய நம்பியை பகவந்நாம ஸங்கீர்த்தனம் பண்ண யதிராஜரை உணர்த்தும் என்றும் கூறுகிறுர்கள்.

acharya.org

பாசுரம் 10

திருப்பாவை

பெண்கள் கண்ணனிடத்தில் படும் பாடெல்லாம் கண்ணனை அநுபவிக்கும்படி செய்வாளொரு பெண்ணை எழுப்புகிறார்கள்.

உட்பொருள்

எம்பெருமானே உபாயமென்று உறுதி பூண்டு நல்வேதியர் குழாத்தின் இன்பம் அநுபவிக்கும் யதிராஜரே. நாராயணன் அவதாரமான தேவரீர் புருஷார்த்தமளிப்பவர். அஜ்ஞானம்மடிந்தது, பகவதநுபவத்தில் ஆழ்ந்தவரே ! உணர வேணுமென்கிறார்கள்.

பாசுரம் 11

திருப்பாவை

குலத்தாலும் ரூபத்தாலும் குணத்தாலும் உயர்ந்தவளாய் கண்ணனோடு ஒத்தவளாகிய ஒரு பெண்ணை எழுப்புகிறார்கள்.

உட்பொருள்

பஞ்சாசார்யரிடம் ஸகலார்த்தங்களையும் கேட்டு பரம பக்தியுடையவரும் பகவத் பாகவதாசார்யாபிமானமுடைய வருமான யதிராஜரே! அடியார்கள் நின் முற்றம் புகுந்து எம்பெருமான் திருநாமம் பாடுகிறார்கள். அசையாதே கிடவாது எழுந்திருக்கவேணும்.

பாசுரம் 12

திருப்பாவை

இராமனைப் பிரியாத இளைய பெருமாளைப் போலே கண்ணனைப் பிரியாதே அவனோடு தொடர்ந்து சென்று அடிமை

acharya.org

செய்யும் பேறு பெற்ற ஒருவனுடைய தங்கையை எழுப்புகிருர்கள்.

உட்பொருள்

முதலியாண்டானே! ஸம்ஸாரத்துக்கு வேர்பற்ருன பாவங்கள் அழிக்கவல்லவராய் மனத்துக்கினியவரான யதிராஜர் திருநாமம் கேட்டும் உறங்கலாமா? எழுந்திருக்க வேணும் என்கிருர்கள்.

பாசுரம் 13

திருப்பாவை

நமக்குக் கண்ணழகு உண்டாகில் கண்ணன்தானே வருகிருன் என்று கிடக்கிற ஒரு பெண்பிள்ளையை, பொழுது விடிந்தது க்ருஷ்ணநுபவம் பண்ண வா என்று அழைக்கிருர்கள்.

உட்பொருள்

ஆசார்யன் திருவடியில் கண் வைத்திருக்கும் ஶ்ரீவைஷ்ணவரே! பொழுது விடிந்தது. எம்பெருமானர் குணநுபவத்துக்கு வந்து விட்டார். எம்பெருமானர் பெருமை பாடி குள்ளக் குளிர ஆழ்ந்து அநுபவித்து எழுந்திரும் என்கிருர்கள்.

பாசுரம் 14

திருப்பாவை

இப்பெண்கள் திரளுக்கு எல்லாம் தலைவியாய், எல்லார்க்கும் முன்னே உணர்ந்து எல்லாரையும் எழுப்புவேன். என்று சொல்லி வைத்து அத்தை மறந்து வெட்கமின்றி உறங்கிக் கிடக்கிருள் ஒருத்தியை எழுப்புகிருர்கள்.

acharya.org

உட்பொருள்

எம்பெருமான் குணம் கூறும் திருவாய்மொழி அனுஸந்தானத்தால் நல்ஞானம் தலையெடுத்தது. ஸ்வாச்ரிதரான சிஷ்யர்களுக்கு ரஹஸ்யத்ரயஜ்ஞானமளிக்க ப்ரபந்நரான ஸ்ரீவைஷ்ணவர்கள் செல்கின்றனர். எங்களை விழிப்புறச் செய்ய அவதரித்த எம்பெருமானாரே திருவாய்மொழி அநுஸந்தானத்துக்கு உணர வேணும்.

பாசுரம் 15

திருப்பாவை

பெண்கள் அனைவருடைய திரள் காண வேண்டியிருப் பாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

உட்பொருள்

கூரத்தாழ்வானை ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் எழுப்ப திரண்டனர். எம்பெருமானார் பெருமை பாட உணர வேணும் என்கிறார்கள்.

பாசுரம் 16

திருப்பாவை

பெண்கள் அனைவரையும் எழுப்பி எல்லாரும் கூடி ஸ்ரீநந்தகோபர் திருமாளிகையிலே சென்று கோயில் காப்பானையும், திருவாசல் காப்பானையும் எழுப்புகிறார்கள்.

உட்பொருள்

குருபரம்பரையில் நடுநாயகமான எம்பெருமானாரே ! அடியோங்களுக்கு கைங்கர்யம் தருவதாக வராஹாவதாரத்தில கூறியுள்ளான். தேவருக்குத் திருப்பல்லாண்டு பாட வந்தோம் ரஹஸ்யத்ரயஜ்ஞானத்தால் ஸ்வரூபஜ்ஞானம் உண்டாக்க வேணும் என்று ப்ரார்த்திக்கிறார்கள்.

acharya.org

பாசுரம் 17

திருப்பாவை

அவர்கள் அனுமதியால் உள்ளே புக்கு நந்தகோபர் யசோதை, கண்ணன், நம்பி மூத்தபிரான் முதலானுரை எழுப்புகிருர்கள்.

உட்பொருள்

மோக்ஷமும் புகழ் முதலிய பலன்களும் அளிப்பவராய். உலகத்தைத் தன்னுடைமையாக்கி ஆசார்ய ஸிம்ஹாஸனத்தில் இருப்பவராய், ஆதிசேஷாவதாரமான தேவரீரும் அடியார்களுடன் உறங்காது உணர வேணும் என்று எம்பெருமானுரை வேண்டுகிறது.

பாசுரம் 18

திருப்பாவை

எழுப்பின விடத்திலும் கண்ணன் எழுந்திராமையால் புருஷகாரமான நப்பின்னைப்பிராட்டியை நந்தகோபாலன் மருமகளே! மணம் கமழும் கூந்தலுடையவளே உன் மைத்துனன் கண்ணன் பேர் பாட வளைக்கையால் வந்து திறக்க வேண்டும் என்கிருர்கள்.

உட்பொருள்

திருவாய் மொழி அநுஸந்தானத்தால் களிப்பவரும் பிற சமயத்தை விரட்டியவருமான எம்பெருமானுரை ஸ்ரீவைஷ்ணவர்கள் எதிர்பார்த்து நிற்கிருர்கள். உன் வகுத்தஸ்வாமியான எம்பெருமான் பேர் பாடவும் உபதேசமுத்ரையில் ஞானம் தலையெடுக்கவும் வந்து திறக்க வேணும் என்கிருர்கள்.

acharya.org

பாசுரம் 19

திருப்பாவை

நப்பின்னை திறக்கப் போக நம்முடையார்க்கு இவள் முற்படலாகாதென்று அவனைத் திறக்கவொட்டாதே கட்டிக் கொண்டு கிடக்கிற க்ருஷ்ணனை எழுப்பி, அங்கு மறுமாற்றம் காணாமையாலே மீளவும் அவனை உணர்த்துகைக்காக நப்பின்னையை எழுப்புகிறார்கள்.

உட்பொருள்

மென்மையான திருவாய்மொழி என்ற த்ராவிட வேதமும் வேதாந்த ஜ்ஞானமுமாகிய உபய வேதாந்தப்ரவர்த்தகரான யதிராஜரே! சிஷ்யர்களின் ஞானவைராக்யங்களில் வ்யாமோஹம் உடைய எம்பெருமானாரே! பரமபக்தி தலையெடுத்து எம்பெருமானை யோக நித்திரையில் நின்றும் உணர்த்த வேணும். இது உமது காரேய் கருணைக்குப் பொருந்தும் என்கிறார்கள்.

பாசுரம் 20

திருப்பாவை

அவனுக்கு வல்லபையாய் எங்களுக்குப் புருஷகாரமான நப்பின்னையே எங்களையும் கண்ணனையும் கூட நீராட்ட வேணும் என்கிறார்கள்.

உட்பொருள்

பெரிய பிராட்டியாரோடு ஒத்த யதிராசா! அஹங்காரமின்றியிலே பகவத்கைங்கர்யத்தைத் தந்து எங்களை பகவானையும் அநுபவிக்கும்படி செய்ய வேணும் என்கிறார்கள்.

acharya.org

பாசுரம் 21

திருப்பாவை

நப்பின்னைப் பிராட்டியும் நானும் உங்களில் ஒருத்திதானே. நாமெல்லாம் கூடி. கண்ணனிடம் வேண்டுவோம் வாருங்கள் என்ன, குணங்களிலே தோற்ருர் தோற்றபடியைச் சொல்லி எழுப்புகிருர்கள்.

உட்பொருள்

ஆளவந்தாரால் ஆமுதல்வன் என்று அபிமானிக்கப் பெற்றவரும், ஆழ்வான் ஆண்டான் வடுகநம்பி போன்ற பல சிஷ்ய சம்பத்தை உடைய எம்பெருமானுரே! ராமானுஜதிவாகரனுய்த் தோன்றியவரே! நாங்கள் உம்முடைய குணங்களுக்குத் தோற்று வந்தோம் என்று யதிராசரை எழுப்புகிருர்கள்.

பாசுரம் 22

திருப்பாவை

கீழே அபிமானம் அழிந்தது என்ருர்கள். இங்கு அநந்யார்ஹசேஷமாய் வந்தோம் உணர்த்த வேணுமாய் வந்தோம் உணர வேணும். கடாக்ஷிக்க வேணும் என்கிருர்கள்.

உட்பொருள்

அபிமான மற்று அநந்யார்ஹ சேஷராய் வந்தோம். தேவரீர் திருவுள்ளத்தாலும் கண்களாலும் எங்கள் வினைகள் அழியும்படி கடாக்ஷிக்க வேணுமென்கிருர்கள்.

பாசுரம் 23

திருப்பாவை

நான் வரவேண்டியிருக்க நீங்கள் ஆயாஸப்பட்டு வந்தீர்களே. என்று ஸாபராதனைப் போலே ஸமாதனம் பண்ணினன். உடனே நாங்கள் வந்த காரியத்தைக் கேட்டருள வேணுமென்கிருர்கள்.

acharya.org

உட்பொருள்

ஸ்வாமி எம்பெருமானுரே! யதிராஜ -ஸிம்ஹமாய்ப் புறப்பட்டு எழுந்தருளி சீரியதான ஆசார்ய ஸிம்ஹாஸனத்திலிருந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள வேணுமென்கிறுர்கள்.

பாசுரம் 24

திருப்பாவை

கண்ணன் அப்படியே செய்கிறோம் என்ன தாங்கள் வந்த காரியத்தை மறந்து இட்ட இட்ட அடிதோறும் பல்லாண்டு பாடுகிறுர்கள்.

உட்பொருள்

இவர்கள் ப்ரார்த்தனையைச் செய்வதாக திருவுள்ளம் பற்றிய எம்பெருமானுருக்கு இட்ட இட்ட அடிதோறும் பல்லாண்டு பாடுகிறுர்கள்.

பாசுரம் 25

திருப்பாவை

கண்ணன் உங்களுக்கு வேண்டுவது என்ன என்றுன். ஏதேனும் ப்ரதிபந்தகம் உண்டாளுலும் நீயே போக்கி எங்கள் துக்கம் போய் ஆனந்தமடையும்படி விஷயீகரிக்கவேணும் என்கிறுர்கள்.

உட்பொருள்

எங்கள் ப்ரதிபந்தகங்களைப் போக்கி தேவரீர் புருஷகாரமாயிருக்கையையும் விரோதி போக்கும் வீரசரிதமும் பாடி வந்த எங்களுக்கு எங்கள் துக்கம் தீர்ந்து அந்தமில் பேரின்பமும் தந்தருள வேணும் என்று எம்பெருமானுரை அர்த்திக்கிறுர்கள்.

acharya.org

பாசுரம் 26

திருப்பாவை

கண்ணன் உங்களுக்கு அபேக்ஷிதம் என்ன என்று வினவ நோன்புக்கு அங்கமானவற்றை வேண்டிக் கொள்கிறார்கள்.

உட்பொருள்

எம்பெருமானாரே! பகவதநுபவமாகிற எங்கள் நோன்புக்கு வேண்டிய அங்கமாக இருப்பவரே! ஆசார்யாபிமானம் காரியம் தலைக்கட்டுமல்லலவா? எம்பெருமானாரையே அங்கமாக வேண்டுகிறார்கள்.

பாசுரம் 27

திருப்பாவை

ப்ரஹ்மாநுபவமாகிற நீராட்டத்துக்கு உரிய நோன்பு நோற்றால் அவன் பக்கல் பெறக்கூடிய பேறு சொல்லுகிறார்கள்.

உட்பொருள்

ஆசார்யநுபவமாகிய நீராட்டத்திற்கு உரிய நோன்பு நோற்றால் எம்பெருமானாரிடம் பெறப் போகும் பேறுகள் இன்னதென்கிறார்கள்.

பாசுரம் 28

திருப்பாவை

நோன்பு எங்களுக்கு உத்தேச்யமன்று. அது உன் திருவடிகளில் கைங்கர்யமே என்று தங்கள் உத்தேச்யமான பேறு கிட்டுகைக்கு ஆகிஞ்சன்யத்தையும் சம்பந்தத்தையுமிட்டு நீயே உபாயமாக வேணும் என்கிறார்கள்.

acharya.org

உட்பொருள்

எங்களை ரக்ஷிக்க இருள் தருமாஞாலத்திலே வந்து அவதரித்த தேவரீரே பகவத் கைங்கர்யமாக புருஷார்த்த ஸித்திக்கு உபாயமாக வேணும் என்றுப் ப்ரார்த்திக்கிறார்கள்.

பாசுரம் 29

திருப்பாவை

தனக்கென்னுமது கைங்கர்யத்திற்குக்குறை. அது நீங்கப் பெற்று உனக்கே நாம் ஆட்செய்வோம் என்கிறார்கள்.

உட்பொருள்

தனக்கென்னுமதுகைங்கர்யத்துக்குக் குறை. அது நீங்கப் பெற்று தேவரீர் திருவடிகளில் கைங்கர்யம் செய்ய வேணுமென்று எம்பெருமானாரை ப்ரார்த்தனை பண்ணுகிறார்கள்.

பாசுரம் 30

திருப்பாவை

இப்பிரபந்தம் கற்றார் பிராட்டியாலும் எம்பெருமானாலும் ஸர்வகாலமும் உகக்கப்பட்டு இன்பமடைவார்கள் என்கிறது.

உட்பொருள்

ராமாநுஜவைபவத்தை உட்பொருளாகக் கொண்ட இப்பிரபந்தம் கற்றார் எம்பெருமானாராலும் பிராட்டியாலும் அபிமானிக்கப் பெற்று இன்புறுவர் என்கிறது.

acharya.org

ஸ்ரீ ஆண்டாள் அருளிய

திருப்பாவை [மூலம்]

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப்படிந்தேலோ ரெம்பாவாய். (1)

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை(ச்) சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

ஓங்கியுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப்போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

acharya.org

ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுட்புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வனுருவம்போல் மெய்கருத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூயபெரு நீர்யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம்செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில்
வெள்ளைவிளி சங்கின்பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழலாய்ச்சியர் மத்தினால்

acharya.org

ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ!
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். (7)

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்ருரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்ருேம் கோதுகலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப்பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் ருராய்ந்தருளேலோ ரெம்பாவாய். (8)

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை யெழுப்பீரோ? உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் பண்டொரு நாள்
கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

acharya.org

கற்றுக் கறவைக்கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழ நின்வாசற் கடைபற்றி
சினத்தினால் தெனனிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். (12)

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்!
குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே
பள்ளிக்கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்
செங்கல்பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்

acharya.org

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக்கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென்றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லை உன்கட்டுரைகள் ! பண்டே உன்வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதான் ஆயிடுக!
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாசல் காப்பானே! மணிக் கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பரமூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்
செம்பொற்கழலடிச்செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)

acharya.org

உந்துமதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர் மார்பா! வாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற்பெரும் பசுக்கள்
ஆற்றப்படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்

acharya.org

தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்து உன்னடி பணியுமாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்து நின்பள்ளிக் கட்டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்
அங்கணிரண் டும்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். (22)

மாரிமலை முழஞ்சில் மன்னிக்கிடந் துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில் நின்றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத் திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (23)

அன்றிவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப்பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். (24)

acharya.org

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெருமபறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய். (26)

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்துன் தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு

acharya.org

உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியரு ளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (29)

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப்பறை கொண்டவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத்தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள்
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய். (30)

acharya.org

|| श्रीः ||

பாசுரம் - 1

மார்கழித்திங்கள்

மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப்படிந்தேலோ ரெம்பாவாய். (1)

மார்கழி

இம்மாதம் வடமொழியில் (ஸம்ஸ்க்ருத) மார்கசீர்ஷம் எனப்படுகிறது. மார்க்கங்களில் தலைசிறந்தது எனப் பொருளாகும். மார்க்கம், உபாயம், நெறி எல்லாம் ஒன்றே. ஆக, தலை சிறந்த உபாயமான ப்ரபத்தி என்றாகிறது. அதாவது ஸ்ரீய: பதியான எம்பெருமானே உபாயம் என்கிற பொருளைக் காட்டுகின்றது.

திங்கள்மதி

சூரியன்போலல்லாது சந்திரன்போன்ற ஞானமென்றதால் மகிழ்ச்சியைத் தருவதாய் முயற்சியின்றே கிடைத்ததுமான அருளிச்செயல். தொண்டர்க்கமுதமாய் அகிலஜனங்களுக்கும் இன்பமாரியான திருவாய்மொழிஜ்ஞானம், ப்ரபத்தியே (இறைவனே) தலைசிறந்த உபாயம் என அறிவிக்கும்.

acharya.org

நிறைந்த

திருவாய்மொழியை மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் ஆகையாலும் மாறன் பணித்த மறை உணர்ந்த மெய்ஞ்ஞானி ஆகையாலும் எம்பெருமானார் திவ்யகடாக்ஷத்தாலே நிறைந்த

நன்னாள்

திருவரங்கனிணையடிகளில் அமர்ந்த அன்னமாய், மங்கையராளி பராங்குசமாமுனிவர் தாமரையடிகளில் தேனுண்ணும்வண்டாய், விட்டுசித்தர் முகக்கமலம் மலரவரும் கதிரவனாய், பரமாசார்யரான எம்பெருமானார் தனிப் பெருங்கருணையினால் திருவாய்மொழிஞானம் பெற்றநல்ல நாள்.

ஆல்

நம்மிடம் யாதொரு நன்மையும் இல்லாதிருக்க விலக்ஷணமான நாள்வாய்க்கப்பெற்றதே! என்ன ஆச்சரியம்.

நீராட

(1) சந்தங்களாயிரமும் அறியக்கற்று வல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே என்றும்

(2) இராமாநுசனைப்பணியும் நல்லோர் சீரினில் சென்று பணிந்தது என்றும் சொல்லுகிறபடியே, தமிழ் வேதமான திருவாய்மொழியில் எல்லை நிலமாகச் சொல்லப்பட்ட பாகவ தோத்தமரான அடியார் குழாங்களிலே இருந்து அநுபவம் செய்ய.

போதுவீர் போதுமினோ

போக ஆசையுடையீர்! முன்செல்லுங்கள் யதிராஜரைப் பற்றுகைக்கு ருசியே வேண்டுவது. எக்குற்றவாளர் எது பிறப்பு ஏதியல்வாக நின்றோர் ஆயினும் அக்குற்றம் அப்பிறப்பு

acharya.org

அவ்வியல்வே கொண்டு ஆட்கொள்ளும் இயல்புடையவர் எம்பெருமானார். ஆதலால் ருசியே வேண்டுவது.

நேரிழையீர்

அழகிய அணிகலனை உடையீர்! ஆத்ம குணங்களில் ப்ரதானம் சமமும் தமமும் என்கிற லோககுரு வசனப்படியே சமதமாதி குணங்களும் ஜ்ஞாநாநுஷ்டானங்களும் அணிகலன்களாக உடையீர்.

இவையிரண்டு முண்டானால் ஆசார்யன் கிட்டுவான் அல்லவா?

ஆசார்யஸம்பந்தத்தாலேயன்றோ ப்ராப்யபூமியான வைகுந்த மாநகர் கைப்புகுவது.

ஆக, ஆசார்ய கடாக்ஷத்துக்கு ஏதுவான சம தமாதிகளான அணிகலங்களை உடையீர்!

சீர்மல்கும்

ஆசார்யனுடைய கருணையும் க்ஷமையும் (பொறையும்) பொங்கிவழியும். காரேய் கருணையிராமாநுசா என்றும் பொருந்தியதேசும் பொறையும் திறலும் நல்ல திருந்திய ஞானமும் என்று அருளிச் செய்தாரல்லவா அமுதனார்!

ஆய்ப்பாடி

இடக்கை வலக்கை அறியாத இடையர் போலவும் கண்ணனல்லால் மற்றொரு தெய்வம் மதியாத இடையர் போலவும் ஞானமநுட்டானம் இல்லாதோம் என்றும் நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே என்றும் நைச்யம் கூறும் அமுதனார் ஆழ்வான் போல்வார் நிறைந்த மண்ணின் தலத்து.

செல்வச் சிறுமீர்காள்

(1) சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால் வாரிப் பருகும் இராமநுசனாகிய நிதிபடைத்தவராய்.

acharya.org

(2) சிறுமி (பரபுருஷசேஷமாகாதவள்) பிறர்கை பார்த்திருப்பவள். ஆதலால் நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே பொன்னரங்கமென்னில் மயலே பெருகுமிராநுசன் மன்னுமாமலர்த்தாள் அயரேன் என்றும் சொல்லுகிறபடியே அவனுக்கே உரிய அடியராய் அவன்கை பார்த்திருப்பவரான அடியார்களே.

கூர்வேல்

வேல் (கையிலே பிடிக்கும் ஆயுதம்) விரோதிகளை அழிக்கும். அதுபோன்று प्रतिकथकशिरो वज्रदण्डं त्रिदण्डं என்கிறபடியே எதிரிகளான வாதிகளின் மத்தகத்தைப் பிளக்கும் வஜ்ர தண்டம் போன்ற த்ரிதண்டம். சந்திரன் போல் முகம் என்றால் ஆகாயத்திலேயிருக்கும். வளரும் தேயும். அவையெல்லாமில்லையல்லவா? பார்ப்பவர் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருகிறது என்கிற பொதுப்பண்பைக் கொண்டு உவமிப்பது போல் விரோதிகளை அழிக்கை என்ற பொதுப் பண்பைக் கொண்டு வேல் முக்கோலுமாகும்.

கூரியவேல் போன்ற திவ்ய ஸூக்திகளை உடையவர், வேதாந்தசாரியர் எதிராஜ ஸப்ததியில்

उच्चाटनानि बहिरन्तरुपप्लवानां पथ्यानि घोरभवसंज्वरपीडितानां

என்று அருளியதை நோக்குக.

பஹிருபப்லவ : பாஹ்யமதம்,

அந்தருபப்லவ : குத்ருஷ்டிமதம்

எம்பெருமானருடைய திவ்யஸூக்திகள் புறம்பும் உள்ளுமிருக்கிற உபத்ரவங்களை விரட்டும் மந்திரம் போன்றவை.

acharya.org

கூறுமா குரு மதத்தொடோங்கிய குமரிலன் மதம் அவற்றின்மேல் கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட.

கொடுந்தொழிலன்

எதிரிகளை வாதத்தில் வெல்லும்போது தலையறுப் புண்டும் சாகேன் சத்தியம் காண்மினையா என்கிறபடியே கொடுந்தொழில் புரிவர்.

நந்தகோபன்

நந்தகோபன் எம்பெருமானை மகனாகப் பெற்றுத் தந்ததுபோல எம்பெருமானாரும் செல்வ நாராணனை மகனாகப் பெற்றுத்தந்தவர் .எடுத்த பேராளன் நந்தகோபனல்லவா? அதாவது கண்ணனாகிய நிதி பெற்றவன். எம்பெருமானாரும் நிதியினைப் பவளத்தூணை என்கிறபடியே எம்பெருமானை நிதியாகப் பெற்றவர்.

குமரன்

சிறுவன் - பெரியோர்களிடமும் குருவிடமும் விநயமாய் பரதந்த்ரனாயிருப்பவன். துரோணருக்கு ஏகலவ்யன் போலே பரமாசார்யரான ஆளவந்தாருக்குப் பரதந்த்ரராயிருப்பவர்.

ஏரார்ந்த கண்ணி

அழகு பொருந்திய ஞானமுடையவர் ஞானத்துக்கு அழகு பொருட்களை உள்ளது உள்ளபடி அறிவது. நல்ல திருந்திய ஞானமும் (இரா நூற். 32) ஸதாசார்யன் திருவடிகளைப் பற்றி குருகுல வாஸம் முதலியவற்றாலே அவனுக்கு முகமலர்த்தி

acharya.org

யுண்டாக்கி அவனால் உபதேசிக்கப்பட்ட தத்வ் ஹித புருஷார்த்தங்களைப் பற்றிய நல்ல ஞானம் உடையவர். இராமாநுசன் மெய்மதிக்கடலல்லவா!

யசோதை

(யசஸ் - புகழ் - யசோதா - புகழை அளிப்பவள்)

1. பொதுப் பண்பினால் வந்த உவமை

2. கண்ணன் வெண்ணெயுண்டானென்று உரலில் தாம்பாலே கட்ட அது அவனுக்கு தாமோதரன் என்று புகழும்படி பெருமையளித்தது.

3. இவ்வாத்மாவை நாம் நம்மதென்று களவுகாண தம்பக்தியென்னும் கயிற்றால் கட்டுண்ணபண்ணி 'நல்லார்' என்ற புகழைத் தருபவர்.

4. (இரா.நூற் 32) அமுதனார் பொறையும் திறலும் புகழும் சேரும் என்கிறார்.

புகழ் ; சமம் தமம் முதலிய ஆத்ம குணங்கள் அல்லது திசையனைத்தும் பரவிய புகழ்.

இளம் சிங்கம்

1. வாலிப மிடுக்குடைய சிங்கம்

2. வலிமிக்க சீயமிராமானுசன் என்பர் அமுதனார்.

3. முழுமையான ஞானமாகிய மிக்க பலத்தை உடையவர் ஸிம்ஹம்போலே எதிரியின் காட்சியும் பொறாதே அவர்களை முறியடிப்பவர்.

கார்மேனி.

மேனி. நன்னிலைமை. நல்லொழுக்கம். மழை

acharya.org

பொழியும் மேகத்தின் வண்மையை உடைய நல்லொழுக்கமுடையவர். மேகம் கைம்மாறு கருதாது மழை பொழிவது போலே பயன் கருதாது தன் பேறாக ஞான மழை பொழிபவர்.

செங்கண்

1. வாத்ஸல்யத்தாலே சிவந்த கண்களை உடையவர்.

குற்றங்களை போக்யமாக (நற்றமாக) கொண்டு தாமரைக் கண்களால் நோக்குபவர்.

கார்மேனி ... செங்கண்

என் செய்வினையாம் மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை ... இராமாநுசனை

கற்பகமே விழிகமலக் கண்ணழகும் .. இராமாநுசன்

கதிர்மதியம் போல் முகத்தான்

பாஹ்ய குத்ருஷ்டி மதங்களாகிய இருளைச் சிதறி ஓடவைக்கும் சூரியன் போன்ற முகமும் அடியார் குழாங்களாகிய கடல் உகக்கும் சந்திரன் போன்ற முகமும் உடையவர். जय मायिमतान्धकार भानो जयसंश्रित सिन्धुशीतभनो என்ற அநந்தாழ்வான் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தி இவண் நினைத்தற்குரியது.

இதன் பொருள் :—

மாயியான சங்கர மதமாகிய இருளுக்கு சூரியன் போன்றவரே! தன்னையே பற்றியிருக்கும் அடியார் கடல் பொங்கும்படிச் செய்யவல்ல சந்திரன் போன்றவரே.

दोषावमर्दनियतोऽत्रतिरोषधीशः
तापानुबन्धशमनः तपनः प्रजानां...

— रामानुजो जयति

(யதிராஜ ஸப்ததி 27)

acharya.org

இதன் பொருள்

இருளைப் போக்கிப் பரவும் சந்திரன். அதாவது தோஷத்தைப் போக்குவதில் உண்டான கோபமுடைய ஞானியான எதிராசர். ஆத்யாத்மிகாதி தாபங்களைப் போக்குபவர். சூரியன் போன்றவராக எதிராஜர் விளங்குகிறார்.

நாராயணனே

தேனார் கமலத் திருமாமகள் கொழுநன் தானே குருவாகித் தன்னருளால் மானிடர்க்காய் இந்நிலத்தே தோன்றுதலால் (ஞானஸாரம் - 38)

2. உபயவிபூதியையும் உடையவர்.

நமக்கே

நிகரின்றி நின்ற என் நீசதைக்கு நின் அருளின் கணன்றிப்புகலொன்றுமில்லை. அருட்கும்ஃதே புகல் (**இராமாநூற் - 48**) என்கிறபடியே எம்பெருமானார் கிருபையே புகலாக உடைய. ஈச்வரன் க்ருபை ஸ்வாதந்திரியம் கலசினது. எம்பெருமானார்க்ருபை பரதந்திரமானது.

பறைதருவான்

பகவதநுபவ - கைங்கர்யமாகிற பெரும் பயனைத் தருவார் பல்லுயிர்க்கும் விண்ணின் தலைநின்று வீடளிப்பான் (**இரா. நூற் - 95**). எம்மிராமாநுசன் என்கிறபடியே.

பாரோர் புகழ

நல்லவர் கொண்டாடும்படி. நல்லார் பரவுமிராமாநுசன் என்கிறார் அமுதனார்.

நல்லார் நவில் குருகூர் நகரான் என்கிறது திருவிருத்தம் நின்று தன் புகழேத்த அருளினான் என்று மதுரகவி,

பக்தாம்ருதம் .... சடகோப வாங்மயம் என்ற நாதமுனி போல்வரான நல்லவர்கள் புகழும்படி

படிந்து

ஆசார்யன் திருவடிகளிலே படிந்து.

acharya.org

பாசுரம் - 2

வையத்து வாழ்வீர்காள்

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை(ச்) சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

வையத்து வாழ்வீர்காள்

இருள்தரு மாஞாலத்துள் பிறந்து வைத்து ராமாநுசாய நம: என்று சொல்லும் பாக்யமும், முப்புரிநூலும் முன்கையில் திகழ்முக் கோலும் திருநாமமணிந்த நெற்றியும் பைந்துவராடை பதிந்த மருங்குமான எதிராசர் வடிவழகை சேவிக்கும் பாக்யமும் எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்கிற மன உறுதியும் எம்பெருமானார் திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமே பரம புருஷார்த்தம் என்கிற உணர்வும் பெற்று நல்வாழ்வு வாழப்பெற்ற பாக்யவான்களே!

பெண்பாலில் கூறியது பாரதந்தர்யத்தை அறிவிக்கைக்காக. ''என்ன வாழ்வு இன்று கூடியதே'' (28) என்பர் அமுதனார்.

நாமும்

பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்றச் சரணன்றி என்கிற படியே எம்பெருமானாரே ப்ராப்யமும் (பயன்) ப்ராபகமும் (உபாயம்) என்றிருக்கிற நாமும்.

acharya.org

நம்பாவைக்கு

வலிமிக்க சீயம் இராமாநுசன் இப்புவனத்தில் வந்தமைபோற்றுவனே என்றும் இராமாநுசன் குணம் சாற்றிடுமே என்றும் சொல்லுகிறபடியே எதிராசர் குணம் போற்றுதலாகிய நம்பாவைக்கு. பயன் கருதாது ஆசார்யன் புகழ் சாற்றுவதே சிஷ்யன் ஸ்வரூபம்.

செய்யும் கிரிசைகள்

1. எம் இராமாநுசன் மிக்க புண்ணியனே *(இரா. நூற். 91)*
2. புண்ணிய நோன்பு புரிந்துமிலேன் அடிபோற்றி செய்யும் நுண்ணருங் கேள்வி நுவன்றுமிலேன் ......

   இன்று நீ புகுந்து என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற இக்காரணம் கட்டுரையே *(இரா.நூற்.92)*
3. அகிஞ்சனராகிய நமக்கு எம்பெருமானாரே சித்தோபாயமாக இருப்பதால் நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லை.
4. உமது அநுபவத்துக்கு உரியசெயல்கள்

கேளீரோ

ஆசார்யரை மானிடர் என்றிருக்குமிவ்விருள் தருமாஞாலத்துள் ஆசார்யாபிமானமே உத்தாரகமாகக் கொண்டு ஆசார்யாநுபவம் பண்ணுகைக்கு இவ்வளவு பேர் உண்டாவதே என்று வியப்புற்றிருக்கிற அடியார்களைத் தன்பால் கவனத்தை ஈர்க்க, கேளீரோ என்கிறார்கள்.

பாற்கடலுள்

பாலே போல் சீர் என்கையாலே பால் போன்று இனியதான எம்பெருமானுடைய கல்யாணகுணக்கடலில்

acharya.org

பையத்துயின்ற

மெல்ல. அதாவது கவனம் சிதறாது இமையை மூடி அநுபவம் செய்கின்ற

ச்ருதி

प्राज्ञेनात्मना संपरिष्वक्तः बाह्यं किञ्चन न वेद

ஸர்வஜ்ஞனான பரமாத்மாவினாலே நன்கு தழுவப்பட்டவன் புறம்பே எதையும் அறியான் என்கிறபடியே உள்ளத்துள்வைத்து பரமாத்மாவை தியானிப்பவன் புறம்பே எதையும் அறியானென்றபடி கவனம் சிதறாது அநுபவிக்கின்ற

பரமன்

எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை நிலைநாட்டி, தாமும் அநுபவித்துப் பிறரையும் அநுபவிக்கச் செய்யும் பேருதவியாளர் ஆன எதிராசர்.

அடிபாடி

பல்கலையோர் தாம் மன்னவந்த இராமாநுசன் சரணாரவிந்தங்களை ஆர்வமுடன் பாடி

நெய்யுண்ணோம் பாலுண்ணோம்

போக்ய (இனிய) மான பொருள்களை விரும்பமாட்டோம்.

உன் சீரே உயிர்குயிராய் அடியேற்கு இன்று தித்திக்குமே **(இரா-நூற்-25)**

குறிப்பு : உன் சீரே எதிராசா உன்னுடைய வாத்ஸல்ய ஸௌசீல்ய காருண்யங்களாகிற குணங்களே உயிர்க்கு உயிராய் அடியேன் உயிரைத் தங்கவைக்குமதாய் தித்திக்குமே. இனிமையாய் இன்பம் தருமதாய் இருக்கும்.

ஆழ்வார்க்கு திருமால் திருநாமம் தேனும் பாலும் கன்னலும் அமுதுமாய்த் தித்தித்தாற் போலே எனக்கு எதிராசர் சீர் தித்தித்தது. ஆசார்யாபிமான நிஷ்டரான மதுரகவிகளுக்கு

acharya.org

தென்குருகூர் நம்பி திருநாமம் அண்ணிக்கும் அமுது ஊறிற்றல்லவா? ஆகவேதான் அமுதனார் செழுந்திரைப் பாற்கடல் கண்துயில் மாயன் திருவடிக்கீழ் விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநல்ஞானி இராமாநுசன் என்றார்.

இதன் பொருள்.

1. செழுந்திரைப்பாற்கடலில் கண்துயில்கின்ற மாயன் ஸர்வேச்வரன் திருவடிகளின் கீழ் வீழ்ந்திருப்பார் நெஞ்சில் பொருந்தி இருக்கும் ஜ்ஞானி இராமாநுசன்.
2. அன்றிக்கே எம்பெருமானுடைய பாலே போல் கல்யாண குணங்களை தியானிக்கின்ற ஆச்சரியமானவர் தன் திருவடிக்கீழ் வீழ்ந்திருப்பார் நெஞ்சில் போக்கியமாய் பொருந்தியிருக்கும் நல்ஞானி இராமாநுசன்.

நாட்காலே நீராடி

ஸாத்வீக குணங்கள் (ஞானம்) தலை எடுத்து தேவருடைய (எதிராசருடைய) கருணை முதலான குணங்களிலே ஆழங்கால்பட்டு அநுபவித்து.

மையிட்டெழுதோம்

மை கண்ணுக்கு அலங்காரமாய் பொருள்களை நன்கு காணவைப்பது போல தத்துவங்களை உள்ளபடி அறிகின்ற ஞானயோகத்திலே அந்வயிக்கமாட்டோம்.

மலரிட்டு நாமுடியோம்

மலர் போக்யமானது. பக்திபகவத்த்யானமாகையாலே போக்யமாக இருக்கும். ஆதலால் பக்தி யோகத்திலே அந்வயிக்க மாட்டோம். ''புண்ணிய நோன்பு புரிந்துமிலேன். அடிபோற்றி செய்யும் நுண்ணருங்கேள்வி நுவன்று மிலேன் ..... இராமாநுச ... எண் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற காரணம் கட்டுரையே'', என்கிற அமுதனார்வாக்கினை சிந்திக்கவும்.

acharya.org

செய்யாதன செய்யோம்

1. முன்னோர் செய்யாதவற்றைச் செய்யோம். ஆசார்யர்களனைவரும் முன்னாசரித்த ஆசாரந்தன்னை அறியாதார் என்றிராதே முன்னோர் ஆசரித்ததனையே செய்வோம்.

2. தேவரீர் (யதிராசர்) பகவான் போதாயனர் விரித்துச் சொன்னதையொட்டிக் கூறுகிறீரல்லவா.

தீக்குறளைச் சென்றோதோம்

பிறருக்குத் தீமைபயக்கும் சொற்களைச் சொல்லாதே ஊமையாக இருப்போம்.

ஐயமும் பிச்சையும்

பெரிதாகக் கொடுத்தலும் சிறிதாகக் கொடுத்தலும் பகவதநுபவமும் பாகவதாநுபவமும்

ஆந்தனையும் கைகாட்டி

அவர் அநுபவிக்குமளவாக. ஒன்றும் செய்யவில்லையே என்ற நினைவோடு யதாசக்தி செய்வித்து.

உய்யுமாறு

ஆன்மாவின் உய்வுக்கு உடலான 6 வார்த்தைகள்,

1. நானே பரம்பொருள்.
2. பேதமே தர்சனம்.
3. உபாயம் ப்ரபத்தி.
4. அந்திமகாலத்தில் எம்பெருமானை நினைக்க வேண்டாம்.
5. பெரிய நம்பியே ஆசார்யன்.
6. ப்ரபத்தி செய்த உடம்பின் முடிவில் மோக்ஷம் என்பவை.

எண்ணி உகந்து

நினைக்கும் போதே தித்திக்குமாகையாலே எண்ணி மகிழ்வோம்.

acharya.org

பாசுரம் - 3

திருப்பாவை

ஓங்கியுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூடு கயலுகள
பூங்குவளைப்போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

ஓங்கி

எம்பெருமான் வாமனனாய் வந்து மாவலியிடம் மூன்றடி மண் பெற்று த்ரிவிக்ரமனாய் உயர்ந்து. இராமாநுசரும் வாமனன் தானே? அது எப்படி? காண்மின்.

சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீறியநற் காமமுமென்றிவை நான்கென்பர். நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம் அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான் வாமனன் சீலன் இராமாநுசன் இந்தமண் மிசையே. (இராமா. நூற். 40)

இச்சேதனனிடம் எதையும் எதிர்பாராதே தாமே வந்து உதவுகைக்கு ஸ்ரீவாமனனுக்கு நிகரானவர். ஸ்ரீவாமனா வதாரத்தில் யாருடைய பிரார்த்தனையும் எதிர்பாராது தானே வஸிஷ்டன், சண்டாளன் என்ற பாகுபாடில்லாது அனைவருடைய தலைகளிலேயும் திருவடிகளை வைத்தாற்போலே,

निदिध्यासितव्यः *(நிதித்யாஸிதவ்ய:) என்று வேதாந்த சாஸ்த்திரத்திலே சொல்லப்பட்டதாய் ப்ரீதி ரூபமான பகவத்*

acharya.org

பக்தியை (காமம்) ஸ்ரீபாஷ்ய வேதாந்தஸார வேதாந்த தீபம் என்று மூன்று நூல்கள் வாயிலாக அருளிச்செய்கையாலும், உலகத்தார் அனைவர்க்கும் இறை அனுபவத்திலே ருசி பிறக்கும்படி அவர்களுடைய தகுதியைப்பாராதே உபதேசிக் கையாலும், ஒருதேசவிசேஷமான பரமபதத்திலே சென்று பெற வேண்டும்படி இருக்கிற இவ்வர்த்தத்தை இங்கேயே அருளிச்செய்தாராகையாலும் வாமனனோடு ஒத்தவர்.

உலகளந்த

அளந்த-அளவு செய்த. தனக்கு உடைமையாக்கிக் கொண்ட. நெல்லை அளந்தாயா என்றால் ஸ்வாதீனப் படுத்திக் கொண்டாயா என்றுதானே பொருளாகும்.

உத்தமன்

அதமன் - தனக்காகவே வாழ்பவன்.
மத்யமன் - தனக்கும் பிறர்க்குமாக வாழ்பவன்.
உத்தமன் - தன்னை அழித்தாவது பிறர்காரியம் செய்யுமவன்.

எம்பெருமானார் தாம் நரகம் புகிலும் பிறரை உஜ்ஜீவிப்பிக்கைக்காக ரஹஸ்யார்த்தங்களை எல்லாம் ஆசையுடையோர்க்குத் தந்தவரல்லவா?

பேர்பாடி

திருநாமத்தை ஆர்வமுடன்பாடி, இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ நெஞ்சே! சொல்லுவோம். என்கிறபடியே பாடி.

गुरो नाम सदा जपेत् (குரோர் நாம ஸதா ஜபேத்) என்கிறதே!

நாங்கள்

எம்பெருமானார் திருவடிகளே சரணமென்றிருக்கிற நாங்கள்

acharya.org

நம்பாவைக்குச் சாற்றி

நோன்பு என்றொருவ்யாஜத்தால் நோன்பு: இராமாநுசன் குணம் சாற்றிடுமே (இரா. நூற்.97) என்கிறபடியே குணம் போற்றுதல்.

நீராடினால்

எம்பெருமானாரின் கருணா குணாநுபவமும் திருமேனி அநுபவமும் செய்தால்.

தீங்கின்றி

மற்றை தேவதைகளிடம் பற்று, தன் முயற்சியாகிற உபாயாந்தரங்களில் பற்று முதலிய தோஷங்கள் நீங்கி. கலியும் கெடும் கண்டு கொண்மின் என்கிறபடியே அறம் சீறும் உறு கலியைப் போக்கும் இராமாநுசன் திருநாமத்தால் கலிதோஷம் நீங்கி

நாடெல்லாம் - நாடு முழுவதும்

திங்கள் மும்மாரி பெய்து

திங்கள் சந்திரன். சந்திரன் தெளிவாய் மகிழ்ச்சியைத் தருவது போல பேதச்ருதி, அபேதச்ருதி, கடகச்ருதி மூன்றையும் ஸமந்வயம் செய்து மழை எனப்பெய்த விசிஷ்டாத்வைத ஜ்ஞானத்தை உபதேசித்து,

शुध्दानन्द अभिवर्षुकवारिदा .... यतीश्वरसूक्तयः।

(யதிராஜஸப்ததி.47.)

மேகம் ஜலத்தை பொழியுமாபோலே சுத்தமான ப்ரஹ்மாநந்தத்தைப் பொழிபவை யதிராஜருடைய திவ்ய ஸூக்திகள்.

சித், அசித், ஈச்வரன் என்கிற தத்வத்ரய ஜ்ஞானத்தை மழை எனப் பொழிந்து, மழை தாபத்ரயத்தைப் போக்குகிறது. பயிரை விளைவிக்கிறது. அது போல ச்ருதியின் பயத்தைப்

acharya.org

போக்குகிறது. வேதமார்க்கத்தை நிலைநிறுத்தி ஆனந்தத்தை உண்டாக்குகிறது.

ஓங்கு பெருஞ் செந்நெல்

நெல்-உமி தவிடு கூடிய நெல் போல ஸ்தூல ஸூக்ஷ்ம உடலை உடைய பத்தாத்மா

செந்நெல் - பழுத்து முதிர்ந்த நெல்

ज्ञानीतु आत्मैव मे मतम् என்கிற படியே முதிர்ந்த ஜ்ஞானமுடையவன்.

ஞானம்-ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு.

முதிர்ந்த ஞானம்.

> மாடும் மனையும் கிளையும் மறை முனிவர்.
> தேடுமுயர்வீடும் செந்நெறியும் - பீடுடைய
> எட்டெழுத்தும் தந்தவனே......... (ஞான ஸாரம் . 30)

என்கிறபடியே மந்திரமீந்த ஆசார்யனையே எல்லாமாக நோக்குமுணர்வு.

பெருஞ்செந்நெல்

அநுஷ்டானத்தினால் நிறம் பெற்ற ஞானமுடைய எம்பார் வடுக நம்பி போல்வார்

ஓங்கு பெருஞ்செந்நெல்

அந்தமில்பேரின்பமான பரமாகாசத்தை நோக்கி உயர்ந்து மாகவைகுந்தம் காண்பதற்கு ஏகமெண்ணும் என்கிறபடியே.

எம்பெருமானை அடைய த்வரை கொண்டு உயர்ந்து இருக்குமவர்களைச் சொல்லுகிறது.

ஊடு

இவர்கள் நடுவே.

acharya.org

கயல்

நீரைப்பிரிந்தால் உயிர்வாழ மாட்டாத மீன்போலே எம்பெருமானாரைப் பிரிந்தால் வாழ மாட்டாதே, எம்பெருமானாருடைய குணங்களையே உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலையாகக் கொண்டு வாழும் சீடர்கள்.

கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் உன்தன்
மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் நிரயத்
தொய்யில் கிடக்கிலும் சோதி விண் சேரிலும் இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன் இராமாநுச என் செழுங் கொண்டலே.

(இராமாநுச நூற்றந்தாதி. 104)

மெய்யில்- திருமேனியில் பிறங்கிய- விளங்குகிற

சீர்-குணங்கள் வடிவழகு தொய்யில்- மாயவன் சேற்றள்ளலான ஸம்ஸாரத்திலும்.

உகள

உளமிகுந்த மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தாட அசைக்க முடியாத புறச்சமயங்களை வேரோடே அறுப்பாரைப் போலே எங்கும் வைஷ்ணவர்களேயாய் எம்பெருமானுடைய குணங்களை அநுபவித்து அத்தால் உண்டான மகிழ்ச்சியால் களித்துத் திரியா நின்றார்கள் என்று.

இடங்கொள் சமயத்தையெல்லாம் எடுத்துக் களைவன
போலே
தடங்கடல் பள்ளிப் பெருமான்தன்னுடைப் பூதங்களேயாய்
கிடந்து மிருந்து மெழுந்தும் கீதம் பல பல பாடி
நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய்கின்றனவே.

(திருவாய்மொழி 5-2-4)

என்று கூறியது போல் எம்பெருமான் உகந்தருளின

acharya.org

நிலங்களிலே இருக்குமவர்கள். ராமாநுச தர்சனத்திலே உள்ளவர்கள் எங்கும் துள்ளிக் குதித்தனர்.

பூங்குவளைப் போதில்

மாறனடிபணிந்து உய்ந்தவராகையாலே நம்மாழ்வாருடைய திருவடித்தாமரையில்.

பொறி வண்டு

அழகிய வண்டு. இங்கு எம்பெருமானார்.

கண்படுப்ப

தாமரைக்கண்களால் கடாக்ஷிக்க

श्रीमत्परांकुशपदांबुजभृंगराजं *(யதிராஜவிம்சதி - 2)*

குறிப்பு:

ஸ்ரீமத் — கைங்கர்யத்தில் ஆர்வமாகிற சொரூபத்துக்குத் தக்கதான செல்வமுடையவராய்

பராங்குச — பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸிக்க வல்லவரான நம்மாழ்வாருடைய

பதாம்புஜ — திருவடித்தாமரைகளின் மதுவைப் பருகி மதம் கொண்டு சுழன்றுதிரிகிற

ப்ருங்கராஜம் — சிறந்த வண்டாய். இத்தால் வண்டு தாமரையில் மது உண்டு தன் குறை தீர்ந்ததாக இல்லாது மதுபாநத்தால் மதம் கொண்டு சுழன்றுதிரியுமாபோலே எம்பெருமானாரும் மாறனடி பணிந்து கவியமுதுண்டு களித்து குமதிகளை மதியாதே பூவுலகமெங்கும் விஜய யாத்திரை செய்து உலாவுமவர். வண்டுக்கு மது உயிர்வாழவைக்கும் உணவு. இவருக்கு ஆழ்வார் திருவடிகள். ஆசார்யாதீனமிறே சிஷ்யன் உஜ்ஜீவனம். சிஷ்யன் எம்பெருமானிடமிழிவதும் ஆசார்யன் உகந்த விஷயமென்றல்லவா?

acharya.org

தேங்காதே

புறம்புண்டான பற்றுக்களில் வாசனையும் அவைஷ்ண
ஸஹவாஸமும் தானென்ற அபிமானமும் மனம் கலங்க
வைக்கும். அதில் இழியாமல் .

புக்கிருந்து

முன்னோர்களின் ஞானம் உரை அநுட்டானங்களை நிதி
போல் பெறுகைக்காக ஆசார்யன் திருவடியில் புக்கிருந்து.

சீர்த்தமுலை

பால்சீறி வரும் முலைகள். வெள்ளம் போல் பாய்ந்து வருகின்ற கல்யாண குணங்களையுடையவர் திருவடிகளை. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு தாயின் முலை உயிர் கொடுக்கும். ப்ரபன்னனுக்கு எம்பெருமான் திருவடிகள் உயிர் தரிக்க வைக்கும். ஆசார்யாபிமானம் பெற்ற சரமபர்வ நிஷ்டனுக்கு ஆசார்யன் திருவடிகள் உயிர் தரிக்க வைக்கும்.

பற்றி வாங்க

உபாயமாகப் பற்றிப் பெற

குடம் நிறைக்கும்

சிஷ்யர்களுடைய உள்ளத்தை பகவத் குணங்களாலே நிறைக்கும்

வள்ளல் பெறும் பசுக்கள்

ஆசார்யனும் சந்ததியும்.

பசுக்கள் — தாம் அஸாரமான புற்களை மேய்ந்து நீரைப் பருகி பிறர்க்குப் பாலையே கொடுக்கும்

ஆசார்யர்கள் — அஸாரமாயும், அல்பஸாரமாயும், ஸாரமாயும், ஸாரதரமாகவுமுள்ள சாஸ்த்ரங்களை ஆராய்ந்து சிஷ்யனுக்கு ஸாரதமமான அர்த்தத்தைக் கொடுப்பார்கள்.

acharya.org

பசுக்கள் — உடல் சுத்திக்கு பஞ்சகவ்யமளிக்கின்றன.

ஆசார்யர்கள் — ஆத்ம சுத்திக்கு அர்த்தபஞ்சக ஜ்ஞானத்தைக் கொடுப்பார்கள்.

பசுக்கள் — உடம்பில் எல்லா உலகங்களும் எல்லா தேவதைகளும் நிறைந்திருக்கும்.

உபயவிபூதிநாதன் ஸ்ரீய: பதியான நாராயணன் ஆழ்வாருடைய ஒவ்வொரு அவயவத்தில் வ்யாமோஹம் கொண்டிருப்பது போல் ஆசார்யர்களிடத்தும் வ்யாமோஹம் கொண்டிருப்பான்.

பசுக்கள் — பால் கறவாத போது குமுறிக்குமுறி அழும்.

ஆசார்யர்களும் — ஞானப்பால் சுரந்து சிஷ்யர்களுக்கு கொடுப்பதே தாரகமாகக் கொண்டிருப்பவர்கள்.

பசுக்கள் — கன்றிற்கும், கறப்பவர்களுக்கும், பிறர்க்கும் பால் சுரக்கும்.

ஆசார்யர்கள் — தன் சிஷ்யனுக்கும் மைத்ரேயாதிகளைப் போல கேட்பவர்க்கும், பிறர்க்கும் ஞானப்பால் அளிப்பவர்கள்.

பசுக்கள் — கறப்பவர்க்குப் பாலை முழுவதும் தந்து விடாமல் கன்றுகளுக்கு ஒளித்து வைக்கும்.

ஆசார்யர்கள் — ஸம்ஸாரிகளுக்கு ஞானத்தை உபதேசியாமல் தன் சிஷ்யனுக்குத் தனிமையிலே ஏகாந்தமாக ஞானத்தை உபதேசிப்பார்கள்.

பசுக்கள் — கட்டுத்தறியில் கட்டுண்டு இருக்கும்.

ஆசார்யர்கள் — ஸம்ஸாரத்தில் கட்டுண்டு இருப்பார்கள்.

நம்மாழ்வார் போன்று இருந்த இடத்திலேயே உபதேசிக்கும் ஆசார்யர்கள் பசுக்கள் எனப்படுவர்.

சிஷ்யனைத் தேடிச்சென்று உபதேசத்தால் வாழ்விக்கும் மணக்கால் நம்பி போல்வார் பெரும்பசுக்கள் எனப்படுவர். பெருமையுடைய பசுக்கள் பெரும்பசுக்கள். சிஷ்யன் வரவு

acharya.org

பாராதே முலைக்கடுப்பாலே பாலைப்பீச்சுவதுப்போலே சொல்லியல்லது தரிக்கமாட்டாதே ஆசார்யன் நியமனத்தால் சிஷ்யனைத் தேடிச்சென்று உபதேசித்தல் பெருமையல்லவா?

வள்ளல் பெரும் பசுக்கள்

1. கட்டவும் அடிக்கவுமாம்படி தம்மையே கொடுக்கும் பசுக்கள்

2. பிறர்க்காகத் தன்னை அழிய மாறியும் பிறர்நலனையே கருதி ஆசையுடையோர்க்கெல்லாம் கூறும் என்று பேசி வரம் பறுத்த குணம் திகழ் கொண்டலாகிய எம்பெருமானார் போல்வாரான ஆசார்யர்கள். மாமுனிகள் போல்வார்.

செல்வம்

இராமாநுசன் என்தன் மாநிதியே என்கிறபடியே ஆசார்யர்களான செல்வம்.

நீங்காத

நிலையாக நிறைந்து .

பாசுரம் - 4

திருப்பாவை

ஆழிமழைக் கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுட்புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வனுருவம்போல் மெய்கருத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

acharya.org

ஆழிமழைக்கண்ணா

எம்பெருமானுடைய கல்யாணகுணக்கடலில் இருந்து அவற்றை மழையாகப் பொழிகின்ற எம்பெருமானாராகிய மேகமே!

குணக்கடல்

स्वाभाविक-अनवधिकातिशय-ज्ञानबलैश्वर्य वीर्यशक्तितेजस्
- सौशील्य वात्सल्य - मार्दव आर्जव -
सौहार्दसाम्यकारुण्य-माधुर्यगांभीर्य
औदार्य चातुर्यस्थैर्य धैर्य-शौर्यपराक्रम सत्यकाम
सत्यसंकल्प कृतित्वकृतज्ञताद्यसंख्येय
कल्यणगुणगणौघमहार्णव ।

என்கிற எம்பெருமானார் கத்ய ஸூக்திகளைக் காண்மின்.

மேகம்

நீர், தரை என்ற பாகுபாடில்லாது எங்கும் மழை பொழியும்.

எம்பெருமானாரும் பெய்யுமாமுகில் போல் இருந்தவிடம் தேடிவந்து குணங்களை மழை எனப்பொழிபவர்.

அமுதனார் ''குணம் திகழ்கொண்டல்'' மற்றும் ''கொண்டலனையவண்மை ...... இராமானுசன்'' என்கிறார்.

ஆண்டாள் மாமுத்தநிதிசொரியும் மாமுகில் என்கிறாள்.

தீங்கேதுமில்லாமல் அனைவரும் வாழும்படி பகவத் குணமுத்துக்களைப் பொழியும் மேகமல்லவா எம்பெருமானார்!

ஒன்று நீகைகரவேல்

அதிகாரியின் தகுதியோ தகுதியின்மையோ பாராது ஞானத்தை - குணத்தை ஒளிக்காது வர்ஷிக்கவேண்டும்.

acharya.org

அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ?
அதிகாரமில்லாதார்க்கன்றோ - எதிராசா
நீ இரங்கவேண்டுவது - என்று மாமுனிகள்
அருளிச் செய்திருப்பது காண்க. (ஆர்த்தி - 14)
என்னைப்போல் பிழைசெய்வார் இவ்வுலகில் உண்டோ
உன்னைப் போல் பொறுக்கா வல்லாரு ண்டோ!
அனைத்துலகும்
வாழப்பிறந்த எதிராச மாமுனிவா!
ஏழைக்கிரங்காயினி. (ஆர்த்தி-41)

என்கிறபடியே வரையாது அருள்புரியும் சுபாவமுடைய தேவரீர்.

முன்னோர்கள் ஓராண் வழியாய் உபதேசித்தார் என்கிறபடியே முன்னோர் மறைத்துப்போந்த அர்த்தங்களை ஏராரின்னருளால் பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் கூறுமென்கிறபடியே ஒன்றும் ஒளித்திடாமல் அருளவேணும்.

ஆழியுள்புக்கு

உபநிடதக்கடலில் உட்புகுந்து நடுவே

முகந்து கொடு

ஒன்றும்விடாமல் எல்லாக்குணங்களையும் முகந்து எடுத்து.
उपनिपत् दुग्धाब्धिमध्योद्धृतां என்கிறப்போலே.

ஆர்த்து ஏறி

வலிமிக்க சீயமாய் பெருமுழக்கத்தோடு மூன்று வேதங்களையும் ரக்ஷிக்கத் தொடங்கும் போது சீரியஸிம்ஹாஸனத்திலேறி.

acharya.org

ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து

ப்ரளயத்தில் எல்லாமழிந்தபோது தான் ஒருவனுமே இருந்து கரணகளேபரங்களை இழந்து கிடக்கும் ஆத்மஸமூஹத்தைக் கண்டு கருணையால் விளங்கும் எம்பெருமானுடைய திருமேனி போலே ஸம்ஸாரமாகிற ப்ரளயத்தில் அகப்பட்டு நலிவுறும் சேதனரைத்திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கும்போது கருணை நிறைந்த திருமேனியுடையராய்

பாழியந்தோளுடைப் பத்பநாபன் கையில் ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து

யதிராஜ ஸப்ததியில், (12) எம்பெருமானாரே பஞ்சாயுதங்களின் அவதாரமானவர் என்கிறார்.

प्रथयन् विमतेषु तीक्ष्णभावं प्रभुरस्मत्परिरक्षणे यतीन्द्रः ।
अपृथक् - प्रतिपन्न - यन्मयत्वैः ववृधे पञ्चभिरायुधैर्मुरारेः ॥

எம்பெருமான் தன் எதிரியிடம் கொடுமையைக் காட்டுவது போலே யதிராசர் தன் எதிரிகளான குத்ருஷ்டிகளிடமும் புறச்சமயிகளிடமும் கொடுமையைக் காட்டி நம் அனைவரையும் ரக்ஷிப்பதில் பாலும் நீரும் போலே உடையவர்வேறு தாங்கள் வேறு என்று தெரியாதபடி பஞ்சாயுதங்களாக ஆனார் என்று இதன் பொருள்.
அமுதனாரும்,

அடையார்கமலத்தலர்மகள் கேள்வன் கையாழி யென்னும்
படையொடு நாந்தகமும் படர்தண்டும் ஒண் சார்ங்க
வில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற் கென்று
இடையே இராமாநுசமுனியாயின இந்நிலத்தே. (இரா.நூற்.33)
என்ற பாசுரத்தில்

acharya.org

எம்பெருமானார் பஞ்சாயுதங்களின் அவதாரமென்கிறார். ஆகையால் திருவாழிபோலே எதிரிகளை அழித்தும் திருச்சங்கு போலே நல் ஞானமளித்தும், (த்ருவனுக்கு ஞானமளித்தது சங்கு அல்லவா) எதிரிகளை நடுங்கச் செய்தும்.

தாழாதே

பலமளிப்பதில் கால தாமதம் செய்யாமல் எம்பெருமானை விட எம்பெருமானார் அருள் சடக்கெனப் பலிக்குமாகை யாலே தாழாதே என்கிறார்.

எம்பெருமானார் அளித்த சாலைக் கிணற்றுத் தீர்த்தத்தை அமுது செய்து அத்திகிரிக்கொண்டலான பேரருளாளன் உரிய காலத்தில் வேண்டியதிலும் அதிகமாகப் பொழிகிறான் என்கிறார் வேதாந்தசாரியர் (**யதி. ஸப். 62**)

சார்ங்க முதைத்த சரமழைபோல்

சார்ங்கம் - வில்

அகமும்புறமுமான இந்திரியங்களை அடக்கியதால் உண்டான

சரம் - அம்பு

தாமரையாள் கேள்வன் ஒருவனையேநோக்குமுணர்வு என்கிற ஞானமும்

மழை: ஞானத்தின் பயனாகிய சேஷசேஷி (அடியான் - தலைவன்) என்ற முறையையும் உணர்த்தி.

வாழ

வாழ்ச்சி நின்தாளிணைக்கீழ் என்று எம்பெருமான் விஷயத்தில் நம்மாழ்வார் அருளிச் செய்ததுபோல யதிராசனாகிய தேவரீர் திருவடிக்கீழ் வாழும்படி.

acharya.org

உலகினில் பெய்திடாய்

இருள் தருமாஞாலம் ஞானவறட்சி நீங்கி ஞானம் தழைத்திடும்படி பெய்யவேணும்.

நாங்களும்

ஆசார்யாநுபவமே உயிராக எண்ணி கைங்கர்ய நிரதரான நாங்களும்.

மார்கழி நீராட

1. ஸத்வம் தலையெடுத்த காலத்திலே பகவதநுபவம் பண்ண

2. உபாயங்களில் தலைசிறந்த உபாயமான ஆசார்யாபிமானத்திலே நின்று சிறந்த மார்க்கமான அர்ச்சிராதி மார்க்கத்தாலே சென்று விரஜை ஆற்றில் நீராட.

மகிழ்ந்து

அந்தமில் பேரின்பமடைந்து மகிழ்வுற்றுவாழ.

குறிப்பு.

அர்ச்சாவதாரமே ஆஶ்ரயிக்கவேண்டியதாகையாலே.

பல அர்ச்சாஸ்தலங்கள் தொனிப்பொருளாக விட்டுசித்தன் கோதை பாடலில் அமைந்துள்ளன.

கண்ணு	திருக்கண்ணபுரம் சௌரிப்பெருமாள்
ஊழிமுதல்வன்	ஸ்ரீ வில்லிபுத்தூர் வடபத்ரசாயி
பாழியந்தோளுடை	திருமாலிருஞ்சோலை அழகன்
பற்ப நாபன்	திருவனந்தபரம்
ஆழிபோல்மின்னி	குடந்தை சக்ரபாணி
வலம்புரி போல்	கும்பகோணம் - சார்ங்கபாணி

acharya.org

பாசுரம் - 5
திருப்பாவை

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூயபெரு நீர்யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம்செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

மாயனை ஆச்சரியமான செயல்களை உடையவரை

பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ்கொண்டு புன்மையினேனிடத்தான்புகுந்து
தீர்த்தான் இருவினை தீர்த்து அரங்கன் செய்ய தாளிணையோடு
ஆர்த்தான் இவை எம்மிராமாநுசன் செய்யுமற்புதமே.
(இராமா.நூற். 52)

அறு சமயங்களும் நடுங்கும்படி கண்டார். தம்புகழால் பூமியெங்கும் மூடினார். மிகவும் அற்பனான என்னிடத்தில் தன் தனிப்பெருங்கருணையினாலே தானே புகுந்து காலமெல்லாம அநுபவித்தாலும் தொலையாத பெரும் பாவங்களைப் போக்கினார். பாபங்களைப் போக்கி பெரிய பெருமாளுடைய திருவடிகளிலே சேர்த்தார். இவை எம்பெருமானார் செய்த ஆச்சரியங்கள் என்று இதன் கருத்து.

1. மைந்தனை - ராஜாவை - யதிராஜரை - மிடுக்குடையவனை

सत्यं सत्यं पुनस्सत्यं यतिराजो जगत्गुरुः ।
स एव सर्वलोकानां उद्धर्ता नास्ति संशयः ॥

acharya.org

இதன் பொருள்:

உண்மை உண்மை உண்மை யதிராஜரே ஜகத்குரு. அவரே அகில உலகங்களையும் வாழ்விக்கப் போகிறார். இதில் ஐயமில்லை.

வலிமிக்க சீயம் இராமாநுசன் என்கிறபடி எம்பெருமானார் மிக்க வலிமையுடையவர்.

வடமதுரை மன்னு

1. *வடமதுரையைச்சொன்னது மற்ற திவ்ய தேசங்களையும் சொன்னதாகும்.*
2. *வடமதுரையைச் சொன்னது பகவத் ஸம்பந்தம் மாறாத தலம் என்று அறிவிக்கைக்காக.*
3. *நம்மாழ்வார் கொண்டாடின தலம்.*

"மல்லை முதூர் வடமதுரைப்பிறந்தவன் வண் புகழே".

"கண்ணனல்லாலில்லை கண்டீர் சரண் அது நிற்கவந்து மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்",

ஆகதிவ்யதேசம்தோறும் மனம் பொருந்தியிருப்பவர் யதிராசர்

மாமலராள் புணர்ந்தபொன்மார்வன் பொருந்தும்
பதிதொறும்புக்குநிற்கும் குணம் திகழ்
கொண்டலிராமாநுசன் *(இரா. நூற். 60)*

श्रीरंगं करिशैलमञ्जनगिरिं ताक्ष्याद्रिसिंहाचलौ
श्रीकूर्मं पुरुषोत्तमं च बदरीनारायणं नैमिशं
श्रीमत् द्वारवती प्रयागमधुरायोध्यागयाः पुष्करं
सालग्रामगिरिं निषेव्य रमते रामानुजोऽयं मुनिः ॥

என்னும் ச்லோகமும் காண்மின்.

acharya.org

தூய பெருநீர்யமுனைத்துறைவனை

யமுனைத்துறைவன் - ஆளவந்தார்.

विगाहे यामुनं तीर्थं साधुबृन्दावने स्थितं ।
निरस्तजिह्मगस्पर्शे यत्र कृष्णः कृतादरः ॥ (யதிராஜஸப்ததி - 8)

ஸாதுக்களான கோபாலர் வசிக்கும் ப்ருந்தாவனத்தில் உள்ளது.

யமுனைத் துறை

ஆளவந்தார், பெரிய நம்பி முதலான ஸாதுக்களின் குழாத்தை ரக்ஷிப்பதில் நிலையாயிருப்பவர் .

யமுனைத்துறை காளியன்ஸ்பரிசம் போனதால் கண்ணன் ஆதரித்தது.

ஆளவந்தார், ராகம் மதம் முதலிய தோஷ ஸம்பந்தமில்லாமையாலே கண்ணனாலே ஆதரிக்கப்பெற்றவர்.

தூய்நெறிசேர் எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம் கதிபெற்றுடைய இராமாநுசன். (**இரா . நூற் 21**) தூய்நெறிசேர் - மற்ற உபாயங்கள் சுத்தியில்லாதவை.பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்கு விருத்தமானவை. அஹங்காரத்தைக் கொண்டவை.

தன்னுடைய பாரதந்திரியத்திற்கு ஏற்ப ஸம்ஸாரபந்தம், மோக்ஷம் இரண்டுக்கும் பொதுவான பகவானைப் பற்றாமல் ஸதாசார்யனைப் பற்றி அதுவும் பரமாசார்யராலே ஏற்கப்பட்டதாகையாலே மிக சுத்தமான ஆசார்யாபிமானமுடைய துறை - ஆசார்யன்

நம்மாழ்வார் - ''நல்ஞானத்துறை'' என்கிறார்.

குறிப்பு : வை.மு. சடகோபராமாநுஜாசாரியாருடைய உரையில் சிறந்த பகவத் விஷயஞ்ஞானத்துக்கு இறங்குதுறையாகிய ஆசார்யன்.

acharya.org

நீர் - சிறந்த குணமாகிய அருள். பெரு நீர் - நிர்ஹேதுகக்ருபை. காரணமின்றிச் சுரக்கும் அருள். ஆக மிகவும் பரிசுத்தமான உபாயமான ஆசார்யாபிமானத்திலே ஒதுங்கின யமுனைத்துறைவராகிய ஆளவந்தாரை கதியாக உடையவர்.

ஆயர்குலத்தினில்

ஆயர் - இடையர் (நடுவர்)

பரமபதவாஸிகளான நித்யசூரிகளுமின்றிக்கே ஸம்ஸாரிகளுமின்றிக்கே இடையிலுள்ள ப்ரபந்நர்கள். இடையர் கண்ணனையே ஆச்ரயமாகவும் பலமாகவும் ப்ராணனாகவும் நாதனாகவும் உடையவர்கள். அப்படிப்பட்ட ப்ரபந்நகுலத்தில் தோன்றிய அழகான விளக்கு.

விளக்கு இருளைப் போக்கும். எம்பெருமானாரே அவ்விளக்கு.

निरालोके लोके निरुपधिपर स्नेह भरितः
यतिक्ष्माभृद्दीपो यदि न किलजाज्वल्यत इह
अहंकारध्वान्तं विजहति कथंकारमनघा :
कुतर्कव्यालौघं कुमतिमतपातालकुहरं ॥ (யதிராஜஸப்ததி 56.)

எம்பெருமானார் என்கிற விளக்கு எரியாவிடில் அஹங்காரமென்னும் இருள் சூழ்ந்ததும் ஆன சங்கரர் முதலானவரின் குத்ருஷ்டிமதமாகிய தீய யுக்திகளாகிற பாம்புகள் நிறைந்ததுமான பெரிய குழியில் விழாது தப்ப முடியாது. அந்த யதிராஜ தீபம் ஆர்வமே நெய்யாக என்கிறபடியே எம்பெருமானிடம் பக்தியாகிற நெய் நிறைந்த தாம் என்று இதன் கருத்து.

மணி விளக்கு - சூரியன்

acharya.org

குத்ருஷ்டிகளின் யுக்திகள் அனைத்துக்கும் பால சூரியன் போன்ற யதிராஜர் **रामानुजदिवाकरः** அல்லவா?

தாயைக் குடல் விளக்கம் செய்த தாய் திருமந்திரம்

मन्त्रो माता गुरुः पिता என்பது ப்ரமாணம். குடல் நடுப்பகுதி. திருமந்திரத்தின் நடுப்பதமான பாரதந்த்ரியத்தை அதாவது எம்பெருமானுக்கு ஸமஸ்த சேதனரும் பராதீனர் என்னுமர்த்தத்தை ஸ்ரீபாஷ்யத்தின் வாயிலாலே விளக்கியவர்.

தாமோதரனே दामा பசுவைக்கட்டும் கயிறு: மாலை

கயிறு - பக்தி. திருமழிசைப்பிரான் ''எட்டினோடு இரண்டெனும் கயிறு'' பத்தியைக் கயிறு என்றார்.

எம்பெருமானிடம் பக்தியை நெஞ்சிலே கொண்டவர்.

ராமாயணமென்னும் பக்திவெள்ளம் குடிகொண்டவர்

மார்பிலே தாமரை மணிமாலையுடையவர் யதிராஜரே தாமோதரன் என்கிறார் வேதாந்த தேசிகர்.

शमितोदयशंकरादिगर्वः । स्वबलाद्धृतयादवप्रकाशः ॥
अवरोपितवान् श्रुतेरपार्थान् अपि रामावरजः स एष भूयः ॥

(யதிராஜஸப்ததி - 13)

1. கண்ணன், சங்கரன், பிரம்மா முதலிய தேவர்களுக் குண்டான கர்வத்தை அடக்கினான்.

   யதிராஜர், சங்கர பாஸ்கர யாதவ பாட்ட ப்ரபாகராதிகளுடைய கர்வத்தை அடக்கினார்.

2. கண்ணன் தன் சக்தியாலே இடையர்களை உயர்த்தி நிலைப்பித்தார்.

acharya.org

யதிராஜர் தன் ஜ்ஞானபலத்தாலே யாதவப்ரகாசனை உத்தரணம் பண்ணினார்.

3. கண்ணன் பாண்டவர்களின் விரோதியான துர்யோதநாதியரை அழித்தான்.

யதிராஜர் ச்ருதியின் தவறான அர்த்தங்களை விலக்கி உண்மைப் பொருளையுரைத்தார்.

ஆகையால் இந்த யதிராஜரே பலராமாநுஜனாகிய தாமோதரனாவார்.

தூயோமாய்வந்து

श्रीवैष्णवाश्च यमिनः तव पादभक्ताः।
एकान्तिनश्च विमलाः त्वदनन्यभावाः ॥

(ஸ்ரீ ராமாநுஜ ஸுப்ரபாதம்)

(ஸ்ரீவைஷ்ணவர்களும் யதிவரர்களும் ஏகாந்திகளும் தேவரீர் திருவடிகளிலே பரம பக்தி உடையராய் எம்பெருமானாரை ஒழிந்த மற்றொன்றிலும் நெஞ்சுசெல்லாதவர்களாய் தூய்மையுடையவர்கள். (உமக்குத் திருப்பள்ளி எழுச்சிபாடுகிறார் என்று கருத்து.)

என்கிறபடியே தூய்மையுடைய நாங்கள் தேவரீர் பக்கலிலேவந்து. மாயுமென்னாவியை வந்தெடுத்தான் என்று நீர்வர ப்ராப்தமாயிருக்க நாங்கள் வந்தோம்.

நாம்

ஆசார்யாபிமானமே உத்தாரகம் என்றிருக்கிற நாம்.

தூமலர் தூவி

1. கொல்லாமை 2. புலனடக்கம் 3. அனைத்துப்

acharya.org

பிராணிகளிடமும் இரக்கம் 4. பொறுமை 5. ஞானம் 6. தவம் 7. த்யாகம் 8. உண்மை

என்னும் எட்டு புஷ்பங்களையும் ஸமர்ப்பித்து .அதாவது எந்தப்ராணியையும் ஹிம்ஸியாது புலன்களை அடக்கி அனைவரிடமும் கருணைகாட்டி அனைவரையும் மன்னித்து ஞானம் தவம் தியாகம் உடையவனாயிருப்பேன். உண்மையே பேசுவேன் என்று யதிராசர் முன் உறுதிபூண்டு

அல்லது

மலர் மணமுள்ளது.
ஆத்மா ஞானமுள்ளது.
பகவானுக்கு ஸமர்ப்பிக்க உரியது இரண்டும்
சூரியனால் மலருவது மலர்.
ஆத்மா ஆசார்யனால் ஞானவிகாஸமடைவது.
மலர்ந்தால் சூடப்படும் மலர்.
ஞானமுண்டானால் சூடப்படும் ஆத்மா.
தலையாலேசுமக்கப்படும் மலர்.

''ஞானி எனக்கு ஆத்மா என்று'' கண்ணனாலே கொண்டாடப்படும்.

தூமலர்

அநந்யார்ஹமான ஆத்மாவை.

தூவி

தேவர்க்கே அடிமையாக்கி 'கந்தமாமலர் எட்டுமிட்டு' என்றபாசுரத்திலே. (**பெரிய திருமொழி 5, 6**) பரிமளம் நிறைந்த மலர் போலே பரமபோக்யமாயிருக்கிற எட்டெழுத்தின் (திருமந்திரத்தின்) உட்பொருளான ஆசார்யன் பக்கலிலே தன்னை ஸமர்ப்பித்து.

தொழுது

இருகை குவித்து வணங்கி

acharya.org

வாயினால் பாடி

வக்தவ்யம் ஆசார்ய வைபவம் என்கிறபடியே வாய் படைத்தபயனாகப்பாடி

மனத்தினால் சிந்திக்க

மனத்தால் நினைக்க

போயபிழையும்புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்.

கடந்துபோன பாவங்களும் இனிசெய்யப்போகும் பாவங்களும் தீயினில் இட்ட பஞ்சுபோல் உருக்குலைந்து போய்விடும்.

செப்பு

ஆசார்யன் திருநாமத்தைச் சொல்லும்.

திருப்பாவை

பாசுரம் - 6

புள்ளுஞ் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்
வெள்ளை விளிசங்கின்பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு
கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ளவெழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்

பிள்ளாய்

1. *உகந்தருளின நிலங்களிலே ப்ரவணராய் குணாநுபவ கைங்கர்யங்களே போது போக்காயிருப்பவன் தானே ஸ்ரீவைஷ்ணவன்.*

acharya.org

2. கணபுரம் கைதொழும் பிள்ளையை பிள்ளை என்று எண்ணப் பெறுவ...

எம்பெருமானிருக்கும் ஊரைத் தொழும்பிள்ளையை பிள்ளை என்று எண்ணலாமா?

அதாவது புணர்ந்த பொன் மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்கு நிற்கும் குணம்திகழ் கொண்டலி ராமானுசன். திவ்ய தேசங்களிலே ஆழங் கால்பட்டிருக்கும் யதிராசரே!

பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாகத் திருவீதியிலே எழுந்தளியிருக்கச் செய்தே விளையாடிக் கொண்டு வருகிற பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகாள் திருமந்திரத்தில் பிறந்தார் போலே உங்களுக்கு இத்தனை செருக்கு என்" என்று அருளிச் செய்தார். (வார்த்தாமாலை - 46.)

அதாவது - திருமந்திரமாகிய தாயினிடம் பிறந்து ஞானம் பெற்று பெருமகிழ்ச்சி அடைந்து ஸம்ஸார பயமற்றிருப்பவர் போல் இருக்கிறார்கள். பிள்ளைகள் என்கையால் - அதுபோல் அஞ்சா நெஞ்சமுடைய எம்பெருமானாரே!

III அஷ்டாக்ஷரநிஷ்டரானமையாலேயன்றோ மாமுனிகள் எம்பெருமானாரிடம் அதை ப்ரார்த்திக்கிறார். (யதி.வீம்சதி - ச்லோ.5)

புள்ளும் சிலம்பினகாண்.

1. ஸ்ரீவைஷ்ணவர்கள் குழுமியிருந்து தேவரீரை பள்ளியுணர்த்துகின்றனர்.

2. புள்: இரண்டு சிறகுகளையுடைய பக்ஷி. எம்பெருமானாரே சரணம் என்ற ஜ்ஞானமும், நயவேன் ஒருதெய்வம்

acharya.org

நாளிலத்தே (இரா நூற்) என்கிற அநுஷ்டானமுமாகிற இரு சிறகுகளையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்.

சேர்ப்பாரைப்பக்ஷிகளாக்கி ஞானகர்மங்களைச் சிறகென்று குரு-ஸப்ரஹ்மசாரி-புத்ர-சிஷ்ய ஸ்தானே பேசும் என்கிறது. (ஆசார்ய ஹ்ருதயம் - 150)

3. உதாரணம்

त्वां बोधयन्ति गुरवः प्रथिता महान्तः
श्रीवैष्णवाश्च यमिन; तव पादभक्ताः
एकान्तिनश्च विमलाः त्वदनन्यभावाः
तान् पालयाद्य यतिशेखर सुप्रभातम् ॥

(ராமாநுஜ ஸுப்ரபாதம் - 10)

இதன் கருத்து :- மிக்க புகழ் பெற்ற பெரியோர்களான ஆசார்யர்களும் ஸ்ரீவைஷ்ணவர்களும் யதிகளும் ஏகாந்திகளும் தேவரீர் திருவடிகளில் பக்தியுடையவர்கள். உம்மையொழிய வேறு ஒன்றையும் நெஞ்சாலும் நினையாதவர்களாய் தேவரீரைப் பள்ளி உணர்த்துகின்றனர். அவர்களைத் தேவரீர் தாமரைக் கண்களால் நோக்கியருள வேணும்.

புள்ளரையன் கோயில்

வேதாத்மாவானவன் பெரிய திருவடி. ஆளவந்தார் த்ரயீஸார என்றார். ஆதலால் வேதஸாரமான ப்ரணவம்.

சங்கு ஞானம். சேஷத்வஜ்ஞானம்

விளிசங்கு: வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின் என்றழைக்கும்படியான கைங்கர்ய ஞானம்.

acharya.org

வெள்ளைவிளி சங்கு

தனக்கேயாக எனைக்கொள்ளு மீதே என்கிற படியே பகவத்ப்ரீதிகரமான கைங்கர்ய ஞானம்.

பேரரவம் கேட்டிலையோ!

இப்படிப்பட்ட ஞானமுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் அழைக்கும் பேரொலி செவி புகவில்லையா?

பேய்முலை

முக்குணமுள்ள ப்ரக்ருதி.

" முக்குணமுள்ளதாய் என்னுடையதாய் ஆச்சரியமான செயல்களைச்செய்யும் ப்ரக்ருதி கடக்கவரிது", என்றானல்லவா கண்ணன்.

முலை

அஹங்கார மமகாரங்கள்.

நஞ்சு

1. ராகத்வேஷங்களாகிற விஷம். தன்னையும் ஈச்வரனையும் மறக்கப் பண்ணுவது.
2. விபரீதஞ்ஞானமும் தன்னில் போக்யம் என்ற எண்ணமுமாகிற விஷம்

உண்டு

ஸ்வரூபநாசம் ஏற்படாதவாறு அழித்து

मदीयानादिकर्मप्रवाहप्रवृत्तां भगवत्-स्वरूपतिरोधानकरीं विपरीतज्ञानजननीं स्वविषयायाश्च भोग्यबुद्धेः जननीं गुणमयीं मायां

என்ற கத்யஸூக்தியைக் காண்மின்.

acharya.org

கள்ளச்சகடம்

ப்ரக்ருதி சம்பந்தத்தால் வரும் புண்ணிய பாபங்களால் சக்கரம் போல சுழன்று வரும் பிறப்பு இறப்புச் சுழல்.

கள்ளம் - மனம்

''கள்ளம் மனம் விள்ளும் வகை கருதிக் கழல் தொழுவீர்''
(பெரிய திருமொழி 7-9-1)

கள்ளமான மனம். பௌத்தம் முதலான மதங்களைப் பற்றியிருக்கை. அம்மதஸ்தர்கள் வேதாபஹாரமும் ஆத்மாபஹாரமும் பண்ணியிருப்பர். அதைப் பற்றி இருக்கிற மனம்.

சகடம் போல் சுழலும் கள்ள மனம். வேதத்துக்கு அபார்த்தம் பண்ணுகையாலும் எம்பெருமானுடையதான ஆத்மாவைத் தன்னதென்று கொள்கையாலும் மனம் கள்ளமாகிறது.

மனத்தின் கலக்கத்தை அழித்து தெளிவுறும்படி

கலக்கழிய

கட்டுக்குலைந்து சிதறும்படி

காலோச்சி

தேவருடைய திருவடிகளாலே பண்ணியருளி ''மருளாமிருளோட மத்தகத்துத்தன் தாள் அருளாலே வைத்த அவர்'' என்கிறது ஞானஸாரம்.

acharya.org

கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றி கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து நீ இந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கிய பின்
என் நெஞ்சில்
பொருத்தப்படாது - எம் இராமாநுசா ! மற்றோர்
பொய்ப் பொருளே. *(இரா.நூற்- 78)*

அரும்பதம்

கருத்து = மனம் - கள்ளம் - ஐயம் திரிபு மயக்கம் முதலியவை

கழற்றி = வாஸனையோடே துடைத்து.

வெள்ளத்து.

ஸம்ஸார ப்ரவாஹத்திலே

அரவில்

அவதரித்த ஆதிசேஷாவதாரமாய்

துயிலமர்ந்த

துயில் - பகவதநுபவம். அமர்ந்த - ஆழ்ந்த.

अमृतसागरान्तर्निमग्नसर्वावयवः सुखं आसीत

என்கிறபடியே இதரவிஷயங்கள் தோற்றாதபடி பகவதநுபவம் பண்ணுமவராய்

வித்தினை

முத்திக்கு வித்தான (காரணமான) தேவரீரை

உள்ளத்துக் கொண்டு

மனதில் த்யானித்துக் கொண்டு

acharya.org

முனிவர்களும்

மனன சீலர்களும். அதாவது, தேவரீருடைய வடிவழகை மனதில் சிந்தித்துக் கொண்டிருக்கும் எம்பார் அமுதனார் போல்வார்களும் யோகிகளும் வடுக நம்பிபோல்வரான கைங்கர்யபரர்களும்

மெள்ள

விநயமுடையராய்

எழுந்து

உற்சாகம் கொண்டு

எழுதல் - ஊக்கம் கொள்ளுதல்.

அரி என்ற

அரி - விரோதி போக்குமவன், சிங்கம்.

அடியார்களின் விரோதி போக்குமவனான பகவானே ஸிம்ஹமாய் அவதரித்தான்.

அது போன்று தன் திருவடிகளைப் பற்றினாரின் வல்வினைகளை அழிக்க வல்லவரான ஆசார்யன்பால். அவர்தாம் இராமாநுச முனியாம் வலிமிக்க சீயம்.

அரவம் - பொருள். எம்பெருமான்

பேரரவம் - பெருமை கொண்டவரான ஆசார்யன் திருநாமம்.

உள்ளம் புகுந்து

உள்ளத்திலே புகுந்து

குளிர்ந்து குளிர்ந்திருக்கும்

acharya.org

திருப்பாவை

பாசுரம் - 7

கீசு கீசென்று எங்கும் ஆனைச்சாத்தன் - கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ, பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து
வாச நறுங்குழலாய்ச்சியர் - மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப்பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப்பாடவும் நீகேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோரெம்பாவாய்.

பேய்ப்பெண்ணே.

1. ஆயனே! அரங்கா! என்றழைக்கின்றேன்
   பேயனாயொழிந்தேன் எம்பிரானுக்கே,
2. பித்தனாயொழிந்தேன் எம்பிரானுக்கே,

3. வானோர் பெருமானை ஏத்தாதபேய்காள்,

என்கிற பாசுரங்களில் 'பேய்' என்ற சொல் பகவத் விஷயத்தில் அளவிறந்த ஈடுபாடுடையவன் என்ற பொருளில் வந்துள்ளது. உலகத்தில் ஒருவன் பணத்திலே மிகவும் பித்தனாயிருந்தால், காசு காசு என்றுபேயாய்ப் பறக்கிறானே என்று அவனைக் கூறுகிறார்கள்.

4. ஜடபரதன் மான்பக்கல் நெஞ்சைப்பறி கொடுத்துப் பித்தன் போல் திரிந்தார் என்கிறது.

எம்பெருமானாரும் "பொன்னரங்கமென்னில் மயலே பெருகு மிராமாநுசரல்லவா! ஆக," பேய் என்கிறது எம்பெருமானாரை.

acharya.org

நாயகப் பெண்பிள்ளாய்

1. ஸ்வாமி வேதாந்ததேசிகன் குருபரம்பராஹாரத்தின் நாயகரத்னம் எம்பெருமானார் என்று 'யதிராஜஸப்ததியில் அருளிச் செய்தார்.

2. பெண்ணே, பெண்பிள்ளாய் இவ்விரண்டும் பகவான் ஆசார்யன் கைபார்த்திருக்கையாகிற பார தந்த்ரயத்தைக் கூறுகின்றன.

ஆக - குருபரம்பரையில் நடுநாயகமாய் யதிகளுக்கெல்லாம் தலைவராய் ஆசார்ய பரதந்த்ரரான எம்பெருமானாரே!

தேசமுடையாய்

வடுக நம்பி யதிராஜவைபவத்தில் ''திருவாதிரையில் ஆதிசேஷன் அம்சமாக ஒரு தேஜோநிதி (ஒளிக்குவியல்) அவதரித்தார் என்கிறார்.

திருவரங்கச் செல்வத்தைத் திருத்தி அமைத்தமையாலும் வைணவமதத்தை நிலை நாட்டியதாலும், எம்பெருமானுடைய அநுபவத்தாலும் வடிவில் பிறந்த புகரையுடையவரே !

கீசு கீசு என்று

அவ்யக்தமாய் (எழுத்து புரியாதபடி) பக்ஷிகள் ஒலி போலே மிக இனிமையாய் தேவருடைய திருமேனியநுபவத்திலே ''காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்'' என்கிறபடியே, தொண்டை தளதளர்த்து, மதுரமாய்

எங்கும் ஆனைச்சாத்தன்

எல்லா விடத்தேயிருந்து வந்து.பாரத்வாஜபக்ஷிபோலே அழகிய கண்ணையுடைய பெரிய பிராட்டியார் போன்று பரம க்ருபையுடையராய் / ஞானமுடையராய்.

acharya.org

பாரத்வாஜ முனிவர் இந்திரனிடம் வரம் பெற்று வேதாந்த ஜ்ஞானமுடையராயிருந்தார். அதுபோன்று ஜ்ஞாநாதிகராய்.

பாரத்வாஜ பக்ஷி இருசிறகுகளை உடையது போல் ஞானமநுட்டானங்களால் நிறைந்த வடுக நம்பி ஆழ்வான் ஆண்டான் போல்வார்.

கலந்து - தம்மில் தாம் கலந்து - அல்லது தேவரீர் பூர்வாசார்யர்கள் ஆழ்வார்கள் அனைவருடைய திவ்யஸூக்திகளையும் கலந்து.

பரஸ்பரம் முரணாகப் பேசினவர்களைப் போலில்லாது, பேசிற்றே பேசும் ஏக கண்டர்களாய்

பேசின பேச்சு

தேவரீர் பேசின பேச்சு. தேவரீர் திவ்ய சூக்திகளைப் பேசுகின்ற

मुनिबहुमत सारा .... संयमीन्द्रस्य सूक्तिः ॥

(1. யதிராஜஸப்ததி - 29)

(யதிராஜருடைய ஸூக்தி பராங்குச முனி நாதமுனி யாமுன முனி - போதாயனர் முதலானாரின் பஹுமதமான ஸாரார்த்தங்களை உடையது.)

அரவம் - ஒலி.

கேட்டிலையோ - செவிப்படவில்லையா?

காசும் பிறப்பும்

1. காசு. அச்சுத்தாலி - காசுமாலை.

பிறப்பு - முளைத்தாலி.

2. ஆக ஆபரணங்களைச் சொல்லுகிறது.

acharya.org

3. சமதமாதிகளான அணிகலன்களும் - திருமந்த்ரமும் த்வய, சரமங்களும்.

எட்டிழையாய் மூன்று சரடாயிருக்கும் திருமந்திரமென்கிற அணிகலனும் செவிப்பூவும் பாடகமுமான த்வய சரமங்களும்

கலகலப்ப

இவை மூன்றும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து உணர்த்தின ஸ்வரூப - உபாய - புருஷார்த்த ஜ்ஞானம் கலந்து ஒலிக்க.

கைபேர்த்து

ஞானம் அநுஷ்டானபர்யந்தமாகவும் ஆசார்யனளவும் ஆக்கி

வாசநறுங்குழல் ஆய்ச்சியர்

ஆய்ச்சியர் போலே பிரிந்தால் ஆற்றமாட்டாமல் அலமந்து வருந்தும் அடியார்கள்

— குழல்

குழல் - வ்யாமோஹம்

— குழல் ஆய்ச்சியர்

பகவத் விஷய வ்யாமோஹமாகிற நம்மாழ்வார் போல்வார்கள்.

— நறுங்குழலாய்ச்சியர்

அமுதனாரைத் திருத்தி ஆசார்யனுக்கு சேஷமாக்கும் கூரத்தாழ்வான் போல்வார்.

— வாசநறுங்குழல் ஆய்ச்சியர்

ஆசார்யனிடத்தில் அதிக வ்யாமோஹமுடைய வடுகநம்பி போல்வார்.

acharya.org

மத்தினால் ஓசைபடுத்த

நாவினால் உம்முடைய புகழ்பாட

தயிரரவம் கேட்டிலையோ?

பால் - எம்பெருமான் குணம் - அதன் பரிணாமமான
தயிர் - ஆசார்ய குணாநுபவம்
கூறும் வார்த்தை செவிப்படவில்லையா?

கேசவனை

இந்த்ரியங்களான குதிரைகளை அடக்கிய ஆசார்யனுடைய குணத்தை (பெரியநம்பி)

பாடவும்
நீ கேட்டே கிடத்தியோ

கேட்பதே பயனாகக் கிடக்கிறீரோ!

திற

தடை நீக்கி தேவரடியார் கோஷ்டியில் புக அருள் புரிய வேணும்.

பாசுரம் - 8

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண்மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து
உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்
கோதுகலமுடைய
பாவாய் எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்
ஆவாவென்றாராய்ந்தருளேலோ ரெம்பாவாய்

acharya.org

கீழ்வானம் வெள்ளென்று

மேலாத் தேவர்களும் நிலத்தேவரும்
மேவித் தொழும் மாலார் *(திருவாய் மொழி - 5-1-8)*

ஈடு:- மேலாத் தேவர் - நித்யசூரிகள், நிலத்தேவர் - பூதேவர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள். மேலாத் தேவரான நித்ய சூரிகள் வாழுமிடம் மேல்வானம். அதாவது பரமபதம். நிலத்தேவரான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடம் கீழ்வானம் - லீலாவிபூதி.

எம்பெருமானுடைய திருவருளால் உலகிலுள்ள சேதனர் அனைவரையும் வாழ்விக்கைக்காக எம்பெருமானாராகிற சூரியன் (ராமாநுஜதிவாகரர்) உதித்ததால் லீலாவிபூதி (மண்ணுலகம்) வெளுத்தது. அதாவது ஞானம் பெற்றது.

மண்மிசை யோநிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலகோர்களெல்லாம்
அண்ணலிராமாநுசன் வந்துதோன்றிய அப்பொழுதே
நண்ணறு ஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே.

(இரா.நூற்றந்தாதி.41)

எம்பெருமானார் அவதாரத்தால், தன் முயற்சியால் பெற அரிதான ஸம்பந்தஜ்ஞானம் மிகுந்தது.

வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு - என்றும் மறையவர் தம் ।
தாழ்வற்றது தவம் தாரணிபெற்றது - தத்துவ நூல்
கூழற்றது - குற்றமெல்லாம் பதித்த குணத்தினர்க்கு அந்
நாழற்றது - நம் இராமாநுசன் தந்த ஜ்ஞானத்திலே.

(இரா. நூற்றந்தாதி - 65)

நீண்ட நாட்கள் வாதம் செய்து வருபவர்களின் வாழ்வு அடியற்றுப் போயிற்று.

acharya.org

அதாவது வேதத்தை ஒப்புக் கொண்டிருந்த போதிலும் அதில் உண்மைப் பொருளறியாதே குத்ருஷ்டிகளால் கல்பனையாகச் சில நூல்களைப் பண்ணிலோகத்தை எல்லாம் அழித்துக் கொண்டிருக்கை. வேதத்திலே சிலதோஷங்களை ஏறிட்டு அது ப்ரமாணமில்லை என்று சொல்லுகை. இதெல்லாம் அழிந்தது, நம் இராமாநுசன் தந்த ஞானத்திலே.

கடலளவாய திசை எட்டினுள்ளும் கலியிருளே
மிடை தருகாலத் திராமாநுசன் மிக்க நான் மறையின்
சுடரொளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரை
உடையவன் நாரணன் என்றறிவாரில்லை உற்றுணர்ந்தே.

(இரா - நூற்றந்தாதி - 59)

கலியில் அவதரித்து இராமாநுசன் நான்மறையின் சுடரொளியால் கலியிருளைப் போக்காவிடில் உயிருக்கு உடையவன் நாரணன் என்றறிவாரில்லை. என்ற பாசுரங்களைக் காண்மின்.

எருமை என்கிறது ஸம்ஸாரிகளை.

1. எருமை - கருமை நிறமுடையது - ஸம்ஸாரிகள் - கறுப்பு என்கிற தமோ குணமுடையவர்கள்.

2. எருமை - தீயகந்தமுள்ள சேற்றிலே மூழ்கி அதுவே இனிய தென்றிருக்கும் ஸம்ஸாரிகள். ஆயிழையார் கொங்கை தங்கும் அக்காதலளற்றி மூழ்கி இன்புற்றிருப்பர் - *(இரா.நூற்.42)*

பிறப்பாம் பொல்லா அருவினை மாயவன் சேற்றள்ளலான பொய்ந்நிலத்தே அழுந்தியிருப்பர். *(திருவிருத்தம் 100)*

.... **ஓங்கு பைந்தாள்**
கண்ணார் கரும்பின் கழை தின்றுவைகிக்
கழு நீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து

acharya.org

மண்ணேந்து இளமேதிகள் வைகு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு என் மனனே
— *(பெரிய திருமொழி 3.8.6)*

எருமை கரும்பை விட்டு களையைத் தின்று கழுநீரில் மூழ்கி இன்புற்றிருப்பதுபோல் கரும்பினைக் கனியை என்கிற எம்பெருமானை விட்டு அற்பஸாரமான சிற்றின்பத்தை நுகர்வர் ஸம்ஸாரிகள்.

சிற்றின்பம் - உலக இன்பமும், ஆன்ம அநுபவமும்.

3. *எருமை மெதுவாக நடக்கும் - ஸம்ஸாரிகள் பகவதநுபவத்தில் உற்சாகமின்மையாலே மந்தமாக இருப்பர்.*

4. *எருமை தெளிந்த ஓடையைக் கலக்கும். ஸம்ஸாரிகள் தம்ஸம்பந்தத்தால் தெளிந்தவரையும் கலக்குவர்.*

சிறுவீடு.

வீடு - மோக்ஷம். சிறுவீடு என்கையில் அணுவான ஆத்மாநுபவத்தைக் கூறுகிறது. ''இன்பந்தருபெருவீடு வந்தெய்திலென்? (இராம.நூற்றந்தாதி - 30)

ஆனந்தமளிப்பதாய் அந்தமில் பேரின்பமான பரம புருஷார்த்தமான மோக்ஷம் பெருவீடு.

மேய்வான் பரந்தன காண்

பகுத்தறிவில்லாத விலங்குகள் (ஆஹாரம்) மேய்தல் தொழிலுடையது. அதுபோன்று விவேகமில்லாத சிற்றின்ப நுகர்ச்சிக்காக பரவுகிறுர்கள். காண்மின்.

acharya.org

பிள்ளைகள்

ஸ்ரீ வைஷ்ணவர்கள். தேவதாந்தரங்களை விட்டு விலகி நாரணனுக்கே அடிமை என்ற ஞானமுடையவர்கள்.

உள்ள பிள்ளைகள்

ஸித்தோபாயமான எம்பெருமானையும் விட்டு ஆசார்யனையே உபாயமாகப் பற்றினவர்கள்.

மிக்குள்ள பிள்ளைகளும்

அல்லாத பலன்களை விட்டு பரமப்ராப்யமான ஆசார்யாபிமானத்தில் ருசி மிக்கவர்கள்.

போவான்

ஆசார்யன் சந்நிதிக்குப் போவதே பயனாக.

வஸ்தவ்யம் ஆசார்ய சந்நிதியல்லவா?

1. போமவர்களை.
2. சிறை புகுந்தவனுக்கு விடுதலையாகிச் சிறையை விட்டு வருவதே பயனாவதுபோல.

போகாமல் காத்து

ஆசார்யாபிமானமுள்ளவரை முன்னிட்டல்லது.

ஆசார்யன் திருவடி தொழக் கடவோமல்லோம் என்கிற முறையுணர்த்தி போகாமல் தடுத்து.

உன்னைக் கூவுவான்

உம்மை அழைப்பதையே பயனாகக் கருதி ஒரு ஸ்ரீவைஷ்ணவன் வாசலிலே துவண்டு நிற்கையே சிறந்த பயனல்லவா?

acharya.org

ஸ்ரீவசன பூஷணம் — "கொடியைக் கொள் கொம்பிலே துவக்கும்போது சுள்ளிக்கால் வேண்டுமாபோலே ஆசார்யாந்வயத்துக்கும் இதுவேணும்" என்ற வார்த்தையை அநுஸந்திப்பது.

வந்து நின்றோம்

உம் திருமாளிகை வாசலிலே வந்து நிலைப்பெற்றோம்.

கோதுகலமுடைய பாவாய்

கோதுகலம் - உள்ளக்களிப்பு.
உள் மகிழ்ச்சியை உடைய

உவந்தருந்தேன் - அவன் சீரன்றி யான் ஒன்றும்
உள்மகிழ்ந்தே. (இரா - நூற்றந்தாதி - 94.)

ஸர்வப்ரகாரத்தாலும் உத்தாரகரான எம்பெருமானாருடைய கல்யாண குணங்களை யொழிய நான் மற்றொரு விஷயத்தை உள் மகிழ்ந்து உவந்து, மனதில் சந்தோஷத்துடன் ஆதரித்து அநுபவிக்க மாட்டேன்.

(பிள்ளைலோகம் ஜீயர் உரை)

சுழி பட்டோடும் சுடர்ச் சோதிவெள்ளமான பரமபதத்தையும் கூட காற்கடை கொள்ள வேண்டும்படி அமுதனார்க்கு இருந்தது எம்பெருமானாருடைய, பாலே போல் சீர் என்னும்படியான கல்யாண குணங்களின் இனிமை.

இத்தால் - எம்பெருமானாருடைய இனிய குணநுபவத்தாலே உள்மகிழ்ச்சியுடையவர் என்றதாயிற்று.

பாவாய்

மரப்பாவை போலே எல்லாம் ஆசார்யாதீனமென்றிருக்கும் பாரதந்த்ர்யமுடையவரே! (அமுதனார் - வடுக நம்பி போல்வார்)

acharya.org

எழுந்திராய்

எங்கள் கோஷ்டியில் கலந்து கொள்ள ஊக்கத்துடன் எழுந்திருக்க வேண்டும்.

பாடிப்பறை கொண்டு

எம்பெருமானார் உகப்புக்காக திருவாய்மொழி பாடி அவருடைய புகழை மனத்திலே கொண்டு.

குறிப்பு: यतिराज यशः पटहः என்று எம்பெருமானார் புகழை பறையாகச் சொல்லப்பட்டது.

மாவாய் பிளந்தான்

1. கண்ணன் குதிரை வடிவிலே வந்த கேசி என்ற அசுரனை வாயைக் கிழித்துக் கொன்றாப் போலே அப்ராப்தமான சப்தாதி விஷயங்களை அநுபவிக்கைக்கு உபகரணங்களான இந்திரியங்களை வென்ற எம்பெருமானாரை.

   கடோபநிஷத் इन्द्रियाणि हयानाहुः என்று இந்த்ரியங்களைக் குதிரையாகச் சொல்லிற்றே.

2. நமக்கு உயிராய் கண்ணனை வேதத்தை அழிக்க வந்த மதம் இரண்டு 1. பாஹ்ய. 2. குத்ருஷ்டி. இந்த இரண்டு மதத்தையும் அழித்தவரான யதிராஜரை.

மல்லரை மாட்டிய

கண்ணன் (ராமாநுசன்) சாணூர முஷ்டிகர்களை தங்களுக்குள் மோதுவித்து அழித்தாப் போலே. கர்மங்களே பலனளிக்கின்றன. தேவதைகளல்ல என்கிற மீமாம்ஸகரான பாட்ட ப்ராபகரர்களை தங்களுக்குள்ளே மோதுவித்து அழித்தவரான எம்பெருமானாரை.

acharya.org

தேவாதி தேவனை

1. ஜ்ஞானி எம்பெருமானுக்கு ஆத்மா. ஆதலால் ஜ்ஞானி ஆதாரம் எம்பெருமான் ஆதேயம். (ஆதாரம் - தாங்குபவன். ஆதேயம் - தாங்கப்படுவது.)

ஜ்ஞானி நியமிப்பவன். எம்பெருமான் நியமிக்கப்படுபவன். ஜ்ஞானி சேஷி. பகவான் சேஷம். ஆதலால் ஜ்ஞானி தேவனுக்குத் தேவன்.

2. தேவர் - நித்யசூரிகள். அவர்களுக்கு ஆதி எம்பெருமான். அவருக்கும் தேவன் ஆசார்யன் - எம்பெருமானுரை.

ஆ ஆ என்று

பரமக்ருபையால்

ஆராய்ந்து அருள்

நம்மைப் பிரியில் தரியார் என்று ஆராய்ந்து தேவர் திருவடிகளிலே நிழலுமடிதாறும் போலே சேர்ந்திருக்கும்படி அருள வேண்டும்.

பாசுரம் - 9.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத்துயிலணைமேல் கண் வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் அவளை எழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

acharya.org

தூமணி மாடத்து

தூ - தூய்மையான மணி - மணிபோல் - ச்லாக்யமாய் பஞ்சோபநிஷண்மயமான. மாடத்து - திவ்யமங்கள விக்ரஹத்திலே.

மணி 1. மிகவும் விலை மதிக்க முடியாததாயினும் முந்தானையில் முடிந்துஆளலாம்படி இருக்கும். 2. கடல் மல்லை போன்ற கடல் துறையில் உள்ளது. 3. தன்னையுடையவனைச் செருக்கடையச் செய்யும். 4. ஒளியை விட்டிராது.

திருமேனி — 1. உயர்வற உயர்ந்ததாயினும் அடியார்க்கு எளிதாயிருக்கும்.

2. எம்பெருமானுடைய திருமேனியும் திருப்பாற் கடலிலும் திருமலையிலும் உள்ளது.

3. சேவித்தவரை எனக்கு ஆரும் நிகரில்லை என்று செருக்கடையச் செய்யும்.

4. கதிரவன் ப்ரபை போன்று பிராட்டியை விட்டிராது.

ஆக - அப்ராக்ருதமாய் பஞ்சோப நிஷண் மயமான எம்பெருமானுடைய திருமேனியில்

விளக்கு - ஞானம்

விளக்கு இருளைப் போக்கிஒளியைத் தருவது போலே ஞானம் அறியாமையாகிய அகவிருளைப் போக்கி அறிவை (ஞானத்தை) அளிக்கும்.

நல்லது - கெட்டதைக் காட்டிக் கொடுக்கும் - ஞானமும் நல்லது கெட்டது என்கிற விவேகம் பண்ணித் தரும். வேதாந்த விழுப் பொருளின்மேலிருந்த விளக்கு என்றும் வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்கு என்றும் ஆயர் பாடிக்கணிவிளக்கு என்றும் வேங்கடநல்விளக்கு என்றும் தோன்றுசோதி மூன்றுமாய் துளக்கமில் விளக்கமாய் என்றும் சொல்லுகிற விளக்கு.

acharya.org

சுற்றும் எரிய

கீழ்ச் சொன்ன ஞானங்களால் காட்டப்படும் பரம்பொருளாக அறுதியிடப்பட்டவனும் உகந்தருளின நிலங்களிலே விளங்குபவனும் திருமந்திரத்தின் பொருளாய் உள்ள எம்பெருமான், ப்ரஹ்லாத னுக்குப்போலே அனைத்திலும் மேலானவனுய்த் தோன்ற .

தூபம் கமழ

ஞானம் பரிமளிக்க.

ஞானம் பரிமளிக்கையாவது அநுஷ்டானமளவாக இருக்கை. ஞானமில்லாதவன் குருடனோடு ஒப்பான். அநுஷ்டானமில்லாதவன் முடவனோடு ஒப்பான்.

தன்னைப்பற்றின சிஷ்யர்களை நற்கதி அடைவிக்க ஞானமநுஷ் டான மிரண்டும் தேவை.

துயிலணை மேல் கண்வளரும்

பாயும் நீரரங்கந் தன்னுள் பாம்பணைப்பள்ளி கொண்ட என்கிறபடியே அரவணையில் பள்ளிகொள்ளும் மாயனைக்கண் களால் சேவிக்கும். ஆக - அழகிய மணவாளனை எப்போதும் சேவித்துக் கொண்டிருக்கும் எம்பெருமானுர் என்றதாயிற்று.

மாமான்

லோகமாதாவான கோதையால் அண்ணன் என்று அழைக்கப்பட்டு அனைவர்க்கும் மாதுலராய் அனைத்து ஆசார்யர்களுக்கும் ஸ்வாமியாய்.

மகளே

மகள்போலே ஆசார்யருக்கு பரதந்த்ரரான எம்பெருமானுரே.

acharya.org

மணிக்கதவம் தாள் திறவாய்

மணி - மணியே மணிமாணிக்கமே மதுசூதா என்கிற எம்பெருமானுடைய அநுபவம்.

கதவம் - தடையை

தாள்திறவாய் - நீக்காய்

பகவதநுபவத்துக்குத் தடையாக உள்ளவை ஐச்வர்யகைவல்யங்கள். அதில் மனம் செல்லாது காத்திட வேண்டும்.

மாமீர்

அவருக்கும் மந்த்ரோபதேசம் பண்ணின பெரிய நம்பியே.

அவளை எழுப்பீரோ!

ஆத்மாவுக்கு பாகவத சேஷத்வமே நிலைநின்ற புருஷார்த்தம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு முகம் தந்து அவர்களோடு கலந்து, அவர்களுக்கு முகோல்லாஸத்தைப் பிறப்பிக்கை ஸ்வரூபம் என்று உணர்த்தவேணும்.

உன் மகள் தான்.

உமக்கு புத்ரன் போலே பாரதந்த்ரயமுடைய யதிராஜர்

ஊமையோ!

பிறரை பழிப்பதில் ஊமையோ!

ஆயுர்வைக்ருதம் (अयुर्वै घृतं) என்றால் நெய் ஆயுளை அளிப்பது போலே சொல்லாற்றலால் ஊமைக்கு மோக்ஷமளித்து பெறப்படும்.

அன்றி

அல்லது

acharya.org

செவிடோ?

பிறர் பழியை / அவச்சொல்லை கேளாமலிருப்பதற்கு செவிடோ?

யாதவ ப்ரகாசன் கூறிய அபார்த்தத்தைக் கேளாதே, வேதத்தின் உண்மைப் பொருளை விளக்கினவர் என்று கருத்து.

அனந்தலோ

சோம்பல் - மயக்கம்.

நன்மை பெறத் தன் முயிற்சி செய்யாமையாகிற சோம்பலோ. காம்பறத்தலை சிரைத்து உன்கடைத் தலையிருந்து வாழும் சோம்பலோ? பகவதநுபவ மயக்கமோ?

பொன்னரங்கமென்னில் மயலே பெருகு மிராமாநுசனல்லவா?

மந்திரப் பட்டாளோ

1. மையலேற்றி மயக்க உன்முகம் மாயமந்தி ரந்தான் கொலோ என்கிறபடியே (சூடிக்கொடுத்தவள் பாசுரம்) பெய்யு மாமுகில் வண்ணனாய் செய்ய தாமரைக் கண்ணனாய் என்னரங் கத்தின்னமுதனை அழகிய மணவாளனுடைய ஸுஸ்மி-தோல்ஸாஸ சுபகமாய் அகலங்கச்சி மண்டலம் போன்ற திருமுக மண்டலத்திலே ஆழங்கால்பட்டாரோ?

2. மந்த்ரரத்னமாகிய திருத்வய மந்திரப் பொருளில் அகப்பட்டாரோ?

எம்பெருமானுடைய திருவடிகளையொழிய ப்ராப்ய ப்ராபகங்கள் இல்லை என்று உறுதி கொண்டவர் என்று கருத்து.

ஏமப்பெருந்துயில்

துயில் : உறக்கம்

பெருந்துயில் மற்றொன்றினைக் காணாவே என்றும்,

acharya.org

'யத்ர நாந்யத் பச்யதி' என்றும் சொல்லுகிறபடியே வேறொன்றில் மனம் செல்லாது ''அம்ருதஸாகராந்தர்நிமக்ன ஸர்வாவயவஸ்ஸுகமாஸீத'' என்று அமுதக் கடலான அழகிய மணவாளனிடம் ஆழ்ந்தாரோ!

ஏமப்பெருந்துயில்

ஸர்வரக்ஷணம் பண்ணும் எம்பெருமானிடம் பாரத்தை அர்ப்பித்து ஸ்வப்ரவ்ருத்தியை விட்டாயோ என்று கருத்து.

மாமாயன்

அன்று ஐவர் தெய்வத்தேரினில் கீதையை ஓதியவன் மாயன். அதன் செம்மைப்பொருள் தெரியச் சொன்ன இராமாநுசன், மாமாயன்

மாதவன்

பெருந்தவமுடையவன்

தவங்களில் சிறந்த ப்ரபத்தியாம் தவமுடையவன்.

தனக்காக அன்றியே பிறர்நன்மைக்காகத் தவம் செய்வது பெருந்தவமாகும்.

ஆச்ரிதரான நமக்காக, திவ்ய தம்பதிகளின் திருவடியில் ப்ரபத்தி பண்ணியவர்.

வைகுந்தன்

1. வைகுந்தமளிப்பவர்.

2. எம்பெருமானுர்க்கு ஸ்ரீவைகுண்டம் இன்பந்தருவது போல இராமாநுசனடியார்க்கு இன்பம் தருவதாகிய எதிராஜர் இணைமலர்த்தாள் இன்பம் தருவதாகையாலே சொல்லுகிறது வைகுந்தமாக.

என்றென்று நாமம் பலவும் நவின்று

எம்பெருமானுர் திருநாமங்களைப் பலகாலும் சொன்னோம். பள்ளிஉணர்த்தவேணும்.

acharya.org

பாசுரம் - 10

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்
நாற்றத்துழாய் முடி நாராயணன் நம்மால்
போற்றப்பறை தரும் புண்ணியனால் - பண்டொருநாள்

கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ
ஆற்ற அனந்தலுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய்வந்து திறவேலோ ரெம்பாவாய்.

நோற்று — *விரதம்பூண்டு*

பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்று அச்சரணன்றி (இரா.நூற்றந்-45)

உரை :-

பேறொன்று மற்றில்லை — ஆசார்யனை ஒழிய வேறு ஒரு ப்ராப்யம் (அடையவேண்டியபலன்) இல்லை. ப்ரதமபர்வத்துக்கும் சரமபர்வத்துக்கும் உள்ளவாசி அறியாதவர்களுக்குத்தான் ப்ரதம பர்வம் ப்ராப்யமாகிறது.

அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்றச்சரணன்றி

அந்தப்ராப்யம்பெறுகைக்கு அத்திருவடிகளை யொழிய வேறு உபாயமில்லை. பரமபதமும் ப்ராப்யமன்று பக்தியோகமும் ப்ரபத்தியும் உபாயமல்ல. தீதில் சரணாகதி தந்தவன்தானே உபாயமாகும் என்கிறபடியே, தூய்நெறிசேர் எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம்கதி பெற்றுடைய இராமாநுசனைகயாலே ஆசார்யன் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமும் என்றிருக்குமவராய்.

acharya.org

சுவர்க்கம்புகுகின்ற

நல்வேதியர்கள் தொழும் திருப்பாதனிராமாநுசனை என்கிறபடியே அடியார் குழாத்தில் கலந்திருக்கின்ற சுவர்க்கம் - நல்லகோஷ்டி.

உன்தொண்டர்கட்கே அன்புற்றிருக்கும்படி என்கிற படியே அடியார்கள் அன்பு பெற்றிருக்கும்.

அம்மனாய்

ஜகத்குருவாகிய ஸ்வாமியே — இத்தால் - யமுனைத் துறைவராகிய ஆளவந்தாருடைய இணையடிகளையே கதியாகக்கொண்டு ஆசார்யத்யான சுகத்தை அநுபவிக்கின்ற ஸ்வாமியே!

மாற்றமும் தாராரோ

ஆசார்யாநுபவத்தில் முக்கரணங்களும் பொருந்தி யிருப்பதால் செயல் சொல் யாவற்றையும் விட்டு சிந்திப்பே அமையும் என்றிருக்கிறீரோ? சிற்ற வேண்டா சிந்திப் பேயமையும் என்றார் நம்மாழ்வார்.

வாசல் திறவாதார்

சப்தாதி விஷயங்களை அநுபவிக்கைக்கு வாசலான இந்த்ரியங்களை உள்அடக்கி பொன்னரங்கன் வடிவழகில் ஆழங்கால்பட்டீரோ?

நாற்றத் துழாய்முடி

1. எம்பெருமான் சூடிக்களைந்த விரையெடுத்த துழாயலங்கலை முடியிலே சூடிக்களைந்தவர். தொடுத்ததுழாய் மலர்சூடிக்களைந்து சூடுவது ஸ்வரூபமல்லவா?

நாராயணன்

1. நாரங்களை உடையவன் நாராயணன். நாரங்கள் நாம். நம்மை உடையவர் எம்பெருமானார்.

acharya.org

2. பீதகவாடைப்பிரானுர் பிரமகுருவாகி வந்து என்றும், தேனுர் கமலத்திருமாமகள் கொழுநன் என்றும், தானே குருவாகித் தன்னருளால் - மானிடர்க்காய் இந்நிலத்தே தோன்றுவதால் யார்க்குமவன் தாளிணையை உன்னுவதே சாலவுறும். என்றும், साक्षात् नारायणोदेवः कृत्वा मर्त्यमयीं तनुं என்றும். சொல்லுகிறபடியே எம்பெருமானுடைய அவதாரமானவரே!

நம்மால்

உன்தன் அபிமானமே உத்தாரகமென்றிருக்கும் நம்மால்

உன்தன்அபிமானமே உத்தாரகமென்று

சிந்தைதெளிந்திருக்கச் செய்த .... எதிராசா

நின் திருத்தாள்தா - (ஆர்த்தி ப்ரபந்தம் - 56)

போற்ற

जय यतिराज जय यतिराज என்று வாழ்த்த.

பறைதரும்

புருஷார்த்தமளிக்கும்.

ஞானம் கனிந்த நலம் கொண்டு நாடொறும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன் வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்தவிராமாநுசன் தன்னையெய்தினர்க்கு அத்
தானங் காடுப்பது தன் தகவென்னும் சரண் கொடுத்தே.

(இரா. நூற்றந்தாதி - 66)

என்கிறபடியே க்ருபையாகிற சரணைக் (ஸாதனம்) கைம்முதலாகக் கொடுத்து அத்தானமளிக்கிறுர் எம்பெருமானுர் என்கிறுர் அமுதனுர்.

மாமலராள் கோன்மடியில் வைத்துகக்கும்
வாழ்வு நமக்கு எதிராசன் அருளும் வாழ்வே (ஆர்த்தி - 20)
–என்கிற வாழ்வைத்தந்தவர்.

acharya.org

புண்ணியன்

எம் இராமாநுசன் மிக்கபுண்ணியனல்லவா. (இரா. நூற்-91)

பண்டு ஒருநாள்

முன்பு ஆசார்ய கடாக்ஷம் பெற்ற ஒப்பற்ற நாளிலே

கூற்றத்தின்வாய்வீழ்ந்த

யமனுக்கு இரையான. அழிந்துபோன

கும்பகரணனும் தோற்று

தமோகுணம். அதாவது அஜ்ஞானம். கும்பகரணன் அஜ்ஞானம் அசுரத்தன்மையோடு நமக்குத்துயரை விளைத்தான் (விகாரங்களைப்பிறப்பித்து ஸ்வஸ்வரூப பரஸ்வ ரூபங்களை மறப்பிக்கும்)

ராமபாணத்தால் எமன் வாயில் வீழ்ந்தான். (एतत् रामास्त्रं என்கிற ஆசார்யன் தந்த ஞானமாகிய அம்பினால் அழிந்தது)

பிறரால் அழிக்க முடியாதவன்.

(ப்ரக்ருதியால் ஏற்படுவதாகையாலே கடக்க அரிது.)

ஆக கும்பகரணம் என்பது பாஹ்ய குத்ருஷ்டிகளால் விளைந்த அஜ்ஞானம் என்றதாயிற்று.

உனக்கே

மருள்சுரந்து ஆகமவாதியர் கூறும் அவப்பொருளாம் இருள் சுரந்தெய்த்த உலகிருள் நீங்க - அருள் சுரந்து என்கிறபடியே அஜ்ஞானம் யாவையும் போக்கும் உனக்கே.

acharya.org

பெருந்துயில்தந்தானே

துயில் — அனைத்து இந்த்ரியங்களும் ஓய்ந்து சுகிப்பது.

பெருந்துயில் — பகவதநுபவம் (ப்ருஹதாரண்யக - உபநிஷத் 6.3.2) ஒருவன் தன் ப்ரியமான மனைவியினால் அணைக்கப்பட்டிருக்கும் போது வெளிப்பொருட்களையும் மனதிலுள்ள துன்பம் முதலியவற்றையும் அறிவதில்லை. அதுபோல இந்த ஜீவாத்மா பரமாத்மாவால் அணைக்கப்பட்டிருக்கும் போது வெளிப்பொருள்களையும் மனத்துன்பம் முதலானவற்றையும் அறிவதில்லை.

அல்லது துயில் — பகவதநுபவம்

பெருந்துயில் — ஆசார்யாநுபவம்

புறச்சமயமென்ன குத்ருஷ்டி மதமென்ன இவற்றின் விளைவான அஜ்ஞானம் தொலைந்து பகவத்வகுணாநுபவம் வந்ததோ?

ஆற்ற அனந்தலுடையாய்

எம்பெருமானே உபாயம். பகவதநுபவமே ப்ராப்யம் எனத்துணிந்து ஸ்வரக்ஷணத்தில் தன் முயற்சி ஏதுமின்றிக்கே இருக்கும் வாழும் சோம்பரே!

அருங்கலமே

1. சமதமாதிகள், ஞானபக்திவைராக்யங்கள் முதலிய அணிகலன்களைஉடையவரே

2. ஆ முதல்வன் என்று ஆசார்யன் அபிமானிக்கும்படி ஆசார்யனருளுக்குப் பாத்திரமானவரே!

தேற்றமாய்

தெளிவுள்ளஞானமுடையராய்

வந்துதிற

எழுந்தருளி மனமாசு தீர்த்து ஞானமருளவேணும்.

acharya.org

பாசுரம் - 11

கற்றுக் கறவைக்கணங்கள் பல கறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர் தம்பொற்கொடியே!
புற்றரவல்குல்புனமயிலே போதராய்
சுற்றத்துத்தோழிமாரெல்லாரும்வந்து - நின்
முற்றம்புகுந்து முகில் வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோரெம்பாவாய்.

கற்று

சொல்லார் தமிழான திருவாய்மொழியும் மற்றை மூவாயிரமும் வேதங்களும் வேதார்த்தங்களை வெளியிடும் அளவில்லாத தர்ம மார்க்கங்கள் யாவும் அறிந்தவன் என்கிறபடியே ஸகலசாஸ்த்ரங்களையும் கற்று.

கறவைக்கணங்கள் பலகறந்து

பசுவின் அவயவங்களில் 14 உலகங்கள் உள்ளன - பசுக்களைப்போலே 14 வித்தைகளை தம் முட்கொண்டு ஞானப்பாலை நன்றாகக்கறக்கும் பல ஆசார்யர்களிடமிருந்து ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களைக்கேட்டு,

1. பெரிய நம்பி ...... திருமந்த்ரார்த்தம்

2. பெரியதிருமலை நம்பி ..... ஸ்ரீராமாயணார்த்தம்

3. திருக்கோட்டியூர் நம்பி ..... ரஹஸ்யார்த்தங்கள்

4.திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செயலர்த்தங்கள்

5. திருமாலையாண்டான் திருவாய்மொழிப்பொருள்.

அனைத்து உபநிடதங்களையும் துணையாகக் கொண்ட பல ச்ருதிகளின் தாத்பர்யத்தை ஏற்றவர்.

acharya.org

செற்றூர்

பகவான் குணம், விபூதி, திருமேனி, லக்ஷ்மீ இல்லாதவன் என்கிற குத்ருஷ்டிகளும் புறச்சமயிகளும் ஆகிற பகைவர்கள்.

திறலழிய

அவர்கள் மிடுக்கழியும்படி

சென்றுசெருச்செய்யும்

திசை தொறுமெழுந்தருளி வாதப்போர் நிகழ்த்தும்.

குற்றமொன்றில்லாத

அன்பன் அநகன் இராமானுசன் என்னை ஆண்டனன் (இரா.நூற் -30) என்கிறபடியே உபதேசம் முதலியவற்றில் ப்ரசித்திலாபம் பூஜை இவைகளை எதிர்பாராது. ப்ரீதியாலே உந்தப்பட்டு.

தீதில் இராமானுசன் (இரா.நூற் -42) ப்ரசித்தி, லாபம், கௌரவம் இவற்றை எதிர்பாராது பாண்டித்யத்தைக் காட்டுவதற்குமில்லாது. என்கிறபடியே குற்றம் ஏதுமில்லாதவர்களான

கோவலர்

1. நாவீறுடையவர்கள்

2. அரசர்களையும் வசமாக்கிக்கொண்டவர்களுமான நாதமுனி - ஆளவந்தார் போல்வார்.

தம்பொற்கொடியே

அவர்கள் வளர்த்த அழகிய கொடிபோன்றவரே.

நான் எம்பெருமானாரைத் தஞ்சமாக உடையவன். எம்பெருமானார் ஆளவந்தார் ஜ்ஞான பரம்பரையில் உதித்தவர். அவர் நாதமுனிவம்சத்தவர் என்கிறார் கூரத்தாழ்வான் (வர. ஸ்தவம் - 102)

acharya.org

கொடி:- கொள்கொம்பைப்பிரிந்தால் வாடும். எம்பெருமானாரும் எம்பெருமானைப்பிரிந்தால் வாழ மாட்டாதவர். பரமபக்தி நிலையெடுத்தவர்.

புற்றரவல்குல்

புற்றிலே அடங்கின ஸர்ப்பம் போன்ற அல்குலைஉடையவர் அதாவது பகவானுடைய அநுபவத்துக்கு உபகரணமான பக்தியை உடையவர்.

श्रुतिशिरसि विदीप्ते ब्रह्मणि श्रीनिवासे
भवतु मम परस्मिन् शेमुषी भक्तिरूपा ॥

(ஸ்ரீ பாஷ்யம் மங்களச்ச்லோகம்)

திருவாய்மொழியில் பக்தியுடையவர்.

.... தென் குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ்தன்னைத்
தன்பத்தியென்னும்
வீட்டின் கண்வைத்த இராமாநுசன். (இராம.நூற்.29)

புனமயிலே

1. மயிலுள்ளவிடத்திலே தீயஜந்துக்கள் நெருங்காது. எம்பெருமானாருள்ளவிடத்தே கலியோ, குத்ருஷ்டிகளோ, புறச்சமயிகளோ நெருங்கமுடியாது.

2. மயில்தோகை விரித்து ஆடிமகிழும். எம்பெருமானாரும் ப்ரஹ்மஸூத்ர. கீதைகளின் கருத்தை விரிவானவிளக்கம் எழுதிமகிழ்வர்.

3. மயில்மேகத்தைக் கண்டு ஆடும். ஸ்வாமியும் முகில் வண்ணனும் அழகிய மணவாளனைஸேவித்து அகமகிழ்வர்.

4. மயிலுக்குத் தோகை. யதிராஜருக்கு பகவான் - அடியார் - ஆசார்யன் இவர்கள் திறத்தில் மயலே பெருகி இருப்பர்.

acharya.org

போதராய்

जय यतिराज जय यतिराज என்று அனைவரும் போற்றும்படி இக்கோஷ்டியை எழுந்தருளி அலங்கரிக்க வேணும்.

சுற்றத்து

தேஹபந்துவாயுள்ள எம்பார் ஆண்டான் போல்வார்

தோழிமார்

ஸம்பந்தஜ்ஞானமுடையராய் ஆத்மபந்துக்களான ஆழ்வான். அருளாளப்பெருமாள் எம்பெருமானார், வடுக நம்பிபோல்வார்.

எல்லாரும்வந்து

அனைவரும் வந்து

700 துறவிகள் சேவிக்கும்படி இருப்பவரே. ஸகலசாஸ்த்ரங்களையும் கரை கண்ட ஸதாசார்யர்களாலும் பல ஏகாந்திகளாலும் சேவிக்கத்தக்கவரே. திருப்பள்ளி எழுந்தருளவேணும். (ராமானுஜஸுப்ரபாதம் - சுலோ 14)

நின்முற்றம்புகுந்து

முற்றம் — எல்லைநிலம். அடிமையின் எல்லை நிலமான (சரமபர்வமான) தேவரீருடைய திருமாளிகைவாசலிலே புகுந்து

முகில்வண்ணன் பேர்பாட

முகில்வண்ணனாகிய அழகிய மணவாளன் திருநாமத்தை ஆர்வமுடன்பாட

acharya.org

சிற்ருதே பேசாதே

சொல்லும் செயலும் வேண்டாதே பகவதநுபவமாகிய சிந்திப்பே. சிற்றவேண்டா சிந்திப்பே அமையும் என்கிருர் நம்மாழ்வார்.

சிற்றவேண்டா = சிதறவேண்டா. எந்த முயற்சியும் வேண்டா. எம்பெருமானே தஞ்சம் என்ற சிந்திப்பே போதும் என்று கருத்து

செல்வப்பெண்டாட்டி

1. பகவத் குணநுபவகைங்கர்யங்களாகிற செல்வமுடைய அல்லது

2. இராமாநுசன் என்தன்மாநிதியே (இரா.நூற் - 20) என்கிறபடியே எங்களுக்குச் செல்வமாய்.

உறுபெருஞ்செல்வமும் தந்தையும் தாயுமுயர் குருவும்
வெறிதருபூமகள் நாதனும் மாறன் விளங்கிய சீர்
நெறிதரும் செந்தமிழாரணமே என்றிந்நீணிலத்தோர்
அறிதரநின்ற இராமாநுசன் எனக்காரமுதே. (இரா.நூற் - 19)

என்கிறபடியே திருவாய்மொழியாகிய செல்வ முடையவரே.

3. பெண்போலே பாரதந்த்ர்யமுடையவரே!

எற்றுக்குறங்கும் பொருள்.

ஆத்மாவின் அற்பமாய் ஸாரமில்லாத சப்தாதிவிஷய நுகர்ச்சியைப்போக்கி உய்விக்க அவதரித்த தேவரீர் அவ்விஷயப்ராவண்யம் நீங்கி தேவரீர் திருவடியை நாடி வந்தபிறகும் உறங்கலாமா? திருப்பள்ளிஎழுந்தருள வேணும்.

acharya.org

பாசுரம் - 12

கனைத்திளம் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலைவீழ நின்வாசல் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கினியானைப்பாடவும் நீவாய் திறவாய்
இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாருமறிந்தேலோ ரெம்பாவாய்.

கனைத்து

ஸம்ஸாரிகளை உபதேசம் முதலானவற்றாலே திருத்திப்பணிகொள்ளுகைக்காக, அவர்கள் நிலையை எண்ணிக் குமுறி.

ஓராண் வழியாக பூர்வர்கள் உபதேசித்துப் போந்த நியமத்தைக்குலைத்து பலரையும் உபதேசிக்கும்படி பண்ணியும் பலகால் நடந்து துவண்டு கேட்ட பரமார்த்தத்தை ஓலக்கமாக வைத்து உபதேசித்ததும் ஸம்ஸாரிகள் படும நர்த்தம் கண்டு பொறுக்கமாட்டாதஸ்வபாவம் - (ஆசார்ய ஹ்ருதயம் - சூர்ணை 3-55 மாமுனிகள் உரை)

இளம்கற்றெருமை

இளமையான கன்றுகளை உடைய எருமை. அதாவது இளமையான சிஷ்யர்களைக் கொண்ட ஆசார்யன் இளமை நிறைந்த ஆசார்யன். பின்புவரப்போகும் கன்றுகளை நினைத்துக் கனைத்து இரங்கும் பொய்கையாழ்வார் போல்வாரை எருமை என்கிறது. உருவத்திலும் வயதிலும் சிறுத்து நினைத்துகனைத்து இரங்கும் நம்மாழ்வாரை கற்றெருமை என்கிறது. தன் நிர்ஹேதுகக்ருபையாலே அர்த்தத்தை உபதேசித்த எம்பெருமானாரை இளம் கற்றெருமை என்கிறது.

acharya.org

கன்றுக்கிரங்கி

சிஷ்யர்களிடம், ஸம்ஸாரிகளிடம் இரங்கி

நினைத்து

அவர்கள் அபேக்ஷிப்பதாக நினைத்து

முலைவழியே

நான்கு வேதங்கள் வழியாக

நின்றுபால்சோர

ஆத்ம வாழ்வுக்குரிய ஞானப்பாலை இடைவிடாது பொழிய

நனைத்து இல்லம் சேருக்கும்

1. ஆச்ரிதருடைய உள்ளத்தை நனைத்து கண்ண நீர் பெருகவைத்து அன்பு செய்விக்கும்

2. தன்னையே பற்றின சிஷ்யர்கள் உள்ளத்தை ஸாம்ஸாரிகமான தாபமெல்லாமாறும்படி குளிரப்பண்ணி

நற்செல்வன்

ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்துப்போந்த செல்வமுடைய எம்பெருமானாருடைய.

தங்காய்

தன்கைபோன்றவரே. ராமனுக்கு வலதுகை இலக்குவன். நம்மாழ்வாருக்கு வலதுகை மதுரகவிகள். எம்பெருமானாருக்கு முதலியாண்டான். அத்துழாய்க்குச் சீதனவெள்ளாட்டியாக ஆசார்யநியமனத்தால் சென்றவராயிற்றே.

acharya.org

பனித்தலைவீழ

ஆசார்ய கடாக்ஷம் ஏற்படும்படி. பனி தேஹத்தை பாதிக்கும். ஆசார்ய கடாக்ஷம் பகவதநுபவத்தை விலக்கும். ஆசார்ய ரவியினால் அகல்வதாயிருக்கும்.

1. ஈச்வரஸம்பந்தம் பந்த மோக்ஷங்களுக்குப் பொதுவானது. அதில் அபேக்ஷையறும்.

2. முதல் நிலையான பகவத்விஷயத்திலிருக்கும் நாங்கள் அதனை உபேக்ஷித்து ஆசார்ய நிஷ்டையான.

நின்வாசல் கடைபற்றி

வாசல்+நின்கடைபற்றி, ப்ராப்யமான தேவருடைய கடாக்ஷம்பெற்று.

சினத்தினால்

கோபத்தால்

தென்னிலங்கைக் கோமானைச்செற்ற

தென்னிலங்கை - தேஹம்

கோமான் - அரசன்

இலங்கை அரசன் இராவணன் 10 தலைகளை உடையவனாயிருந்ததுபோல சரீரத்து அரசன் மனம். அது பத்து இந்த்ரியங்களை உடையது. அதை அழித்த.

மயக்கும் இருவினைவல்லியில்பூண்டு மதிமயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை (இரா.நூற் - 101)

வளர்ந்த வெங்கோபமடங்கலொன்றாய் மெய்வினை நோய்
களைந்து நல்ஞானமளித்து உய்வித்த இராமாநுசன்
(இரா.நூற் - 103)

acharya.org

மனத்துக்கினியானை

இராமானுசன் எனக்காரமுதே என்றும், உன்சீரே உயிர்க்குயிராய் அடியேற்கு இன்று தித்திக்குமே என்றும் அமுதனார் சொல்லுகிறபடியே மனத்துக்கினியராகிய எம்பெருமானாரை

பாடவும்

நாப்படைத்தபயனாகப்பாடியும்

நீ

ஆசார்யாபிமானநிஷ்டரான தேவரீர்

வாய்திறவாய்

சோதிவாய் திறந்து நல்வார்த்தை அருளவேணும்.

இனித்தான்

ஆசார்யாபிமானமுடையார் பலர் வரப்பெற்ற பின்பாவது

எழுந்திராய்

எழுந்தருளவேணும்

ஈதென்ன பேருறக்கம்

பகவதநுபவம் உறக்கம். ஆசார்யாநுபவம் பேருறக்கம்.

ஆசார்யாபிமானமுடையாரோடு கூடி ஆசார்யாநுபவம் பண்ணுவதேஸ்வரூபம். அவர்கள் கிட்டியபின்பு (அவர்களை நீக்கி) ஆசார்யாநுபவம் ஸ்வரூபமல்ல.

அனைத்தில்லத்தாருமறிந்து

ஆசார்யவைபவம் (யதிராஜவைபவம்) உலகமெல்லாம் அறிந்தது.

acharya.org

பாசுரம் - 13

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லா அரக்கனை
கிள்ளிக்களைந்தானைக்கீர்த்திமைபாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளியெழுந்துவியாழமுறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண்போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக்குடைந்து நீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய்.

புள்ளின் வாய்கீண்டானை.

புள்-கொக்கு-தீயபட்சி. கண்ணனை அழித்து கோபிமாருக்கு துக்கம் விளைக்கவந்தது.

இங்கு, தீயதான விரோதி-மதம் எம்பெருமானையும் குணவிக்ரக விபூதியையுமழிக்க வந்தது. பறவைக்கு 2 வாய்போலே விரோதிமதம் இரண்டு 1. பாஹ்யமதம் 2. குத்ருஷ்டிமதம். அவ்விரண்டையும் தம் ஆசார்யகடாக்ஷத்தால் பெற்ற கடலளவாயஞானத்தினால் அழித்தவரை

1. கூறும் சமயங்கள் ஆறும் குலைய (இரா.நூ.46)

2. அறுசமயச் செடியதனை அடி அறுத்தான் வாழியே
(ஆர்த்தி 31)

3. பேதையர் வேதப்பொருள் இதென்று உன்னி - பிரமம்
நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிரும் அஃதென்று உயிர்கள் மெய்விட்டு

acharya.org

ஆதிப்பரனோடொன்றுமென்று சொல்லுமவ்வல்ல
லெல்லாம்
வாதில் வென்றான் எம்இராமாநுசன் மெய்ம்மதிக்கடலே
(இரா, நூற். 58)

— என்று பேசப்படும் எம்பெருமானாரை.

பொல்லாஅரக்கனை

பத்துதலைகளை உடைய இராவணனைப் போன்ற பத்து இந்த்ரியமுடைய மனம்

இராவணன் மனம்

(அ) 1. ராமன் பத்னி சீதையை அபஹரித்து அசோக வனத்தில் சிறைவைத்தான்.

2. ராமன் அம்புகளால் அவன் தலைகளை அறுத்துக் கொன்றான்.

(ஆ) 1. மனம் பரமாத்மாவின் உடைமையான ஆத்மாவை அபஹரித்து உடலில் சிறை வைத்தது.

2. ஆசார்யன் தன் அருளால் இந்த்ரியங்களை அடக்கி மனத்தின் தீமையை அழித்தான்.

ஐம்புலன்கள் மேலிட்டடரும் பொழுதடியேன் உன்பதங்கள்
தன்னை நினைந்தோல மிட்டால் - பின்பவைதான்
என்னையடராமல் இரங்காய் எதிராசா!
உன்னையல்லாதாரெனக்குண்டோ! (ஆர்த்தி - 42)

— என்கிறபடியே

acharya.org

கிள்ளிக்களைந்தானை

அநாயாஸமாக அழித்தவரை

கீர்த்திமை

'காரேய்கருணை' என்கிறபடியே, கிருபையென்னும் குணத்தை பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப என்றும், ஒன்னலர்நெஞ்சம் அஞ்சிக் கொதித்திட என்றும் கூறப்படுகிற வீரத்தை.

பாடிப்போய்

ப்ரீதிக்குப்போக்குவீடாகப்பாடி - அதுவே தாரகமாகப் போய்.

பிள்ளைகள் எல்லாரும்

ஆசார்யபரதந்த்ரராய் - ஆசார்யாபிமானம் பெற்ற அடியார்களனைவரும்.

பாவைக்களம்

ஆசார்யபரதந்த்ரர் அனைவரும் கூடும் காலக்ஷேப கூடம்

புக்கார்

வந்துபுகுந்துவிட்டனர்.

வெள்ளிஎழுந்து

சூரிய உதயத்திலே வெள்ளி எழும். அதாவது சுத்த ஸத்வமான காலத்திலே நல்ஞானம் தலை எடுத்து.

வியாழமுறங்கிற்று

சூரிய உதயத்தில் மறைந்து இரவில் உதிக்கும் வியாழன். அது போன்று அஜ்ஞானம் தலைமடிந்தது.

acharya.org

புள்ளும் சிலம்பினகாண்

ஞானமும் அநுட்டானமும் நிறைந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பள்ளியுணர்த்துகின்றனர்

இரண்டு அன்னப்பக்ஷிகள் ஜானச்ருதி என்கிற மன்னனுக்கு வேதாந்த ஜ்ஞானத்தை ரைக்வரிடம் பெறத்தூண்டினது போல - தேவரீர் வைபவம் கூறி தேவரிடம் நல்ஞானம் பெறத்தூண்டு கோலாக இருப்பவர்கள்.

போதரிக்கண்ணினாய்

1. ஆசார்யனுடைய திருவடித்தாமரைகளில் பதிந்த வண்டு போன்ற கண்களை உடையவரே!

रामानुजार्यचरणाम्बुजचंचरीक *என்பதுபோல*

2. புஷ்பங்களை அரிப்பதில் கண்ணுடையவரே!

ऋग्वेद एव पुष्पं, यजुर्वेद एव पुष्पं, सामवेद एवं पुष्पं, इतिहासपुराणं पुष्पं *என்கிறபடியே,*

வேதங்கள், இதிஹாஸபுராணங்கள் ஆகிய புஷ்பங்களின் ஸாரார்த்தங்களை சுவைப்பவர்களே

குள்ளக்குளிர

ஆத்மா ஸகல தாபங்களும் நீங்கி, அந்தமில்பேரின்பம் அடையவேண்டி

குடைந்து நீராடாதே

தஹரவித்யையில் கூறியதுபோல மிகச்சிறிய இதயத்தில் (தஹராகாசத்தில்) உள்ள பகவானையும் அவனுள்ளே இருக்கும் குணங்களையும் தேடி அநுபவிக்கவேண்டும் என்கிறபடியே, குடைந்து குணாநுபவம் பண்ணாதே அல்லது ஆசார்யன் திருமேனியையும் குணங்களையும் அநுபவியாதே.

acharya.org

பள்ளிக்கிடத்தியோ

பாகவதர்களையும் ஆசார்யனையும் மறந்து தனிஅநுபவம் பண்ணுகிறாயோ?

பாவாய்

நிருபாதிகமான ஆசார்யபாரதந்த்ர்யமுடையநீர்

நன்னாள்

ஆசார்யாநுபவம் (யதிராஜாநுபவம்) வாய்த்த நன்னாள்

கள்ளம் தவிர்ந்து

1. தனியே பண்ணும் ஆசார்யாநுபவம் தவிர்ந்து

2. ஆசார்யநிஷ்டரான தேவரீரல்லவா ப்ராப்யம்?

அதைத் தராது ஒளித்தலைத்தவிர்ந்து.

கலந்து

எங்கள் கோஷ்டியில் கலந்து.

பாசுரம் - 14

உங்கள் புழைக்கடைத்தோட்டத்துவாவியுள்
செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல்பொடிக்கூறைவெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்.
எங்களைமுன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்
பங்கயக்கண்ணானைப்பாடேலோரெம்பாவாய்.

acharya.org

உங்கள்

1. திருமந்திரத்தில் கூறிய அநந்யார்ஹசேஷத்வ - அநந்ய சரணத்வ - அநந்யபோக்யத்வங்களாகிற பண்புகளையும் ஆசார்யாபிமானமுமுடையரான உங்களுடைய

புழைக்கடை

வீட்டின் பின்புறம் சோலை இருக்கும். அங்கு தான் விளையாடுவதும் சிரமபரிஹாரம் பண்ணுவதும் நடக்கும். ஆதலால் விஹாரஸ்தானமான (விளையாடுமிடமான)

தோட்டம்

1. निवासवृक्षः (ராமாயணம் கி. காண்டம்) என்றும் वासुदेवतरुः என்றும் (சாதுக்கள் வசிக்கும் மரம். வாஸுதேவனாகிய மரம்) சொல்லுகிற பரவாஸுதேவன் மரம்.

2. தோட்டம் - பல மரங்கள் நிறைந்திருக்கும். வ்யூஹ விபவ அர்ச்சா - அந்தர்யாமி என்பவை பல மரங்கள். இப்படி பல நிலைகளைக் கொண்ட பரவாஸுதேவனே தோட்டம்.

எம்பெருமானாரே சரணமென்றிருக்கிற உங்களுக்கு சிரமபரிஹாரம் செய்யவல்ல எம்பெருமானாராகிற தோட்டம்.

जयति सकलविद्यावाहिनी जन्मशैलः
जनिपथपरिवृत्तिश्रान्तविश्रान्तिशाखी

(யதிராஜ ஸப்ததி - 28)

ஸம்ஸார மார்க்கத்தில் பிறப்பு இறப்புகளில் உழன்றதால் சிரமமடைந்தவர்கள் சிரமத்தைப்போக்கும் மரம். வெயிலில் களைத்தவர்களுக்கு மரம், நிழலைத்தந்து, சிரமத்தைப் போக்கி பின்பு, பழங்களைத்தந்து, புஜிப்பிக்கும்.

acharya.org

எம்பெருமானும், ஸகல தாபங்களையும் போக்கி ஆநந்தா நுபவத்தையும் கொடுப்பர்.

निगमपथिकच्छायाशाखी (யதிராஜஸப்ததி - 46)

வேதமார்கத்தில் ஸஞ்சரிப்பவர்களுக்கு நிழல் தருமரம். பாதையில் நடந்துசெல்வதால் வெயிலில் வாடினவனுக்கு வழியில் பலகிளைகளையுடைய திவ்யமான பழங்களைக் கொடுக்கும் நிழல் தருமரங்கள். அந்தமரத்தின் நிழலில் இளைப்பாறிபழங்களையும் உண்டு சுகிக்குமாபோலே.

பராவர தத்வங்களை உள்ளபடி அறிகைக்காக வேதார்த்த விசாரம் பண்ணி, யாதவ பாஸ்கரர் முதலானோராலே கலங்கிய அர்த்தத்தை நிர்ணயம் பண்ண முடியாதே க்லேசித்தவன், வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யரான உடையவரைக் கிட்டினால், க்லேசமில்லாமல் அர்த்த நிர்ணயம் பண்ணித்தந்து பரமபுருஷார்த்தமுமளிப்பார்.

எம்பெருமான் ஒரு தோட்டம்.

अरविन्दितं अंघ्रिपाणिवक्त्रैः अपि तापिञ्छितं अश्चिताङ्गकान्त्या
अधरेण च बन्धुजीवितं श्रीः नियतं नन्दनयेत रंगचन्द्रं ॥
(ஸ்ரீரங்க - ஸ்தவம் 1-84)

நந்தவனத்தில் தாமரை மலர்களும் பச்சிலை மரங்களும். கோவைப்புஷ்பங்களும் நிறைந்திருக்கும். நம்பெருமாள் திருவடி திருக்கரம் திருமுகமண்டலம் தாமரைமலர்கள். பச்சைமாமலை போல் மேனி பச்சிலை மரங்கள். பழுப்பேறின திருவதரம். ஆக நந்தனவனமான பெரியபெருமாள் பிராட்டிக்கு விளையாட்டுஸ்தலம்.

3. எம்பெருமானாகிற மரத்தையுடைய நம்பெருமாள்.

acharya.org

வாவியுள்

வாவி (குளம்) தோட்டத்தின் வளர்ச்சிக்கும் அழகுக்கும் ஆதாரமாயிருக்கும். எம்பெருமான் அல்லது எம்பெருமானு ருடைய பெருமைக்குக் காரணம். திருவாய்மொழி. வளர்ச்சியாவது குணங்கள் பரவுகை - திருவாய்மொழியால், எம்பெருமானுடைய குணங்கள் பரவின. எம்பெருமானு ருடைய வ்யாமோஹகுணம் ப்ரகாசமடைந்தது.

செங்கழுநீர்வாய் நெகிழ்ந்து

(அதனால்) சுத்தஸத்வஜ்ஞானம் தலையெடுத்தது.

ஆம்பல்வாய் கூம்பினகாண்

அஜ்ஞானம் தலைமடிந்தது.

செங்கல்பொடிக்கூறை

காஷாயவஸ்த்ரமணிந்த, ஸந்யாஸிகளும்.

வெண்பல் தவத்தவர்

நீயே உபாயமாக வேணும் என்று பல்லைக்காட்டி, யாசிக்கும் ப்ரபந்நர்களான, ஸ்ரீவைஷ்ணவர்கள்.

— கோயில்

சேஷியான எம்பெருமான் உள்ள இடம். சரமச்லோகத்தாலே ஈச்வரனாலே பேறு என்கிறது. (சரமச்லோக ப்ரகரணம்)

— திருக்கோயில்

பிராட்டிக்கு உறைவிடமான த்வயம். த்வயத்தாலே பெரிய பிராட்டி, யாராலே பேறுகையாலே.

acharya.org

தங்கள் திருக்கோயில்

ஆத்மாவின் உறைவிடம். ஆத்மஸ்வரூபம் கூறும் திருமந்த்ரம்.

சங்கு

ஞானம். அதாவது மேல்கூறிய ரஹஸ்யத்ரய ஜ்ஞானத்தை

இடுவான்

அளிப்பதற்காக. அதாவது ஆகாரத்ரய ஸம்பந்நராய்த் திருத்தித்திருமகள் கேள்வனுக்கு ஆக்குகைக்காக

போகின்றார்

போகிறார்கள்.

எங்களை

அடியோங்களை

முன்னம் எழுப்புவான்

முன்பு பரம பதத்தில் ஜ்ஞாநாதிகராக்குகைக்காக

வாய்பேசும்

1. எம்பெருமான் ஸ்ரீவைகுண்டத்தில் ஆதிசேஷனை நோக்கி "ஆளவந்தார் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை வளர்க்கும். தலைவரைத் தேடி வருந்துகிறார். நீர் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்து முக்திமார்க்கத்தை ஓராண்வழியாக உபதேசித்துவருகின்ற பல ஆசார்யர்களை உபதேசத்தால் அனைவரும் உணரும்படிசெய்யும்" என்று அருளிச் செய்தார்.

2. பிறந்து தோன்று மாறனைப் போல் பெருநீர் சூழ்ந்த
புவியினமை
மறந்தியங்குமானிடர்க்கு மாசில் ஞானமளித்து அவர்கள்
சிறந்த செய்கை சொல் சிந்தை என்பால் ஆக்கும்படி
செய்தங்கு

acharya.org

அறந்தன் நிலையை வழுவாமல் நிறுத்திவா
என்றருள் செய்தான்

— என்கிறபடியே ரஹஸ்யமாக வாய்மலர்ந்து அருளப்பெற்று, அவதரித்த.

நங்காய்

பொறை, கருணை, ஜ்ஞானம் முதலிய குணம் நிறைந்த எதிராசா!

நாணுதாய்

கர்வமில்லாது, தன்னடக்கமுள்ளவரே!

நாவுடையாய்

எம்பெருமானைப்பற்றிப்பேசவும் பிறருக்கு ஞான மளித்து திருத்திப் பணிகொள்ளவும் வல்ல நாவன்மை உடையவரே!

சங்கொடுசக்கரமேந்தும் தடக்கையன்

சங்கசக்ரங்களைத் தரிக்கும் விசாலமான திருக்கையையுடையவனும்

பங்கயக்கண்ணானை

ஸ்ரீவைகுண்டத்தில் நித்யமுக்தர்கள் ஸாமகானம் பண்ணி இருப்பர்கள். அதுபோன்று ஸாமவேதஸாரமாய் பொன்னிவர்மேனி என்கிறபடியே எம்பெருமானுடைய கண்ணழகைக்கூறுகின்றதுமான திருவாய்மொழி அநு-ஸந்தானம் பண்ண. அன்றிக்கே, சங்கசக்ரகதாபாணியான எம்பெருமான் அன்றலர்ந்த தாமரை போன்ற கண்ணையுடையவன் என்று ஆழ்வார் பாசுரம் கொண்டு நிர்ணயித்தபடி.

பாட

ஆர்வத்தால் பாடுகைக்கு பள்ளியுணர வேணும்.

acharya.org

பாசுரம் - 15

எல்லே இளங்கிளியே இன்ன முறங்குதியோ?
சில்லென்றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லைஉன்கட்டுரைகள் பண்டே உன்வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானே தானுயிடுக
ஒல்லை நீபோதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானைகொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப்பாடேலோ ரெம்பாவாய்.

இளங்கிளியே என்கிறது கூரத்தாழ்வானை.

பெருமாள் திருமொழி தனியன் :-

'இன்னமுதமூட்டுகேன் இங்கே வாபைங்கிளியே'

உரை — அற்றபற்றர் அபிமானத்திலே அல்லது ஆசார்யாபிமானத்திலே ஒதுங்கிப் போருகிற ஆழ்வான் போல்வாரைபைங்கிளி என்கிறார்.

கிளி கற்பித்ததே சொல்லுமாபோலே இவரும் ஆசார்யன் கற்பித்ததையே சொல்லுவர். மேல் சொல்லமாட்டார்.

பாலும் அமுதமும் இன்னடிசிலும்ஊட்டி கிளி வளர்க்கப்படும். இவரும் தேனும் பாலுமமுதுமாய திருமால் திருநாமத்தை ஊட்டிவளர்க்கப்பெற்றார். கிளிபசுத்து மரகதம் போலே இருக்கும். இவரும் உள்ளத்தால் பசுமைபெற்றிருப்பர்.

இன்ன முறங்குதியோ

ஆசார்யாநுபவத்துக்கு ஸப்ரஹ்மசாரிகளான அடியார் குழாம் கூடியபின்பும் உறங்கலாமா?

1. எம்பெருமானார் திருவடிகளே உபாயமென்கிற உறுதிகொண்டு.

acharya.org

2. श्रीरंगधामनि यथापुरं एकतोऽहं रामानुजार्यवशगः परिवर्तिषीय என்கிறபடியே எம்பெருமானார் திருவடி நிழலில் அவருக்குப்பாரதந்திரராய் இருக்குமிருப்பை விரும்பி எம்பெருமானார் அநுபவத்திலே பகவதநுபவத்தையும் மறந்தவரே!

ஆழ்வான், எம்பெருமானார் சம்பந்தத்திற்குத் தடையான பகவத்சேவையும் வேண்டாமென்று வெறுத்தவரல்லவா?

சில்லென்று அழையேன்மின்

रामानुजांघ्रिशरण எம்பெருமானார் திருவடியே சரணமென்றிருக்கிறவனான அடியேன் யதிராஜாநுபவத்துக்குத் தடையாக ஆரவாரம் செய்யாதீர்கள்.

நங்கைமீர்போதர்கின்றேன்

ஆசார்யாபிமானமும் ஆசார்யபாரதந்த்ர்யமும் ஆசார்ய க்ருபையும் பூர்ணமாக உடையவர்களே இதோ விடை கொள்ளுகின்றேன்.

வல்லை உன்கட்டுரைகள்

வைஷ்ணவர்கள் பரஸ்பரம் நைச்யத்தை விரும்பியிருக்க வேண்டுமாதலால் நாங்கள் உமக்கு தாசனாய் நீசரான எங்களை பூர்ணர்களே என்று ஏறிட்டுச் சொல்வதில் நீர்வல்லவர்.

பண்டே உன் வாயறிதும்

உம்முடையவாக்கு வன்மையை முன்னமே அறிவோம். எம்பெருமானாருக்கு ஆத்மஸ்வரூபம் சொல்லும் போது உமது வாக்குவன்மை அறிந்தோம்.

acharya.org

வல்லீர்கள் நீங்களே

அடியேனுடைய யதிராஜானுபவத்துக்குத்தடையாக வல்லைஉன்கட்டுரைகள் என்றும், இன்னமுறங்குதியோ என்றும், பழிசொல்லும், நீங்களன்றோ வல்லீர்கள்.

நானேதானாயிடுக

பாகவத சேஷத்வமே புருஷார்த்தம். அவர்களிடும் பழியும் ஏற்பதே ஸ்வரூபம். ஆதலால் வல்லவன் நானே தானாயிடுக என்கிறார்.

ஒல்லை நீபோதாய்

அபராதம் உணர்ந்தீராகில் சடக்கெனப்புறப்பட்டு சாதுகோஷ்டியுள் சேருவதே நலம். சாதுகோட்டியுள் கொள்ளப்படுவாரே, என்கிறார் பெரியாழ்வார்.

உனக்கென்ன வேறுடையை

ஆசார்யாபிமான நிஷ்டரை ஒழியவும், உன் அநுபவம் வேறாய் உள்ளதே.

எல்லாரும் போந்தாரோ

ஆசார்யாபிமான நிஷ்டர் அனைவரையும் காண வேணுமென்னும் ஆசையாலே, தொண்டீரெல்லீரும் வாரீர் என்ற நம்மாழ்வார் போலே, எல்லாரும் வந்தார்களோ என்கிறார்.

போந்தார் - வந்தனர்.

போந்தெண்ணிக்கொள்.

வந்து ஒவ்வொருவராகத் தொட்டு எண்ணிக் கொள். அடியார்தங்கள் இன்பமிகுபெருங்குழுவு காண்கையும், அவர்கள் திருமேனிஸ்பர்சமும் பெரும்பேறல்லவா?

acharya.org

வல் ஆனைகொன்றானை

1. जैनेभकण्ठीरवः ஜைனராகிய யானையின் மத்தகத்தைப் பிளக்கும் சீயமாகிய ஸ்வாமி எம்பெருமானாரை.

2. ப்ரதி வாதிகளாகிற மதயானைகளுக்கு சிங்கம் போன்ற ஸ்வாமி யதிராஜரை.

மாற்றாரை மாற்றழிக்கவல்லானை

வாதம் செய்ய வந்த எதிரிகளை வலி இழக்கச் செய்து பகைமையை அழித்து திருவடியில் பணியவைத்த யதிராஜரை.

அருளாளப்பெருமாள் எம்பெருமானார் போல்வாரை வாதத்தில் வென்று தம் அடியவராக ஆக்கிக் கொண்டமை ப்ரஸித்தம்.

மாயனை

ஆச்சரியமான செயலாலே அனைவரையும் வசப்படுத்தின இராமாநுசரை.

பாட

ஆர்வத்தால் பாடுகைக்குபள்ளி எழுந்தருள வேணும். 'வக்தவ்யம்' ஆசார்யவைபவமல்லவா! பாடுவதே பயனாக.

...... கூரத்தாழ்வான்சரண் கூடியபின்
பழியைக்கடத்துமிராமாநுசன் புகழ் பாடியல்லா
வழியைக்கடத்தல் வருத்தமல்லவே.

acharya.org

பாசுரம் - 16

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே. மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு - அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப்பாடுவான்
வாயால் முன்னம் முன்னம்மாற்றாதே அம்மா நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய்.

நாயகனாய் நின்ற

குருபரம்பரையில் நடுநாயகமாய் விளங்குகின்ற

अमुना तपनातिशायिभूम्ना यतिराजेन निबद्ध नायकश्रीः ।
महती गुरूपंक्तिहारयष्टिः विबुधानां हृदयङ्गमा विभाति ॥

(யதிராஜ ஸப்ததி - 15)

(சூரியனையும் விஞ்சியிருக்கும் ஒளியையுடைய யதிராஜரை நடுநாயகமாகக் கொண்ட பெரிய குருபரம்பராஹாரம் வித்வான்களின் உள்ளம் கவர்வதாக உள்ளது)

நந்த

பகவதநுபவத்தாலும் சிஷ்யலாபத்தாலும் ஆனந்திப்பவராய். (नन्दतीति, नन्दः)

கோபன்

1. பூமியைக்காத்திட அவதரித்தவரே!

2. அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன்

கையாழியென்னும்

acharya.org

படையொடு நாந்தகமும் படர்தண்டும்
ஒண்சார்ங்கவில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப்பூதலம்
காப்பதெற்கென்று
இடையே இராமானுசமுனியாயின இந்நிலத்தே.

(இராம. நூற்றந்தாதி - 33)

உடைய

எம்பெருமான் பரமகருணையாலளித்த உபய விபூதி செல்வமுடையவரே !

கோயில் காப்பானே

திருவரங்க செல்வமுற்றும் திருத்தி வைத்து பாதுகாப்பவரே !

கொடித்தோன்றும்

''கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்'' என்கிற கொடித்தோன்றுகிறதும்,

தோரண

''நெடுவரைத்தோரணம் நிறைத்தெங்கும் தொழுதனர் உலகே'' என்கிறபடியே, தோரணம் நிறைந்ததுமான

வாசல்

''வைகுந்தம்புகுதலும் வாசலில் வானவர்
வைகுந்தன் தமர் எமர் எமதிடம் புகுதென்று''
என்கிற வைகுந்தவாசலாகிற, ப்ராப்ய பூமியை

காப்பானே

அளித்து உயிர்களைக் காப்பவரே.

கொடி = மலங்களை நீக்கி உயிர்காத்தல் என்று பிறரும் கூறுவர்

விரோதிபோக்கிச் செய்யும் ரக்ஷணம், கொடி. (எனவே)

acharya.org

கொடித் தோன்றும்

ரக்ஷணம் தோற்றும்,

தோரண வாசல்

நடுவில் உள்ள நம: பதம், அதன் வாசல் நகாரம்.

காப்பானே

ஸ்வரக்ஷண நிவ்ருத்தி செய்வித்து பகவானே ரக்ஷகன் என்னும் படி ஆக்கி என்னை நிலைப்பித்தவனே.

உண்ணின்று உயிர்களுக்குற்றனவே செய்து
அவர்க்கு உயவே
பண்ணும் பரனும் பரிவிலனும்படி - பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பான் எம்மி
ராமானுசன்
மண்ணின் தலத்துதித்து மறை நாலும் வளர்த்தனனே.

(இராம நூற்றந்தாதி - 95)

ஆக்கி அடிமை நிலைப்பித்தனை என்னை இன்று
(இரா.நூற். 38)

மணிக்கதவம் தாள்

மணி – நவரத்தினம். அதாவது நவவித சம்பந்த ஞானம்.

கதவம் தாள் திறவாய்

1. அதற்கு விரோதியான ரஜஸ் தமோ குணங்களாகிய தடைநீக்கியருள வேணும்.

2. அர்த்தபஞ்சகஜ்ஞானம் உண்டாகாமைக்குக் காரணம் ரஜஸ் தமோகுணங்கள் நிறைந்திருத்தல். அர்த்த பஞ்சகஜ்ஞானம் உண்டாகக் காரணம் ஸத்வம் நிறைந்திருத்தல். இவற்றுக்குக் காரணம் இரண்டில் ஒன்றில் ஒன்றுகை. (ஆசார்ய ஹ்ருதயம் 1-6)

acharya.org

ஆயர்

பகவதேகபரராய் ஆயர் இருப்பது போல் எம்பெருமானாரே தெய்வமென்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்

'நயவேன் ஒருதெய்வம் நானிலத்தே.' (இரா. நூற் - 35)

சிறுமியரோமுக்கு

திருப்பாவை 6000 படி உரை:- அஹங்காரஸ்பர்சமோ தேவதாந்தரஸ்பர்சமோ இல்லாதவர்கள். ஆக அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ரயங்கள் லேசமுமில்லாத அடியோங்களுக்கு.

அறைபறை

1. கொட்டும்பறை

2. திக்கெங்கும் பரவும்படி புகழும் ஆசார்ய வைபவம்

3. வக்தவ்யம் ஆசார்யவைபவம். ஆசார்யவைபவத்தைப் புகழ்பவர் பறை.

4. எண்டிசையும் அறிய இயம்புகேன் ஒண்டமிழ்ச் சடகோபனருளையே என்கிறபடியே, எம்பெருமானாராகிய பரமாசார்யனுக்கு மங்களாசாஸனம் பண்ணும் கைங்கர்யம்.

மாயன்

குணங்களாலும் திவ்யசேஷ்டிதங்களாலும் ஆச்சரிய மானவனும்.

மணிவண்ணன்

நீலமாணிக்கம் போன்ற திருமேனியையுடையவனும் விலைஉயர்ந்ததாயினும் முந்தானையில் முடியலாம் படியானவைரம் போல ஸர்வஸ்மாத் பரனாயினும் பத்துடையடியவர்க்கு எளியனான கண்ணனும்.

acharya.org

நென்னலே முன்னமேயே.

1. வராஹாவதாரத்தில்,

अहं स्मरामि मद्भक्तम् काष्ट पाषाण सन्निभम्

न्यामि परमां गतिम् என்றும்

2. க்ருஷ்ணாவதாரத்தில்,

अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः

என்றும், முன்னமேயே அருளிச்செய்து வைத்தானே.

வாய்நேர்ந்தான்

1. வாக்களித்தான். 2. न मे मोघं वचो भवेत् என்கிறபடி பொய்யிலாத வாக்களித்தான்.

தூயோமாய் வந்தோம்

1. உபாயத்தில் சுத்தியோடும் உபேயத்தில் சுத்தியோடும்

2. ஆசார்யன் திருவடிகளே உபாயமும் உபேயமும் என்றிருக்கை, இரண்டு விதசுத்தி

பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்றச் சரணன்றி (இரா. நூற் -45) என்கிறபடியே.

துயிலெழப்பாடுவான்

தேவருக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடுகைக்காக.

श्रीरंगराजपदपंकजयोरशेष कैंकर्यमाकलयितुं सकुतूहलस्त्वं ।

उत्तिष्ठ नित्यकृतिमप्यखिलां च कर्तुं रामानुजार्य!

भगवन् तव सुप्रभातम् ॥ (யதிராஜ ஸுப்ரபாதம் - 4)

இதன் பொருள்

acharya.org

(திருவரங்கன் திருவடித்தாமரைகளில் அசேஷ சேஷவ்ருத்தியையும் செய்ய ஆர்வமுடையரான எதிராசரே! தேவரீர் நித்யகர்மம் அனைத்தும் செய்யவேணும் பள்ளியெழுந்தருள வேணும். உமக்கு ஸுப்ரபாதம் ஆகட்டும்)

வாயால் முன்னம் முன்னம் மாற்றுதே

தேவரீர் முதலிலே வாயால் மறுக்காதருள வேணும்.

அம்மா

தேவரீரே அடியோங்களுக்கு ஸ்வாமி. எம்பெருமானல்ல.

தேவரீர் கையில் உள்ளது எங்கள் ஜீவனம்.

நீ

காரேய்கருணையுள்ள தேவரீர். அதிகாரி தாரதம்யம் பாராதே இரங்குமவரான தேவரீர்.

நேய

சேதனரைஉய்விப்பதில் பரிவுடையதும்

நிலை

நிலை நின்றதுமான

கதவம் - கதவுபோல் இரட்டையாக உள்ள ரஹஸ்யத்ரய ஜ்ஞானத்தை அளித்து

நீக்கு

அந்ய சேஷத்வ - ஸ்வஸ்வாதந்த்ர்ய தேஹாத்மாபிமானம் முதலிய தடைகளை நீக்கியருளவேணும்.

acharya.org

பாசுரம் - 17

அம்பரமே தண்ணீரேசோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே
எம்பெருமாட்டி அசோதாய் அறிவுறாய்
அம்பரமூடறுத்தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற்கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயுமுறங்கேலோரெம்பாவாய்

அம்பரமே தண்ணீரே சோறே

1. a. *அம்பரமே - பரமாகாசமான பரமபதம்*

b. *ஆடை. அதாவது சேஷத்வஜ்ஞானம். (திருமந்த்ரம்)*

c. *நலமந்தமில்லதோர் நாடுபுகுந்து பெறும் அந்தமில்பேரின்பம்*

d. வேதம், यदेव खं तदेव कं *எது அளவிடமுடியாததோ அது ஆனந்தம் என்கிறது. ஆகவே ப்ரஹ்மாநந்தாநுபவம் அளவிடமுடியாதது.*

2. தண்ணீர் - விரசையாற்றில் குளித்தல்.

தண்ணீர் தாகத்தைப் போக்கவல்லது. அதுபோல சோக நிவர்த்தகமான சரமச்லோகம்.

3. சோறு - பகவதநுபவம்

'अहमन्नं अहमन्नं' *என்கிறதே பகவதநுபவத்தை.*
— *இவற்றை*

acharya.org

அறஞ்செய்யும்

பயன்கருதாது பரமக்ருபையால் அளிக்கும்.

எம்பெருமான்

நமக்குஉரிய சேஷியாய், கையில் கனியென்ன கண்ணனைக் காட்டித்தந்த உபகாரகன்.

நந்த

உபகாரம் செய்யும் போது தன்பேருக உபகரித்து ஆநந்திப்பவர்

கோபாலா

1. பசு (விலங்கு) போன்ற நம்மைத்தம் அருளால் ரக்ஷிப்பவர்

2. பூர்வாசார்ய ஸுரக்ஷிதாம் என்கிறபடியே முன்னோர்மொழிந்த மொழிகளைக் காப்பவரே!

கொம்பனார்க்கெல்லாம்

கொம்புபோல் சீதைபொருட்டா (திருவாய்மொழி -4-2-8) ஈடு: - கொம்பு = வஞ்சிக்கொம்பு (அரும்பதம்) நீர்வஞ்சிக்கொம்பு. அது ஆற்றுவெள்ளத்திற்கு வளைந்து பிழைக்கும். தன்னை நலிகிற ராக்ஷஸிகளுக்கும் அபயமளித்த சீதாப்பிராட்டி போல்வார்க்கு எல்லாம்.

அதாவது. தன்னை நலிந்த நாலூரானும் நாம் பெற்ற பேறு பெறவேண்டும் எனவேண்டிய ஆழ்வான் போல்வார்க் கெல்லாம்.

கொழுந்தே

மென்மையான தளிர் போன்றவரே! அவர்கள் துன்பம் தன்னதாக நினைப்பவரே!

acharya.org

குலவிளக்கே

பெரிய முதலியார் குலத்துக்கு ஓர் விளக்காய் விளங்குபவரே! ஆளவந்தாருடைய ஜ்ஞானஸந்தானத்திலே தோன்றி அவர்தந்த ஜ்ஞானத்தாலே மாயன் அன்று தெய்வத்தேரினில் செப்பிய கீதையின் செம்மைப்பொருளை விளக்கியவரல்லவா ?

रामानुजांघ्रिशरणोऽस्मि कुलप्रदीपः आसीत् स यामुनमुनेः ।

என்கிறது. (வரதராஜஸ்தலம் - 102)

(அடியேன் எம்பெருமானார் திருவடிகளையே சரணமாகக்கொண்டிருப்பவன். அந்த யதிராஜர் யாமுனமுனியின் ஜ்ஞான ஸந்ததியில் வந்தவர். குலவிளக்கானவர்)

எம்பெருமாட்டி

எங்களுக்கு நிருபாதிகஸ்வாமியானவரே ஆசார்ய பரதந்த்ரரே. ஆசார்யர் திருவுள்ளப்படியே முடங்கியிருந்த விரல்களைத் தன் ப்ரதிஜ்ஞையாலே நிமிரச் செய்தவரல்லவா?

யசோதாய்

தன்னைப்பற்றினோர்க்கு புகழ் முதலிய அனைத்துப் பலன்களையுமளிப்பவர்.

பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும்
நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் .....
எங்களிராமானுசனை அடைபவர்க்கே.

(இராம.நூற்றந் - 32)

acharya.org

அறிவுருய்

எங்களைத்திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கி அடிமை நிலைப்பிப்பதற்கன்றோ தேவரீருடைய அவதாரம். அதைத் தேவரீர் உணரவேணும். எங்கள் குறையும் தீரும்.

அம்பரம்

1. ஆகாசம் - அது சூன்யமானது. லக்ஷணையாக சூன்ய வாதிகளைக் குறிக்கிறது.

2. பௌத்தரில் ஏகதேசரான மாத்ய மிகர், ஸர்வம் சூன்யம் என்கின்றனர்.

3. மாயாவாதியான சாங்கரர்கள் அவர்களோடு ஒப்ப ஸர்வம் மித்யா என்கின்றனர். இவ்விருவரோடும் உள்ள

ஊடு

பிணக்கு - கருத்துவேறுபாடு. அதை

அறுத்து

இல்லை செய்து. தீர்மானித்து ஆக - அவர்களுடைய பிணக்குகளை இல்லை செய்து வேதத்தின் உண்மைப்பொருளைத் தீர்மானித்து.

ஓங்கி

ஆசார்யஸிம்ஹாஸனத்திலே ஏறி அமர்ந்து

உலகளந்த

உலகத்தைத் தனக்கு அடிமை கொண்ட

உம்பர் கோமானே

நித்ய சூரிகளின் தலைவரான திருவனத்தாழ்வானுடைய அவதாரமானவரே!

acharya.org

உறங்காது எழுந்திராய்

ஸம்ஸாரிகளின் உறக்கம் போக்க அவதரித்த தேவரீர் பகவதநுபவத்திலே மூழ்காது பள்ளியுணரவேணும்.

செம்பொற்கழலடிச்செல்வா

1. சிவந்த பொன்போலே மனதைக் கவருகின்ற எதிரிகளைவென்று வீரஸ்ரீயோடு கூடிய திருவடியை உடையவராய்

2. செல்வமுடையவரே! ஆசார்யருடைய ஆம்முதல்வனென்ற கடாக்ஷமும் திருவாய்மொழிச் செல்வமும் உடையவரே.

உறுபெறுஞ்செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறிதருபூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழாரணமேயென்று இந்நீணிலந்தோர்
அறிதர நின்ற இராமாநுசனல்லவா? (ராமானுசநூற்றந்தாதி - 19)

பலதேவா!

எம்பெருமானையும் தாங்கும் பலமுடையவரே! அத்தால் மிகுந்ததேசுடையவரே

ஆளவந்தார் प्रकृष्टविज्ञानबलैकधामनि என்கிறார்.

இருவராய்ப் பரிமாறும் போது அவனுக்கும் கூச வேண்டாதே துகைத்துப்பரிமாறலாம் படியான தாரண ஸாமர்த்யத்துக்கு ஆச்ரயமாயிருப்பவர். அவருடைய அவதாரமாகையாலே. (பெரியவாச்சான் பிள்ளை உரை)

உம்பியும் நீயும்

உமக்குத்தம்பிபோல்வாரான (எம்பார்) அடியார்களும் தேவரீரும்.

உறங்கேல்

அவதாரத்தின் பயனை மறவாதிருக்க வேணும்

acharya.org

பாசுரம் - 18

உந்துமதகளிற்றன் ஓடாததோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழியழைத்தனகாண் - மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார்விரலி உன்மைத்துனன்பேர்பாட
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

உந்துமதகளிற்றன்

1. மதஜலத்தைப் பெருக்கும் யானைபோன்றவரே

பண்தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம்பாய் மதமாய்

விண்டிட எங்களிராமாநுசமுனி வேழம்(இரா.நூற்றந் - 64)

திருவாய்மொழி அநுபவத்தால் பெருகிவருகிற ஆனந்தமாகிய மதஜலம் பெருக்கும் இராமானுசமுனிவேழம்.

2. திருமலை அனந்தாழ்வான்ஸ்வாமி எம்பெருமானார் திருமலையில் செய்த ப்ரவசனத்தின் பெருமைகூறுகிறார்.

"பெருகுமதவேழம் மாப்பிடிக்குமுன் நின்று இருகண் இளமூங்கில் வாங்கி அருகிருந்த தேன் கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர் வான் கலந்தவண்ணன் வரை"

— என்கிற பூதத்தாழ்வார்பாசுரத்தை உதாரணமாகக் காட்டினார்.

acharya.org

விளக்கம்

பெருகுமதவேழம் - எம்பெருமானார். மாப்பிடிக்கு -அவர் உகந்த சிஷ்யர் குழாத்துக்கு. முன்னின்று இரு கண் இளமூங்கில்- இரண்டு கண்டமாய் இரு விதமான ஞான முடைய த்வயம் வாங்கி - எடுத்து. அருகிருந்ததேன் - மூல மந்த்ரமும் அதன் விளக்கமான சரமச்லோகமும்

அ. தேனும் பாலும் கன்னலும் அமுதுமான திருமந்த்ரம்

ஆ. எம்பெருமான் திருமுகத்தாமரையில் நின்றும் பெருகியதேனான சரமச்லோகம்

— இவற்றைக் கலந்து அளிக்கும் திருவேங்கடம், வானம் போன்ற எம்பெருமான் வாழும்மலை.

3. மதயானைகளைக்கண்டு பின்வாங்காதே அவற்றை விரட்டுபவர்

‘परमाणुममृषावादि वादिसंहारकारिणे’

(பரமாணுகாரணமென்பாரும் எல்லாம் பொய்என்-பாருமானவாதிகளை அழித்தவராகிய)

(ஸ்ரீ பாஷ்யகாரமங்களம் - 14)

ஓடாததோள்வலியன்

எம்பெருமானார், எதிரிக்கு அஞ்சி ஓடாத ஜ்ஞான பலமுடையவர். எதிரிகள்தாம் மருள் செறிந்தோர் சிதைந்து ஓட வந்து இப்படியைத்தொடரும் இராமானுசனல்லவா?

நந்தகோபாலன்

1. தாமும் பகவதநுபவத்தால் களித்துதம் உபதேசத்தால் சிஷ்யர்களை மகிழ்விப்பவர்

2. விலங்கனையரான நம்மைத்திருத்திப் பணிகொண்டும், பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளை பொன்னே போல் போற்றியும் வாழ்பவர்.

acharya.org

மருமகளே

ஆளவந்தார்க்கு மருமகள் போன்றவர் அதாவது ஞானஸந்ததியில் மகன் போன்றவர். தந்தைசொல் நிறைவேற்றுபவர். ஆம்முதல்வன் என்றருள் புரிந்த ஞானத்தந்தை போன்றவர் ஆளவந்தார். அவர்வார்த்தையை நிறைவேற்றியவர். பெற்ருேர்சொல்லை நிறைவேற்றுவது மகன் கடமை.

பெண்பால் - அடக்கத்தைக்குறிக்கும்

மருமகள் - மணமகள். அதாவது மகிழ்ந்துகொண்டவள்

நப்பின்ணய்

நப்பின்னை ஏழு எருதுகளை அடக்கிக் கண்ணனால் கைக்கொள்ளப்பட்டாள். அதுபோன்று, அஹங்கார காமக்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யங்களாகிற ஏழு எதிரிகளை அழித்து கைக்கொள்ளப்பட்டவர் ஸ்வாமி யதிராஜர். நப்பின்னை கண்ணனிடம் மயல் கொண்டிருந்தது போல இவரும் பொன்னரங்கமென்னில் மயலே பெருகி நிற்பவர்.

கந்தம்கமழும் குழலி

1. 'கமநீய சிகாநிவேஶம்' எமன்கிறபடியே அழகிய சிகையுடையவர்

2. குழல் - தலை. அதற்கு மணம் - பெரியோர்களின் திருவடிகளில் தலையால் வணங்குவது. அதை உடையவர்.

கடைதிறவாய்

கடைக்கண் என்பதன் சுருக்கம், கடை. தேவரீர திருவடிகளையே தஞ்சமென்றிருக்கிற அடியோங்களைக் கடாக்ஷிக்கவேணும்.

acharya.org

आकीर्णरत्ननिकरां मणिपादुकेत्वां रंगेश्वरस्य ललितां विपणिं प्रतीमः ।
यत्संश्रयेण भवति स्थिरभक्ति मूल्यं कैवल्यमत्र जगतां क्रयविक्रयार्हम ॥

(பாதுகாஸஹஸ்ரம் - 498)

(ரங்கநாதனுடைய ரத்தினங்கள் நிறைந்தபாதுகை ஒருகடை. அதில் பக்தியைக் கொடுத்து வாங்கும் மோக்ஷம் சுலபம்) — என்கிறபடியே எம்பெருமானுடைய சடாரியின் அருள்கிட்டும்படி செய்ய வேணும்.

கோழி

— கோழியிடம் மூன்றினைக்கற்கவேண்டும்.

— அதிகாலையில் தான் முன்னே உணர்ந்து பிறரையும் உணர்த்தும். குப்பையில் மறைந்துகிடக்கும் ரத்தினம் முதலிய சிறந்த பொருட்களை நொடிப்பொழுதில் எடுத்து விடும். கூடி இருந்து உண்ணும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள், தாம் முன்னம் ஞானம் பெற்று பிறருக்கும் ஞானமளிப்பர். எதிலும் - அஸார - அல்பஸார- ஸார- ஸாரதரங்களைவிட்டு, ஸாரதமத்தைக்கொள்வர்

(அஸாரம் - பாஹ்ய குத்ருஷ்டிமதம்

அல்பஸாரம் - வேதத்தில் பூர்வபாகமான பகுதி. அது அற்ப பலன்களையும், அதற்கு உபாயங்களையும் கூறுகிறது.

ஸாரம் - சுவர்க்க முதலிய ஃபல ங்களையும் அவற்றுக்கு உபாயங்களையும் கூறும் பகுதி.

ஸாரதரம் - ஆத்மாநுபவமும். அதற்கு ஸாதநமும் கூறும் பகுதி.

ஸாரதமம் - பரமாத்மாவையும் அவனை அடைய வழியான பக்தி ப்ரபத்திகளைக்கூறும் பகுதி.)

வைஷ்ணவர்கள் கூடியிருந்து பகவதநுபவம் பண்ணுவர்.

acharya.org

ஆக - ஸ்ரீவைஷ்ணவர்கள் தேவரீரையே தஞ்சமாக எண்ணி உம்மை பள்ளிஎழுச்சி பாடுகின்றனர்.

त्वां बोधयन्ति गुरवः प्रथिता महान्तः
श्रीवैष्णवाश्च यमिनस्तव पादभक्ताः ।

एकान्तिनश्च विमलास्त्वनन्यभावाः
तान् पालयाद्य यतिशेखरसुप्रभातं ॥

(रामानुजसुप्रभातं -१०)

வந்து எங்கும்

தாம் வந்து எங்கும் பரவி.

மாதவிப்பந்தல் மேல்

மாதவி - குருக்கத்திப்பூ. ஆயினும் இங்கு புன்னைப்பூவை உணர்த்துகிறது. குயில் பெரும்பாலும் புன்னை மரத்தில்வாழும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள், சந்திரபுஷ்கரிணீ புன்னைமரத்தடியில் அமர்ந்துதிருவாய்மொழி பாடுவார்கள்.

குயில், இனிமையாகப்பாடி அனைவரையும் மகிழ்விக்கும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள், வாக்குவன்மையினால் ரஸிகர்கள் உள்ளத்தை மகிழ்விப்பர்.

குயில், காக்கைகளால் வளர்க்கப்படும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள், ஆசார்யர்களால் ஞானப்பாலூட்டி வளர்க்கப்படுவர்.

குயில், பஞ்சமஸ்வரத்தில் கூவும்.

ஸ்ரீவைஷ்ணவர்கள், பஞ்சமோபாயமான ஆசார்யாபிமானத்தைப்பேசுவர். (அல்லது)

acharya.org

மாதவிப்பந்தல் மேல்

பூமியில் பந்தல்போல் அமைந்துள்ள திவ்யதேசங்களில் நின்றும் வந்தும்.

பல்கால் குயிலினங்கள் கூவின

குயில்கள் கூவுகின்றன. ஸ்ரீவைஷ்ணவர்கள் பல்லாண்டு பாடுகிறார்கள்.

காண் - காணவேணும்

பந்தார்விரலி

சேதனுசேதனங்கள் - பந்து. அது, எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் லீலோபகரணம்.

ஸமஸ்தசேதநாசேதனங்களை தனக்கு ஸ்வாதீனமாக உடையவர் ஸ்வாமி - உடையவரல்லவா?

உன்மைத்துனன்பேர்பாட

உனக்கு வகுத்த சேஷியான எம்பெருமானுடைய குணப்ரவாஹமான திருநாமங்களைப்பாட

செந்தாமரைக்கையால்

கை - நம்போல்வாருடையது,

மரைக்கை, மான்போல சஞ்சலமான கை. ஸ்வாதந்த்ர்யத்தால் சஞ்சலமான, ஈச்வரன் கை, பாபத்துக்கு அஞ்சவேண்டா என்கிறகை, தாமரைக்கை–பிராட்டியினுடைய போக்யமானகை.

भवेयं शरणं हि वः என்று ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்துக்கு அஞ்சவேண்டா என்கிற கை.

செந்தாமரைக்கை - ஆசார்யனுடையது. எம்பெருமானுடைய ஞானமுத்ராகரம்.

acharya.org

उद्गृह्णतीं उपनिषत्सु निगूढमर्थं चित्ते निवेशयितुमल्पधियां स्वयं नः ।
पश्येम लक्ष्मणमुनेः प्रतिपन्नहस्तां उन्निद्रपद्मसुभगां उपदेशमुद्राम् ॥

(யதிராஜ ஸப்ததி - 25)

(உபநிஷத்துக்களில் புதைந்து கிடக்கும் அர்த்தங்களை எடுப்பது போன்றதும், அற்பபுத்திகளான நம்முடைய சித்தத்தில் தானே பதியவைப்பதற்காக எம்பெருமானார் கையிலே அமைந்ததும், மலர்ந்த தாமரை போலுள்ளதுமான ஞானமுத்ரையை சேவித்து ஸத்தைபெறுவோம்.)

வளை

இரண்டாக இருக்கும். அதுபோன்று மந்த்ரமும் மந்த்ரசேஷமுமாயிருக்கும் திருமந்த்ரஜ்ஞானம்

ஆர்வளை

பிராட்டிபொருந்தியுள்ள த்வயஜ்ஞானம்

சீரார்வளை

எம்பெருமான்சோதிவாய் திறந்து அருளிய சிறப்புடைய சரமச்லோகஜ்ஞானம்.

அல்லது

1. பிராட்டி புருஷகாரமாக எம்பெருமானைச் சரணடைந்த சரணாகதி கத்ய ஜ்ஞானம்.

2. அழகிய மணவாளனிடம் ப்ரார்த்தனாரூபமான ஸ்ரீரங்க கத்ய ஜ்ஞானம்.

3. பரமப்ராப்யம் கூறும் ஸ்ரீவைகுண்ட கத்ய ஜ்ஞானம்.

ஒலிப்ப

தலைப்பற்றி வாய்க்கொள்ளும்படி.

வந்துதிறவாய்

தேவரீரே எழுந்தருளி, அறியாமைத்திரையைக் கிழித்து அருளவேணும்.

acharya.org

பாசுரம் - 19

குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர் மார்பாவாய் திறவாய்
மைத்தடங்கண்ணினாய் நீஉன்மணாளனை
எத்தனை போதும் துயிலெழவொட்டாய் காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய்.

குத்துவிளக்கு - எம்பெருமான்

1. விளக்கு தன்னையும் காட்டிப்பிறரையும் காட்ட வல்லது.

நல்லதும் தீயதும்காட்டும். ஸ்வயம் ப்ரகாசம் தனக்குத்தானே தோன்றும்.

2. விளக்கு ஐந்து முகமாக இருக்கும். பரவ்யூஹ - விபவ - அர்ச்சா - அந்தர்யாமி என்று எம்பெருமானும் ஐந்து நிலையாக இருப்பவன்.

3. தோரணவிளக்கு நிலையாக இருக்கும். குத்துவிளக்கு, அவ்வோவிடங்களில் பெயர்த்து வைக்கக்கூடியதாயிருக்கும். எம்பெருமானின் விபவ - அர்ச்சைகள், அதுபோல.

எரிய

மயர்வறமதிநலமருளப்பெற்று -ஆசார்ய கடாக்ஷத்தால் பரமாத்ம ஜ்ஞானம் ப்ரகாசிக்க.

கோட்டுக்கால் கட்டில்மேல்

குவலயாபீடமென்ற யானைக்கு நான்கு தந்தங்கள்.

acharya.org

அதைக் கொன்று அதன் நான்கு தந்தங்களைக் கொண்டு செய்த நப்பின்னைக்கட்டில் போலே, பிறசமயத்திற்கு நான்கு தந்த்ங்கள் போல் அமைந்த நான்கு தீயகொள்கைகள்.

1. ப்ரஹ்மம் தவிர மற்றவை காரணம் என்னும் கொள்கை.

2. ப்ரஹ்மம் ஒன்றே உண்மை. மற்ற தெல்லாம் பொய் என்கிற மாயாவாதம்.

3. கர்மமே பலமளிக்கிறது என்கிற மீமாம்ஸக மதம்

4. ருத்ரனே பரதேவதை என்கிற, சைவக்கோட்பாடு.

— இந்நான்கையும் அழித்து அமைத்த ஸ்ரீவிசிஷ்டாத்வைதமாகிய கட்டில். அதுநான்கு கருத்துக்களைக் கொண்டது:-

1. பரப்ரஹ்மமான நாராயணனே முழு முதல் காரணம். कारणत्वं

2. பிறமதங்களால் அசைக்கமுடியாமை. अबाध्यत्वं

3. பக்தி ப்ரபத்திகளே உபாயம் उपायत्वं

4. பகவத் ப்ராப்தியே फलं उपेयता।

நாராயணனே பரம்பொருள் ப்ரபத்தியே அவனையடைய உபாயம். கைங்கர்யமே பலன். புகலும் கைம்முதலுமில்லாதவன் அதிகாரி என்ற வைஷ்ணவ ஸித்தாந்தம்.

மெத்தென்ற

மிகவும் மென்மையான.

பஞ்சசயனத்தின்

ஐந்து விதமாகச் செய்யப்பட்ட படுக்கைபோலே

ஐந்துவிதமான ப்ரமேயத்தால் செய்யப்பட்ட திருவாய்மொழி - அதாவது, மிக்க இறைநிலையும் மெய்யாமுயிர் நிலையும் தக்க நெறியும் தடையாகித்தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல். அர்த்தபஞ்சகம்

acharya.org

கூறும் திருவாய்மொழி. திருவாய்மொழி, யாழினிசை கொண்டதாகையாலே மெத்தென்ற என்றது.

மேலேறி - உபயவேதாந்தங்களிலே ப்ரதிஷ்டிதராய்

கொத்தலர்

கொத்துக்கொத்தாக ஞானவிகாஸமடைந்த

பூங்குழல்

ஆத்மபுஷ்பங்களைச்சூடிக்கொண்டிருக்கும் அதாவது சேதனரிடம் (சிஷ்யரிடம்) மிகுந்த வ்யாமோஹமுடைய

'நாடாத மலர் நாடி' (திருவாய் மொழி - 1-4-9)

ஈடு:- தேடவரிய ஆத்மபுஷ்பத்தைச் சொல்லுகிறது. ஆத்மாவை மலர் என்கிறது. ஆத்மாவைத்திருத்தி ஸமர்ப்பிக்கை எம்பெருமானுக்குப் புஷ்பம் போல் போக்யமாகையாலே.

நப்பின்னை

1. எம்பெருமான் ஏழு எருதுகளை வென்று நம்பின்னையைக் கொண்டது போல, அஹங்கார, காம, க்ரோத, லோப, மோஹ மதமாத்ஸர்யங்களை ஆட்கொண்ட, எம்பார், ஆழ்வான், அருளாளப் பெருமாள், பிள்ளையுறங்கா வில்லி தாசர் போன்ற சிஷ்யர்களின்.

2. நப்பின்னைக்குக் கண்ணனிடம் மிகுந்தப்ரீதி இருந்தது போல எம்பெருமானாரிடம் மிகுந்த பிரியமுடையவர்கள் சிஷ்யர்கள்

3. ஆய்ச்சிகளில், நப்பின்னை உயர்ந்து விளங்குவது போல எம்பெருமானார் சிஷ்யர்கள் உயர்ந்து விளங்குகின்றனர்.

acharya.org

கொங்கைமேல்

ஞான வைராக்யங்களில்.

வைத்துக்கிடந்த மலர்மார்பா

தன் உள்ளத்தை வைத்துக்கிடந்த, அதாவது வியப்புடையவராய்.

வாய்திறவாய்

சோதிவாய் திறந்து ஞானதானம்பண்ண வேணும்.

மைத்தடங்கண்ணிஞய்

மை - பக்தி

मनसि विलसताऽक्ष्णा भक्तिसिद्धाञ्जनेन

(ஸ்ரீகுணரத்நகோசம்)

கண் - ஆத்மஸ்வரூபத்தை உள்ளபடியறியும் ஜ்ஞாநம்

பக்தியும், ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞானமுமுடையவரே!

நீ - எம்பெருமானேயும் தன்வசமாகக்கொண்டிருக்கும் நீர்

நீர், புருவம் நெறித்தவிடத்தில் கார்யம் செய்து தரவல்லஞன எம்பெருமானே நியமிக்கவல்லதேவர்.

உன்மணுளனே

உம்மிடம் ஆராதகாதல் கொண்டிருக்கும் தேவருக்கு மிகவும் ப்ரியஞன எம்பெருமானே.

acharya.org

எத்தனைபோதும் துயிலெழவொட்டாய் காண்

தேவரீர் திருவடிகளில் ஆச்ரிதரானசேதனரை அநந்யார்ஹமாக்கிக் கொண்டு ரக்ஷிக்கவேணும் என்கிற சிந்தையிலிருந்து எழவொட்டீர்.

எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்

எம்பெருமானுடைய பிரிவைநொடி நேரமும் பொறுக்கமாட்டீர்

தத்துவமன்று

பரதத்வமான எம்பெருமான் எங்களுக்குத் தஞ்சமல்ல.

தகவு

தேவரீர் அருளே எமக்குத்தஞ்சம்.

பாசுரம் - 20

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பென்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன்மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோரெம்பாவாய்.

முப்பத்து மூவர்

இது உபலக்ஷணம். பல என்று பொருள் தரும்.

அமரர்க்கு

असन्नेव स भवति असत् ब्रह्मेति वेद चेत्
अस्ति ब्रह्मेति चेत्वेद सन्तमेनं ततो विदुः ॥

(தைத்திரீயம் - ஆனந்தவல்லி - 6)

(ஆனந்தமயனை பரப்ரஹ்மம் இல்லையென்று அறிவானாகில் அவன் இல்லாது போல ஆகிறான். நாஸ்திகனாகையாலே எம்பெருமானுடைய சீற்றத்துக் கிலக்காகிறான். ஆதலால் ஸம்ஸாரம் ஏற்படுகிறது. ஆனந்தமயமான ப்ரப்ரஹ்மம் உளன் என்று அறிவானாகில் ஆஸ்திகனாகையாலே, இவனை ஞானியாக உணருகின்றனர். ஆதலால் மோக்ஷமடைகிறான்.)

என்கிறபடியே பரப்ஹ்மத்தின் ஸ்வரூபரூப குண விபூதிகளை உள்ளபடி அறிந்து ஜ்ஞானஸங்கோசமில்லாத ஞானிகளுக்கு.

முன்சென்று

அநாதிமாயையான ப்ரக்ருதிஸம்பந்தத்தால் ஜ்ஞான ஸங்கோசம் வருவதற்கு முன்னேசென்று.

கப்பம் தவிர்க்கும்

அவர்களுடைய பயத்தையும் சந்தேஹத்தையும் போக்கும்.

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துறந்து இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்கும் இராமாநுசன் நிற்க - வேறு நம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வம் இங்கு யாதென்று
உலர்ந்து அவமே
ஐயப்படாநிற்பர் வையத்துள் நல்லோர் நல்லறிவிழந்தே.

(இரா. நூற்றந்தாதி - 79)

acharya.org

आस्तां नाम यतीन्द्रपद्धतिजुषां आजानशुद्धामतिः
तच्चाव्याजविदग्धमुग्धमधुरं सारस्वतं शाश्वतं ।
को वा चक्षुरुदञ्चयेत् अपिपुरः साटोप तर्कच्छटा
शस्त्राशस्त्रि विहारसंभृतरणास्वादेषु वादेषु नः ।

(யதிராஜஸப்ததி - 68)

இதன் பொருள் - அதாவது

(கரை கட்டாக்காவிரிபோலே பெருகி வருகிற நல்ல தர்க்கங்களாலே எம்பெருமானார் ஸித்தாந்தத்தைப் பின்பற்றுபவர்க்கு இயற்கையான சுத்தமான ஜ்ஞானம் இருக்கட்டும். ஸ்வபாவமாகவே ஆழமாயும் அழகாயும் சுவைக்கத்தக்கதுமாய் அவர்களுடைய வாக்குவன்மைக்கு எடுத்துக் காட்டான நூல்களுமிருக்கட்டும். ஆர்வத்துடன் யுக்தி வாதப்போராகிஆயுதச் சண்டையாகிய விளையாட்டில் ஏற்பட்டதும் யுத்தத்தில் ருசியுடைய வாதங்களில் நம்முன்னின்று எவன் கண்விழித்துப் பார்ப்பான்)

எம்பெருமானார் சம்பந்தமுடைய நமக்கே இப்பெருமையுண்டானால் எம்பெருமானாருக்குச் சொல்லவேணுமா?

கலியே

மிடுக்கையுடையவரே!

"சுட்டப்பொருளை மறைப்பொருளென்று கயவர் சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனே என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னுமொள் வாளுருவி
வெட்டிக்களைந்த இராமாநுசன் என்னும் மெய்த்தவனே!"

(இரா. நூற்றந்தாதி - 93)

acharya.org

குறிப்பு :-

கட்டப்பொருளை. மிகத்தாழ்ந்த அர்த்தங்களை

கயவர் - தீயவழியில்செல்பவர்

பெட்டைக்கெடுக்கும் - மயக்கம் தரும் வார்த்தைகளை நிரஸித்துவிடும்.)

அறம் சீறும்கலியை விரட்டுபவர்

துயிலெழாய்

அநாதிகாலம் அறியாமையால் உறங்கிக்கிடக்கும் எங்களை அறியாமையைப்போக்கி ஞானமுடையவராக்க பள்ளி உணரவேணும்.

செப்பமுடையாய்

ஆச்ரிதர்தன்னைப் பற்றி அநுபவிக்கும்படிதன்னைத்தாழ விட்டிருப்பவரே.

''நிகரின்றி நின்ற என்நீசதைக்கு நின்னருளின் கணன்றிப்

புகலொன்றுமில்லை - அருட்குமஃதேபுகல்''

(இரா. நூற். - 48)

என்றபடி,

திறலுடையாய்

எதிரிகளுக்கு அணுகவொண்ணாத திறலுடையவரே

का शंका शंकरादेः भजति यतिपतौ भद्रवेदीं त्रिवेदीं ।

(யதிராஜ ஸப்ததி - 70)

எம்பெருமானார் வேதாஸனத்திலே அமர சங்கராதிகள் முன்நிற்கமுடியாது. இதில் என்ன சந்தேகம்?

acharya.org

செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும்

எதிரிகளுக்கு, துக்கமாகிய வெப்பத்தைக் கொடுக்கும்.

''கைத்தனன் தீய சமயக்கலகரை'' *(இரா. நூற் - 72)*

(மிகத்தாழ்ந்ததான பாஹ்ய குத்ருஷ்டிகளாய் ஸமயத்திலே கலஹத்தை விளைவிப்பவரைக் கடிந்தார்.)

விமலா

வேதமார்க்கப்ரதிஷ்டாபனம் பண்ணும் படியான சுத்தியை உடையவர்.

''அன்பன் அனகன் இராமாநுசன்.'' *(இரா. நூற் - 30)*

ஸர்வாத்மாக்களுக்கு சேஷமானவன் ஸ்வரூப ரூப குணங்களால் ஆச்சரியமான ஸர்வேச்வரன் என்று ஸ்ரீபாஷ்யாதிகளாலே அருளிய ஸ்நேஹமுடையவர். இவ்வுபதேசத்துக்கு, க்யாதிலாபபூஜாதிகளில் விருப்பத்துக்குச் காரணமான பாபமில்லாதவர் என்று மாமுனிகள்.

துயிலெழாய் - முன்சொன்னதுபோல

செப்பென்னமென்முலை

செப்பு - மாணிக்கம் வைக்கும் செப்பு (குப்பி)

மென்முலை - பரமபக்தி - பரமபக்தியாவது - அந்தஎம்பெருமானை ஒரு நொடியும் பிரிந்திருக்கமுடியாமை

இவற்றில் ''மணி மாணிக்கமே மதுசூதா'' என்கிற எம்பெருமானாகிய மாணிக்கம் வைக்கும் செப்பு. அதாவது எம்பெருமானுருடைய பரமபக்தியிலே எம்பெருமான் படிந்து கிடக்கிறான் என்றதாயிற்று.

செவ்வாய்

'முன்னவர் தந்திடுமொழிகள் நிறைந்திடுமுறுவல் நிலாவழகும்' என்கிறபடியே முன்னோர் மொழிந்த நுண்பொருளை உபதேசிக்கும் திருப்பவளம் (வாய்).

acharya.org

சிறுமருங்குல்

மிகநுட்பமான இடை - வைராக்யம்.

மிக நுட்பமான பரம விரக்தரே! இதரவிஷயங்களிலும் மற்றதேவதைகளிலும் மற்றை உபாயங்களிலும் வேறு பயன்களிலும் இதரமந்த்ரங்களிலும் வைராக்யமுடையவர்.

(இதரமந்த்ரங்கள்:- திருமந்த்ரம் தவிர்ந்த, மற்றவை)

நப்பின்னே

முன்பே கூறியதுபோல், எம்பெருமானுல் கைக் கொள்ளப்பட்ட ஆசார்யரான எம்பெருமானுர்.

நங்காய்

பொறை - கிருபை - பாரதந்த்ர்யம் போன்ற குணங்களால் பூர்ணரே.

திருவே

பிராட்டிக்கு ஒப்பானவரே.

பிராட்டி சேதனரால் பற்றப்படுகிருர். (श्रीयते)

பிராட்டி அடியார்க்காக எம்பெருமானைப் பற்றுகிருள் (श्रयते)

எம்பெருமானுர் நல்லார் பரவுமிராமாநுசன். தென்னரங்கன் கழல் சென்னிவைத்துத்தானதில் மன்னு-மிராமாநுசன். தென்னரங்கன் செல்வமுற்றும் திருத்திய செல்வரே!

துயிலெழாய் - முன்போலே

உக்கமும்தட்டொளியும்தந்து

உக்கம் - விசிறி, திருவால வட்டம்.

வியர்வைப்போக்குவது. நிவ்ருத்தி ரூபம்

acharya.org

தட்டொளி - முகம்பார்க்கும் கண்ணாடி உள்ளதை உள்ளபடிகாட்டும். ப்ரவ்ருத்திரூபம். திருவாலவட்டம், கண்ணாடி முதலிய அடிமைசெய்ய உபகரணங்களைத்தந்து. அதாவது கைங்கர்யம் தரவேணுமென்று ப்ரார்த்தனை.

உன்மணாளனை

உன்வசமான பகவானை

இப்போதே

காலம் தாழ்த்தாதே, சடக்கென இப்போதே. அடுத்த நொடி, உயிர் தரியோம்.

எம்மை

தேவர் அருள்நோக்கியிருக்கும் எங்களை கதிரவனை நோக்கியிருக்கும் பங்கயம் போல.

நீராட்டு உன்மணாளனை

கோடைகாலத்தில் மடுவில் மூழ்கிக் குளிர்வது போல் 'ப்ரஹ்மாநுபவத்திலே' மூழ்கினன். (பாரதம்)

அப்பன் திருவருள் மூழ்கினள் (ஆழ்வார்) என்கிறபடியே எம்பெருமானுடைய குணாநுபவத்தைப் பண்ணிவைத்து அத்தால் எம்பெருமானின் விடாயும் எங்கள் விடாயும் தீரும்படி செய்தருளவேணும். எம்பெருமானுக்கு அடிமை செய்யவிடாய். எங்களுக்கு அடிமை செய்யவிடாய்.

ஜ்ஞாந தர்சன ப்ராப்திகளைப் பண்ணித்தர வேணும்.

(ஜ்ஞானம் - சாஸ்த்ரம் கொண்டு அறியும் உண்மையான ஜ்ஞானம்

தர்சனம் - உள்ளபடி ஸாக்ஷாத்காரம்

ப்ராப்தி - உள்ளபடியே எல்லா விதமான அநுபவம்)

acharya.org

பாசுரம் - 21

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்ருதேபால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான்மகனே அறிவுருய்
ஊற்றமுடையாய் பெரியாய் - உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்ருர் உனக்குவலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்ருது வந்து உன்னடி பணியுமா போலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஏற்றகலங்கள்

1. ஆசார்யன் உபதேசித்த அர்த்தங்களில் ஸாரதமமான அர்த்தங்களை ஏற்ற சிஷ்யர்கள்.

2. தனக்கு உபதேசித்த ஆசார்யனும் கொண்டாடும் படியான ஸத்பாத்ரம்.

வெஃகாவில்திருமாலைப்பாடக்கேட்டு வளர்த்ததனல் பயன் பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கிளுளே, என்னுமாபோலே.

அமுதனுர், பட்டர்போல்வார்களை, ஏற்ற கலங்கள் என்கிறது.

எதிர்பொங்கி மீதளிப்ப

1. ஆசார்யோபதேசத்தாலே நிறைந்த ஜ்ஞானமுடைய சிஷ்யர்கள். ஆசார்யனுக்கும் யுக்தி உபதேசம் பண்ணும்படி ஜ்ஞானம் பொங்கி வழியும்படி.

2. எம்பெருமானுரும் ஆழ்வானும் காஷ்மீரில் சாரதா பீடத்தில் 'போதாயனவ்ருத்தியை' (உரையை)ப் பார்த்துக் கொண்டிருக்க - அதற்கு இடையூறுவிளைந்த போது நூலை முழுமையாகப்பார்க்க முடியவில்லையே என்று ஸ்வாமி

acharya.org

எம்பெருமானார் வருந்த — அந்த உரைநூலைப் பூர்த்தியாகக் கடாக்ஷித்து நெஞ்சில் தேக்கியிருந்த ஆழ்வான், "இங்கே விண்ணப்பம் செய்யவோ? இரண்டாற்றின் நடுவே விண்ணப்பம்செய்யவோ?" என்று பணித்தார். ஆத்மாவுக்கு லக்ஷணம் சேஷத்வம். ஜ்ஞாநாநந்தங்களன்று என எம்பெருமானாருக்கு உரைத்தார் ஆழ்வான்.

மாற்றுதே

முன்னோர்மொழிந்த படியே, மாற்றுதே சொல்ல வேணும்.

இடைவிடாது, சிஷ்யன் பக்கல் செய்த அபிமானத்தைமாற்றுதே.

பால்சொரியும்

பால்போலே போக்யமான அர்த்த விசேஷங்களை அருவி போல் சொரியும்

(பசுக்கள்)

பசுக்கள் பஞ்ச கவ்யத்தை அளிப்பது போலே ப!ஞ்சமோபாயமான ஆசார்யபிமானமே உத்தாரகம் என்பதைத் தன் அநுஷ்டானத்தால் காட்டும் வடுக நம்பி போல்வார்.

(பெரும்பசுக்கள்)

ஆய்ப்பாடிப் பசுக்கள் பகவத்ஸம்பந்தத்தாலே பெருத்திருப்பதுபோல எம்பெருமான் திருவடிகளில் ப்ரபத்திசெய்து ஆட்கொள்ள வேண்டும்படி ஜ்ஞான விசேஷமுள்ள அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போல்வார்.

பள்ளல் பெரும்பசுக்கள் [வள்ளல் பெரும் பசுக்கள்]

தீங்கிழைத்தார்க்கும் உபகரிக்கும் உதாரகுணம் உள்ளவர். தன்னையழியமாறியாகிலும் பிறருக்கு நன்மை செய்வதல்லவோ வண்மை. நான்பெற்றபேறு நாலூரானும் பெறவேண்டும் என்ற திருவுள்ளம் படைத்த ஆழ்வான் போல்வார்.

acharya.org

ஆற்றப்படைத்தான்

அபரிமிதமாகக் கொண்டவர். எம்பெருமானார் வள்ளல்பெரும் பசுக்களான 74 ஸிம்ஹாஸநாதிபதிகளையும் மற்றும் எண்ணிறந்த சீடர்களைக் கொண்டவரல்லவா?

கேள்வி - ஆற்றப்படைத்தது எதற்காக?

பதில் - எம்பெருமானுக்கு அடிமைசெய்யும்படி ஸம்ஸாரி, சேதனரைத்திருத்திப் பணிகொள்ளுகைக்காக

மகனே

அவருடைய மகனே! (மகன்போன்றவரே) திருக்குருகைப் பிரான்பிள்ளான் - பராசர பட்டர் போல்வாரை, மகனே! என்கிறது.

அல்லது

பெரிய நம்பி, திருமலை நம்பி, திருக்கோட்டியூர் நம்பி போன்ற பல சிஷ்யர்களைக் கொண்ட, ஆளவந்தாரின் ஆம்முதல்வன் என்றகடாக்ஷம் பெற்று ஞானஸந்ததியாய் புத்திரன்போன்றவர்.

रामानुजांघ्रिशरणो ऽस्मि कुलप्रदीपः ।
आसीत् स यामुनमुनेः स च नाथवंश्यः ॥

(வர. ஸ்தவம் - 102)

(அடியேன் எம்பெருமானார் திருவடிகளைச் சரணடைந்தவன். அந்த எம்பெருமானாரோ ஆளவந்தாருடைய குலத்துக்கோர் விளக்காய் விளங்கினார். அவ்வாளவந்தாரும் நாதமுனிகளுடைய ஸந்ததியாவார்.)

அறிவுறாய்

அடியோங்கள் ஆர்த்தியைத் தேவருடைய நெஞ்சிலே உணர்ந்து கடாக்ஷிக்க வேணும்.

acharya.org

ஊற்றமுடையாய்

1. ஆச்ரிதபக்ஷபாதமுடையவரே!

ஸந்ந்யஸிக்கும்போது எம்பெருமானார் முதலியாண்டானை விடேன் என்றாரன்றோ?

2. ப்ரமாணப்ரஸித்தியையுடையவரே!

१. कलौ कश्चित् भविष्यति

२. कलौ रामानुजः स्मृतः

— என்கிற ப்ரமாணங்கள், ஸ்வாமியின் அவதாரத்தைக் கூறுகின்றன.

பெரியாய்

கையில் கனியென்ன, கண்ணனைக் காட்டித்தந்த பெரியவர்.

சுரக்கும் திருவுமுணர்வும் சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும் - படியிலுள்ளீர்
உரைக்கின்றனன் உமக்குயான் அறம் சீறுமுறுகலியைத்
துரக்கும் பெருமை - இராமாநுசனென்று சொல்லுமினே.
(இரா.நூற்றந்தாதி - 43)

உலகினில் தோற்றமாய் நின்ற

மண்மிசை யோநிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுறநிற்கிலும் காணகில்லா உலகோர்கள் அண்ணலிராமாநுசன் தோன்றி நிற்க.

சுடரே

१. श्रीमानाविरभूत् भूमौ रामानुजदिवाकरः ।

२. जय मायिमतान्धकार भानो (रामानुज चतुश्लोकी)

(சங்கரமதமாகிய இருளை விரட்டும் சூரியனே! ராமாநுஜ வெல்க)

यतिक्ष्माभृत् दीपः *(யதிராஜ ஸப்ததி - 56)*

acharya.org

துயிலெழாய்

அநாதிகாலம் அஜ்ஞானத்தாலே மயங்கிக் கிடக்கும் அடியோங்களை விழிக்கும்படி செய்ய தேவரீர் திருக்கண்களால் கடாக்ஷிக்கவேணும்.

மாற்றார்

கருத்தில் மாறுபட்ட பிறமதத்தினர் யாதவப்ரகாசன் யஜ்ஞமூர்த்தி போல்வார்.

உனக்கு வலி தொலைந்து

தேவரீரிடம், தங்கள் வாதம் செய்யும் வலிமையை இழந்து.

உன்வாசற்கண்

தேவரீர் திருவாசலில்.

ஆற்றாதுவந்து

தேவருடைய குணங்களுக்கு ஆற்றாதே தோற்று வந்து.

உன் அடிபணியுமாபோலே

தேவரீர் திருவடிகளில் பணியுமாபோலே.

போற்றியாம் வந்தோம்

1. தேவரீருக்குப் பல்லாண்டுபாடி.

2. ஆசார்யாபிமானமே உத்தாரகமென்று இருக்கிறயாம்.

3. எங்களை ரக்ஷிக்கவந்த விடத்தே வந்தோம்.

புகழ்ந்து

தேவரீர் திறலும் குணமும் புகழ்ந்து.

acharya.org

பாசுரம் - 22

அங்கண்மாஞாலத்தரசர் - அபிமான
பங்கமாய் வந்து நின்பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப்பூப் போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களு மாதித்யனும் எழுந்தாற்போல்
அங்கணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபமிழிந்தேலோ ரெம்பாவாய்.

அங்கண்

அழகிய இடங்களை அதாவது, த்வாரங்களை உடைய. 'नवद्वारपुरे देही' (கீதை) ஒன்பது த்வாரங்களையுடைய. ஒன்பதுவாசல் தானுடைக்குரம்பையல்லவா?

மாஞாலம்

ஞாலம் - நிலம். க்ஷேத்ரமெனப்படுகிற சரீரம் - அறியாமை என்னும் பயிர்விளைவது. பெருஞ்செல்வம், நெருப்பு, பிறப்பு, இறப்பு, பிணி, மூப்பால் தகர்ப்புண்டு சிற்றின்பத்துக்கு வழிகோலுவது. அதில் சம்பந்தமுற்று.

அரசர்

ஐச்வர்யாதிகளையும், ஸாம்ஸாரிகபோகங்களையும் அநுபவிப்பவராய் எல்லாம் தனதே என்றும் ஈச்வரோஹம் என்றும் அஹங்கரித்திருக்கும் திருவரங்க நிர்வாஹகரான அமுதனார்.

acharya.org

அபிமான பங்கமாய் வந்து

அஹங்காரம் தொலைந்துவந்து.

நின்

பொன்னரங்கமென்னில் மயலே பெருகும் என்கிறபடியே தேவருக்குமிகவும் ப்ரியமான.

பள்ளிக்கட்டில் கீழே

1. எம்பெருமான்பள்ளி கொள்ளும் சயனமான தேவரீர் திருவடியின் கீழே
2. திருவரங்கம் பெரியகோயிலில் தேவர் திருவடிகளின் கீழே

சங்கமிருப்பார் போலே

கூரத்தாழ்வான் போன்றவர் ஸத்ஸங்கத்திலே இருப்பார்போல. சங்குபோல தூயராய் உபாயத்திலும் உபேயத்திலும் சுத்தி உடையராய். சங்குபோலே, தேவரீர் பெருமையை முழங்குபவராய்.

வந்துதலைப்பெய்தோம்

தேவரீர் அருள்நோக்காலே வந்துகூடப் பெற்றோம்.

கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப்பூப்போலே

பகவதநுபவத்தாலும் சிஷ்யலாபத்தாலும் உண்டான ஆனந்தத் தாலே, சிறிதே மலர்ந்த தாமரைப் பூப்போலவும்.

செங்கண்

சிஷ்யர்களிடம் வாத்ஸல்யத்தால் சிவந்த திருக்கண்களாலே, நெஞ்சென்னும் உட்கண்ணாலே.

acharya.org

சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?

1. சிறிது சிறிதாக கடாக்ஷிக்கலாகாதா?

2. ஆத்மோஜ்ஜீவனத்திற்குரிய அர்த்த விசேஷங்களைச் சிறிது சிறிதாக உபதேசிக்கலாகாதா?

3. சிஷ்யர் ஆரம்பகாலத்தில் முழுமையான ஜ்ஞான மில்லாதிருப்பர். ஆதலால் ஸ்ரீபாஷ்யம் முதலான கடின விஷயங்களை க்ரஹிக்கமுடியாது. படிப்படியாக உபதேசித்து அறிவுடையராக்கவேணும்.

''பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக்கழனியதனுள்போய்
புள்ளுப்பிள்ளைக்கு இரைதேடும் புள்ளம் பூதங்குடிதானே''

(பெரிய திருமொழி - 5-1-2)

திங்களும்

ஸ்வரூப - உபாய - புருஷார்த்தங்களைத் தெளிவாகக் காட்டுவதும் முலைப்பால் போன்றதும். பித்ரார்ஜித தனம் போன்றதுமான ரஹஸ்யார்த்தங்களை

ஆதித்யனும்

சிரமப்பட்டுப் பெறவேண்டியதாய் ஸ்வயமார்ஜித தனம் போன்ற கடினமான ஸ்ரீபாஷ்யாதிசாஸ்த்ரங்களையும்.

எழுந்தாற்போல்

நெஞ்சில்படும்படி.

திங்களும்

மதிபோல் குளிர்ந்ததாய், மகிழ்ச்சியைத் தருமதாய் நல்லறிவுதரும், அருளிச் செயல்.

acharya.org

ஆதித்யனும்

சூரியன் போல் பரசமயப்பஞ்சுக்கனலாய் வருந்திக்கற்க-வேண்டிய வேதாந்தஜ்ஞானம், ஆக-உபயவேதாந்தார்த்தமும் நெஞ்சிலே பதியும்படி.

அங்கண் இரண்டும் கொண்டு

1. வெளிக்கண்ணும் உட்கண்ணும் இரண்டும் கொண்டு.
2. ஆசார்யனுடைய வெளிக்கண்ணும் உட்கண்ணும்.
3. ஆளவந்தார் எம்பெருமானாரை 'ஆம் முதல்வன்' என்று கடாக்ஷித்த உட்கண் ஒன்றேபோதும். இரண்டும் கிடைப்பது பெருப்பேறு.

एकयैव गुरोः दृष्ट्या द्वाभ्यां वापि लभेत यत्
न तत् तिसृभिरष्टाभिः सहस्रेणापि कस्यचित् ॥ (सुभाषितनीवि)

(சுபாஷித நீவி — வேதாந்த தேசிகன்)

இதன் பொருள் - ஆசார்யன் வெளிக்கண்ணால் மட்டுமோ, உட்கண்ணையும் சேர்த்து இருகண்களாலுமோ கடாக்ஷிக்க அதனால் உண்டாகும் பேறு - முக்கண்ணனின் மூன்று கண்களாலோ, நான் முகனின்எட்டுக் கண்களாலோ. ஸஹஸ்ராக்ஷனன நாராயணனின் ஆயிரம் கண்களாலுமோ கிட்டாது.

எங்கள் மேல் நோக்குதியேல்

மழைத்துளியை எதிர்நோக்கும் பூமிபோல் தேவரீர் அருளையே நோக்கியிருக்கும் எங்களைக் கடாக்ஷித்தால்.

எங்கள்மேல் சாபமிழிந்து

ஆசார்யகடாக்ஷப்ராப்திக்குத் தடையான பாபங்கள் அழிந்துபோம்.

acharya.org

பாசுரம் - 23

மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத்தீவிழித்து
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமாபோலே நீ பூவைப்பூவண்ணா - உன்
கோயில் நின்றும் இங்ஙனே போந்தருளி - கோப்புடைய
சீரியசிங்காஸனத்திருந்துயாம் வந்த
காரியம் ஆராய்ந்தருளே லோரெம்பாவாய்.

மாரி

எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபையாலே. மாரியாகிய மழையை யாரும் வருவிக்கமுடியாது. பகவானருளாலே உண்டாகவேண்டும். ஆதலால், ''மாரியார் பெய்கிற்பார் மற்று'' என்கிறபடியே.

மலை - வேதம்

முழைஞ்சில் - குகை - மறைவான இடம் போலே ரஹஸ்யமான பொருளை உடைய உபநிஷத். அதில்,

மன்னிக்கிடந்து

நெஞ்சு பொருந்திக்கிடந்து.

உறங்கும்

வேதாந்தார்த்தத்தை சிந்திக்கும்.

சீரியசிங்கம்

சிறப்புடைய சிங்கமாகிய, எம்பெருமானை

acharya.org

1. जैनेभकण्ठीरः : (தாடீ பஞ்சகம்)
(ஜைனராகிற யானைகளை அழிக்கும் சிங்கம் யதிராஜர்)

2. குறையல்கலைப்பெருமான் ஒலி மிக்கபாடலை உண்டு தனதுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமான இராமாநுசன் (இரா. நூற்றந்தாதி-88)

वेदोत्तंसगुहाविहारपटुना श्रीशैलशृंगो ल्लसत्
मायाकेसरिमानितेन गहनन्यायाटवीचारिणा ।
गंभीरेण परात्मभेदन महानादेन नाथेन मे
गुप्तोऽयं यतिसार्वभौमहरिणा वर्ते भृशं निर्भयः । (வேதாந்ததேசிகன்)

(இதன் பொருள் - வேதாந்தமாகிற குகையில் திரிவதும் திருமலையில் விளக்குமான மாயாகேஸரி (பகவான் நரஸிம்ஹன்) யினால் மதிக்கப்பெற்றதும் அடர்ந்த சாஸ்த்ர ந்யாயமாகிய கடலில் உலாவுவதும். ஆத்மா - பரமாத்மா இவற்றின் பேதத்தை முழங்குவதும். எனக்குஸ்வாமியுமான எம்பெருமானாராகிற ஸிம்ஹத்தாலே ரக்ஷிக்கப்பட்ட நான் பயமின்றி இருக்கிறேன்)

அறிவுற்று

वेदान्तसिद्धान्तसमर्थनाय बाह्याभ्यन्तर मतापनुत्त्यै - என்று வடுகநம்பி அருளியதுபோல் துர்மதங்களை விரட்டி நன்னெறியை நிலை நாட்டுவதே தன் அவதாரத்தின்பயன் என உணர்ந்து.

தீவிழித்து

1. ''பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப'' — என்கிற படியே அனல் விழி விழித்து.

i. पापण्डद्रुमपण्डदावदहनः *ii.* पापण्डसागर महावडवा मुखाग्निः
என்று தாமே தீயல்லவா? — (தாடீபஞ்சகம்)

2. பார்வை செடியார் வினைக்குத்தீ.

acharya.org

வேரிமயிர் பொங்க

1. மணமுள்ள அழகிய சிகையினுல் சோபிக்க

2. ஸர்வகந்தனுன (வேரி) எம்பெருமானிடம் வ்யாமோஹம் அதிகம்கொண்டு (மயிர்பொங்க).

எப்பாடும் பேர்ந்து

மாமலராள் புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதொறும்புக்கு நிற்கும் குணந்திகழ்கொண்டலான தேவரீர், எண்டிசையும் தீர்த்தகரராய் விஜயயாத்ரைசெய்து.

உதறி

ஆங்காங்கு எதிர்த்து வந்த எதிரிகளை விரட்டி

மூரிநிமிர்ந்து - சோம்பல் முறித்து, தன்பெருமைவிளங்க

1. பௌத்தமாகிய இருளை விரட்டும் சூரியன்

2. சமணராகிய யானைகளை அழிக்கும் ஸிம்ஹம்.

— என்கிறபடியே தன் பெருமைப்ரகாசிக்கும்படி கம்பீரமாக.

முழங்கி

தேவரீர் சங்கின் அவதாரமாகையாலே எதிரிகள் முழுக்காயாக அவியும்படி ஸித்தாந்தத்தை முழங்கி

புறப்பட்டுப் போதருமாபோலே

புறப்பட்டு எழுந்தருளுமாபோலே.

நீ - காரேய்கருணையும் பொறையுமுடைய தேவரீரே ப்ராப்யமும், ப்ராபகமுமாவீர்.

acharya.org

பூவைப்பூவண்ணா

1. காயாம்பூபோன்ற திருமேனி உடையவரே!

(எம்பெருமானே குருவாகி இவ்வுலகில் அவதரித்ததால்)

2. பூவைப்பூவின் ஸ்வபாவமுடையவரே!

1. பூவைப்பூ மலரும் போது செவ்வி பெற்றும் சூரியனால் வாடுவதுமாயிருக்கும். எம்பெருமானாரும், தம் சிஷ்ய ஜன ஸஹவாஸத்தால் மலர்ந்து செவ்விபெற்றும், அடியார்க்கு ஏதேனுமொரு வாட்டம் வந்தால், வாடுமவராயுமிருப்பர்.

2. தேனைப் பருக, வண்டுகள் பூவைப் பூவைச்சூழ்ந்திருக்கும். எம்பெருமாருடைய தேனிலும் போக்யமான வடிவழகையும் இன்மொழியையும் பருக சிஷ்யர்களாம்வண்டுகள் சூழ்ந்திருக்கும்.

3. பூவைப் பூவண்ணனாகிய எம்பெருமானைப்போலே அளவிடவொண்ணாத வைபவமுடையராயிருப்பர்.

4. பூவைப்பூவண்ணனாகிய எம்பெருமானைப்போலே பெருவீடு அளிப்பவர்.

உன்கோயில் நின்றும்

தேவருடைய கோயிலான பூதபுரியிலிருந்து

இங்ஙனேபோந்தருளி

பெருமாள் கோயிலுக்கும் திருநாராயண புரத்துக்கும் எழுந்தருளி

சிங்காசனம்

இருபக்கமும் சிங்கம் பொருந்திய ஆஸனம் அரசர்கள் அமருவது.

acharya.org

சீரிய சிங்காசனம்

சிறப்புடைய சிங்காசனம். அதாவது கண்ணன் நின்று கீதை அருளிய திருத்தேர்.

கோப்புடைய சீரிய சிங்காசனம்

1. எம்பெருமானும் ஸவிநயமாக ஞானம் பெறும் படியான சிங்காசனம். ஆசார்யாசனம். கோப்பு - பெருமைக்குணம். பெருமை. (கழகத்தமிழகராதி)

2. பேதச்ருதி - அபேதச்ருதி. கடகச்ருதிகளாகிற மூன்றுகால்களால் அமைந்த ஸ்ரீவைஷ்ணவாசனம்.

இருந்து யாம் - வீறுடையராம்படி அமர்ந்திருந்து.

(அநந்யப்ரயோஜனரான நாங்கள்)

வந்தகாரியம்

பொதுவாக வந்தகாரியமென்கிறார்கள். உன்தொண்டர் கட்கே அன்புற்றிருக்கும்படி என்னை ஆக்கி அங்காட்படுத்து என்கிற அடியார்தொண்டும், கையில் கனியென்ன கண்ணனைக் காட்டித்தரிலும் உன்தன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் என்கிற வடிவழகு அநுபவமும்.

ஆராய்ந்து

தேவரீர் திருவுள்ளத்தே தேர்ந்து.

அருள்

அருள வேண்டும்.

acharya.org

பாசுரம் - 24

அன்றிவ்வுலகமளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்ருய் திறல் போற்றி
பொன்றச் சகடமுதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலாஎறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாவெடுத்தாய் குணம் போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோமிரங்கேலோ ரெம்பாவாய்.

உதிப்பனஉத்தமர் சிந்தையுள் ஒன்னலர் நெஞ்சமஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன - கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்த என்புன்கவிப்பாவினம் பூண்டன - பாவுதொல்சீர்
எதித்தலை நாதன் இராமாநுசன் தன் இணையடியே.

(இரா.நூற்றந்தாதி - 50)

— என்று எம்பெருமானுர் திருவடிகளின் வைபவத்தைப் பேசினுர் அமுதனுர். ஆண்டாள் அவ்வடிகளுக்குப் பல்லாண்டு பாடுவது தொனிப்பொருள்.

அன்று

1. கலி ஆட்சி செய்யும் காலத்தில்
2. உலகம் விபரீதமதங்களால் குழம்பிய காலத்தில்

இவ்வுலகம்

இவ்விருள் தருமாஞாலத்தாரை.

அளந்தாய்

உன்னடிமை ஆக்கிக் கொண்டாய்.

acharya.org

அடிபோற்றி

தேவரீர் திருவடிகளுக்குகப்பல்லாண்டு.

அங்குசென்று

ஆங்காங்குசென்று

தென்னிலங்கைசெற்றாய்

அழகான சரீரம். அதில் உள்ள ராவணன் தேவதாந்தரபஜனம் (பற்றுதல்)

இராவணன் தேவதாந்தர भजन தசை. தேஹஸம்பந்தத்தால் சேதனன் தேவதாந்தர भजन பண்ணுவதாக எம்பெருமானார் தம் ஞானத்தால் நாரணனாகிய திருமாலே அறப்பெரியவன் என்று அறுதியிட்டு அந்நிலையை அழித்தார். (வார்த்தாமாலை)

1. தீர்த்தான் இருவினை தீர்த்து அரங்கன்செய்ய தாளிணையோடு ஆர்த்தான் இவை எம்மிராமானுசன் செய்யும் அற்புதமே (இரா.நூற்றந்தாதி - 52)

2. .... தன்னீண்டிய சீர் அருள் சுரந்து எல்லாவுயிர்க்கும் நாதன்அரங்கனென்னும் பொருள் சுரந்தான் எம்இராமானுசன் (இரா.நூற்று- 91)

சகடம் பொன்ற உதைத்தாய் புகழ் போற்றி

சகடம் ஒரு இடம் விட்டு ஓரிடம் போவதற்குக்கருவியாக இருக்கும். ஆத்மா, இவ்வுடலைவிட்டு ஸ்வர்க்கமோ நரகமோ பரமபதமோ போவதற்குஉரியமார்க்கம், சகடமாகும்.

acharya.org

அர்ச்சிராதிமார்க்கத்தால் செல்பவன் பரமபதம் அடைகிருன். மறுபிறவியில்லே. தூமாதி மார்க்கத்தால் செல்பவன் மறுபிறவி அடைகிருன். எம்பெருமாஞர் தம் சீரிய ஞானத்தால் ஆத்மா அர்ச்சிராதிமார்க்கத்தால் செல்லாது தூமாதி மார்க்கத்தில் செல்வதைத் தடுத்துரக்ஷித்தார். அவ் வெம்பெருமாஞர் திருவடிகள் புகழ் போற்றி.

கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி

முள்ளே முள்ளாலே தானே எடுக்க வேண்டும். வாதிகளின் வாதங்களிலுள்ள பரஸ்பரம் முரணுன அர்த்தங்களேப் போக்கி ப்ரதிவாதிகளேக் கொண்டே ப்ரதிவாதிகளே நிரஸித்தார். அவருடைய வீரக்கழலுக்குப் பல்லாண்டு.

குன்று குடையா எடுத்தாய்

தைர்யத்தில் ஹிமவானேப் போலே என்கிறபடியே சலிப்பிக்கவொண்ணுதபடி மிக தீரரான ஆழ்வானேக்கொண்டு தீங்கிழைக்க நினேத்த சோழனே சமாளித்தார் ஸ்வாமி, தீமை செய்த நாலூரானேயும், ''நான் பெற்ற பேறு நாலூரானும் பெறவேண்டும்'' என்ற ஆழ்வானேக் கொண்டு ரக்ஷித்தார்.

குணம்போற்றி

இந்த சீலமும் பொறையும், இரண்டுக்கும் பல்லாண்டு.

வென்று பகைகெடுக்கும்

விரோதிகளே வென்று அவர்களுடைய பகைமையை அழிக்கும்.

நின்கையில் வேல் போற்றி

வேல் - உபலக்ஷணம். கண்ணனுக்கு வேல் போலே ஸ்வாமிக்கு த்ரிதண்டம் போற்றி.

acharya.org

1. விஷ்வக்ஸேனர் யதிராஜராக அவதரித்தார். அவர்கையில் இருந்த பிரம்பு த்ரிதண்டமாயிற்று.

(யதிராஜஸப்ததி - 32)

2. கையிலேந்திய முக்கோலுடைய எம்பெருமானார் மூவுலகும் செய்த புண்ணியபலம் (யதி - ஸப்ததி - 11)

3. ப்ரதிவாதிகளின் சிரஸ்ஸில் வஜ்ரதண்டம் த்ரிதண்டம் (தாடீபஞ்சகம் - 4) என்னும் ப்ரமாணங்களைக் காண்க. அல்லது வேல் - விரோதிகளை அழிப்பது. அதாவது நம்முடைய ஸ்வரூப விரோதிகளைப் போக்கி, வழிவழி ஆட் செய்யும்படி, தம் திருக்கையில் தாங்கிய, திருவாழி திருச்சங்கால் செய்பவர்.

உன்சேவகமே

தேவரீருடைய வீரச் செயலையே.

என்றென்று

பலபலவாக

ஏத்திப்பறைகொள்வான்

புகழ்ந்து தேவரீர் திருவடிகளில் கைங்கர்யம் பண்ண

இன்று

ஆசார்யாபிமானமே உத்தாரகம் என்கிற ஸ்வரூபஜ்ஞானம் பிறந்த இன்று.

யாம் வந்தோம்

ஸம்ஸாரமாகிற காட்டுத்தீயால் நலிவு பெற்ற நாங்கள் வந்தோம்.

இரங்கு

தேவரீர்க்ருபைபுரிய வேண்டும்.

acharya.org

பாசுரம் - 25

ஒருத்தி மகனாய்ப் பிறந்து - ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்துவளர
தரிக்கிலானாகித்தான் தீங்குநினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்னநின்ற நெடுமாலே - உன்னை
அருத்தித்துவந்தோம் பறை தருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும்யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

ஒருத்தி மகனாய் பிறந்து

திருமந்திரத்திலே பிறந்து ஒருத்தி - नाष्टाक्षरात् परो मन्त्रः என்கிற சேதனனுடைய ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவித்த - அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன் என்கிற படியே வாழப்பண்ணும் திருமந்திரம்.

ஒருத்தி மகனாய் ஒளித்துவளர

திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர வேண்டியவன் வைணவன்.

ஒருத்தி

தலையான வெட்டெழுத்தில் பிறந்து சரணாகதித்தாய்

முலையாரமுதில் வளர்ந்தபிரான் முடும்பைக்கதிபன்.

(அருளிச்செயல்ரஹஸ்யம் - தனியன்)

acharya.org

சரணாகதித்தாய் = த்வயம் — முலே இரண்டு போல, இரண்டு வாக்யங்கள் ஸ்வரூபாநுரூபமான உபாயமும் फलமும் ஆகிற அமுதமளித்து வளர்க்கும் தாய். அதில் வளர்ந்தவராம் முடும்பைக்கதிபன்.

ஓரிரவில் ஒளித்துவளர

யாதவப்ரகாசனோடு கங்காயாத்திரை சென்ற ராமானுஜர் யாத்திரையின் கள்ளமர்மத்தை எம்பார் மூலம் வழியில் அறிந்துகொண்டு விந்தியாடவியிலிருந்து தம்மை ஒளித்து கச்சிமா நகர் சேர்ந்து வளர

தரிக்கிலானுக்கித்தான் தீங்கு நினைந்த

வேதாந்தபாடம் கேட்கும் போது ராமானுசர் அதிமேதாவியாயிருப்பது கண்டு - அது பொறுதவனாய் அவரைக்கங்கையிலே தள்ளிமாய்க்க நினைந்த யாதவப்ரகாசனின்

கருத்தைப் பிழைப்பித்து

கருத்தைத்தப்பிப்போம்படிசெய்து स्वबलादुद्धूतयादवप्रकाशः (தன்ஞானபலத்தால் யாதவப்ரகாசனையும் உஜ்ஜீவிப்பித்தார்) என்கிறபடியே திருவடிகளில் அடிமை கொண்டு வாழ்வித்தவர்

கஞ்சன் வயிற்றில்

கஞ்சன் - கலிபுருஷன்

கலிபுருஷன் வயிற்றில். கலிபுருஷன், எம்பெருமானாரைப் பார்த்து, ''நீர் என்னை எங்கும் நிலைத்திராமல் விரட்டுகிறீர். அதனால் தக்கசமயத்தில் உமது மதத்தில் குழப்பத்தை விளைவிக்கிறேன்'' என்றான். அதைக் கேட்ட எம்பெருமானார், எம்பெருமானிடம் ''என்மதம் தடையின்றி வளரவேண்டும்'' என்று ப்ரபத்தி பண்ணி கலியின் ப்ரபாவத்தை அழித்து தன் மதத்தைரக்ஷித்தார் என்பது வரலாறு. அறம் சீறும் உறுகலியைத் துரந்தவரல்லவா?

acharya.org

நெருப்பென்னநின்ற

நெருப்பாக நின்ற पाषण्डसागरमहाबडबामुखाग्निः (தாடீ பஞ்சகம்)

பாஷண்டிகளாகிற பெரியகடலை வற்றடிக்கும். படபாக்னி (படவைத் தீ) என்பதை அநுஸந்திக்கவும்.

நெடுமாலே

1. மாலே.

अच्युतपदांबुज युग्मरुक्मव्यामोहत :

(எம்பெருமானுடைய திருவடித்தாமரையில் உள்ள வ்யாமோஹத்தால்)

2. பொன்னரங்கமென்னில், மயலே பெருகு மிராமநுசன்.

நெடுமாலே

ஆழ்வார்களிடத்தும் ஆசார்ய களிடத்தும் ஆராத காதல் கொண்டவர்.

உன்னை அருத்தித்துவந்தோம்

1. நிரபேக்ஷராய் க்ருபாமாத்ரப்ஸந்நாசார் யரான தேவரீரையே வேண்டி வந்தோம்.

2. கையில் கனியென்ன கண்ணனைக் காட்டித் தரிலும் - உன்தன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேறு வேண்டாத வரல்லவா? நாங்கள்.

तृणीकृत विरिञ्चादि निरङ्कुशविभूतय : ।
रामानुज पदांबोज समाश्रयण शालिनः ॥

(உத்தர திசைர்யா - 22)

(ராமானுஜ திருவடித்தாமரை சம்பந்தம் விளங்குபவர்கள் ப்ரஹ்மபதம் போன்ற தடையற்ற ஐச்வர்யமும் விரும்பமாட்டார்களல்லவா?)

acharya.org

பறை தருதியாகில்

எங்களுக்கு பலம் தரத் திருவுள்ளமாகில்

திருத்தக்க செல்வமும்

1. நம் போல்வார்க்கு புருஷகாரம் செய்து எம் பெருமானடி சேர்ப்பதே பிராட்டிக்குச் செல்வம்.

அதுவே எம் பெருமானார்க்கும் செல்வம்.

2. எம்பெருமானார் ஸம்பந்தமில்லாதார்க்கு மோக்ஷமில்லை என்பது ஸம்ப்ரதாயம்.

दत्ते रंगी निजमपि पदं देशिकादेशकाङ्क्षी

(ந்யாஸ திலகம் - 24)

(திருவரங்கனும் ஆசார்யன் நியமனத்தை எதிர் பார்த்தே தன் ஸ்தானமான பரமபதத்தை (திருவடியை) அளிக்கிறான் என்னும் ப்ரமாணம் கண்டு கொள்க.)

சேவகமும்

அறுசமயச் செடியதனை அறத்துறந்ததும், அடுத்து வரும் குத்ருஷ்டிகளை அழித்ததுமான தேவரீர் வீரத்தை.

யாம்

வக்தவ்யம் ஆசார்ய வைபவம் என்கிறபடியே ஆசார்யன் பெருமை பேசுவதே தாரகமாகக் கொண்ட நாங்கள்.

பாடி

ஆர்வத்துடன் பாடி.

வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து

1. வருத்தம் தீர்வது போதாது - மகிழ்ச்சியும் ஏற்பட வேணும்.

2. பிறர் மதத்தில், ஆத்யந்திகமாய் நித்யமான துக்கம் போவதே மோக்ஷமாகும்.

ராமாநுஜ தர்சனத்தில் துக்கம் போவது தவிர கைங்கர்யத்தாலே ஏற்படும் ஆநந்தாநுபவமும் சேர்ந்ததுதான் மோக்ஷம்.

acharya.org

பாசுரம் - 26

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே! கொடியே! விதானமே!
ஆலினிலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

மாலே

1. அன்புடையவரே! ஆச்ரிதரான சிஷ்யரிடம் வாத்ஸல்ய முள்ளவரே!

2. பெரியவரே! எம்பெருமானும் விரும்பும்படி பெரியவரே.

மாலே மணிவண்ணா

1. அறப்பெரியவராயினும் தன் ஆச்ரிதர்க்கு விதேய மானவரே!

2. रूपं तवास्तु यतिराजदृशो : ममाग्रे

(தேவரீர் திருமேனி அடியேன் கண் முன்னால் இருக்கவேண்டும்- எனப் ப்ரார்த்திக்கும்படியான திருமேனி உடையவரே!)

3. குரங்கு கையில் விலைமதிக்க முடியாத மாணிக்கம் போலே, பாமரர்களால் புரிந்து கொள்ள முடியாத அறப்பெருமையுடைய.

acharya.org

आघ्रातं परिलीढं उग्रनखरैः क्षुण्णं च यच्चर्वितं
क्षिप्तंयद्वत नीरसस्त्वकुपितेनेति व्यथां माकृथाः ।
हे सद्रत्न तवैतदेव कुशलं यद्वानरेणाग्रहात्
अन्तस्सारविचारणव्यसनिना चूर्णीकृतं नाश्मना ॥

குவலயானந்தம் 135

(ஹே நல்லரத்தினமே! வாநரமானது உன்னை முகர்ந்துபார்த்து நக்கி கூரியநகங்களால் கீரியது. சுவைத்தது. ஆனால் தூக்கி எறிந்துவிட்டது. சுவையில்லை என்று கோபம்கொண்டு. இதற்கு வருந்தாதே. குரங்கு கோபத்தால் உள்ளே ஸாரத்தைப்பார்த்து இல்லாது கல்லில் போட்டு துகள்துகளாக்கவில்லையே. இதுவே உனக்கு நலன்).

மார்கழி நீராடுவான்

மார்கழி - மாதங்களில் மார்கழி என்று கூறப்பட்டது. அதுபோலே மார்க்கங்களில் உபாயங்களில் தலைசிறந்தது

நீராடுதல் = ஆழ்தல். பகவத் ப்ராப்தி ஸாதநங்களில் சிறப்புடையதான ஆசார்யாபிமானத்திலே ஒதுங்கி வாழ்கைக்காக

மேலையார் செய்வனகள்

பெரியோர் ஸ்வரூபாநுரூபமாய்ச் செய்து போந்தது சிஷ்டாசார ஸித்தம்.

வேண்டுவனகேட்டியேல்

அடியோங்கள் அபேக்ஷித்ததைக் கேட்கத் திருவுள்ளமாகில்

ஞாலத்தையெல்லாம்

பகவத்விமுகரான ஸம்ஸாரிகள் அனைவரும்

acharya.org

நடுங்கமுரல்வன

நடுங்கும்படி ஸித்தாந்தார்த்தங்களை முழங்குகின்ற

பாலன்னவண்ணத்து

1. பால் நிறவண்ணனை ஆதிசேஷாவதாரமானவரே

2. பால்போலே சுத்தஸத்வகுணமுடைய

உன்பாஞ்சசன்னியம் போல்வன

உனது கோதிலடியார்களை

சங்கங்கள்

1. மதிப்புக்காகப் பன்மை

2. எம்பெருமானுடைய சங்கு, தன்ஸ்பர்சத்தால், துருவனை ஸர்வஜ்ஞனாக்கினாப் போலே, தன்ஸம்பந்தத்தால் தன் அடியார்களை ஸர்வஜ்ஞராக் கினவர்.

போய்ப்பாடுடையனவே

புகழுடையவரே

सत्यं सत्यं पुनस्सत्यं यतिराजो जगद्गुरुः ।
स एव सर्वलोकानां उद्धर्ता नास्ति संशयः ॥

(உண்மை, உண்மை உண்மை யதிராஜரே லோக குரு. அவர்தான் அகில உலகினையும் உய்விக்கப் போகிறார். ஸந்தேஹமில்லை) என்ற புகழையுடையவர்.

சாலப்பெரும்பறையே

பறை = செய்திகளை அறிவிப்பது.

எம்பெருமானுடைய கல்யாண குணங்களைப் பறைசாற்றினவர். எம்பெருமானுக்கு முன்பு யாரும் எம்பெருமான் குணங்களைப்பறை சாற்றினவரில்லை.

acharya.org

அப்பெருமை இவருக்கே உண்டு. (கத்யத்ரயம். ப்ரஹ்ம ஸூத்ரம். கீதாபாஷ்யங்களிலே காணலாம்). ஆதலால் பெரும்பறை எம்பெருமானாரே ஆவார்.

பல்லாண்டிசைப்பார்

பெரியாழ்வாரையும் நம்மாழ்வாரையும் போலே எம்பெருமானுக்கும் அவனடியார்க்கும் பல்லாண்டுபாடி பல்லாயிரவரைப்பாட வைத்தவர்.

கோலவிளக்கு

விளக்கு - எம்பெருமான். கோலவிளக்கு - விளக்கையும் விளங்க வைப்பது. எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை.

यतिक्ष्माभृद्दीपो यदि न किल जाज्वल्यत इह

(யதிராஜ ஸப்ததி -56)

(விளக்கம் ஐந்தாம் பாசுரம் பார்க்கவும்)

கொடியே

1. ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்திற்கு வெற்றிக் கொடிபோன்றவரே.

श्रीरंगेशजयध्वजो विजयते रामानुजो ऽयं मुनिः ।

(தாடீ பஞ்சகம் -1)

(ஸ்ரீராமானுசமுனி திருவரங்கநாதனின் வெற்றிக் கொடியாக விளங்குகிறார்).

விதானமே

தொடுத்துமேல் விதானமாய பௌவ நீராவணை.

acharya.org

படுத்த பாயல் பள்ளி கொள்வது என்கொல் வேலை வண்ணனே. (திருச் சந்தவிருத்தம் - 18) என்கிறபடியே திருவனந்தாழ்வானுடைய அவதாரமான எம்பெருமானாரே

ஆலினிலையாய்

1. ஆலின் தன்மையுடையவரே.

ஆலமரம் தன்னை நாடிவந்தவர்க்கு நிழல். தாபம் தீர்க்கும்.

எம்பெருமானார்தன்னை நாடி வந்தவர்க்கு पादच्छायै அளித்து தாபம் தீர்ப்பார்.

निगमपथिकच्छायाशाखी (யதிராஜ ஸப்ததி - 46)

2. எம்பெருமான் பனைமரம். எம்பெருமானார் ஆலமரம். பனைமரம் நிழல் தராது. பனம்பழமும் தலையில் விழும் எம்பெருமான் நிரங்குசஸ்வாதந்த்ரயத்தால் அழல் ஆவான். ஆலமரம் - வந்தார்க்கு நிழல் தரும். ஆலம் பழமும் தீங்கிழைக்காதது.

எம்பெருமானார் - பாதச் சாயையும் தந்தருள்வர். காரேய்கருணையிராமாநுசராகையாலே.

அருள்

இப்படிப்பட்ட உம்மையே எங்களுக்குத் தந்தருளவேணும்

''பேறொன்று மற்றில்லை நின்சரணன்றி'' அல்லவா ?

பாசுரம் - 27

கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா - உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டுயாம் பெறுசம்மானம்
நாடுபுகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பால்சோறு
மூட நெய்பெய்து முழங்கைவழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

கூடாரை வெல்லும் சீர்

யஜ்ஞமூர்த்தி யாதவப்ரகாசர் போன்ற பல அத்வைதிகள் ஸ்வாமி எம்பெருமானாரோடு எதிரம்பு கோப்பவர்களா யிருந்தனர். பிறகு கூடினர். அவர்களை வெல்தற்கு உறுப்பாயிருந்த குணங்களை உடையவரான எம்பெருமானார்.

சீர் — குணங்கள்

1. வண்மை. அர்த்தத்தின் சீர்மையும் அதிகாரியின் தாழ்வும் பாராதே அனைவரையும் ஸம்ஸாரத்தில் நின்றும் கரையேற்றும் ஔதார்யம்.

2. மாதகவு. ஸம்ஸாரமாகிற படுகுழியிலே விழுந்து அழுந்திக்கிடக்கிற ஸம்ஸாரிகளுடைய அநர்த்தம் கண்டு பொறுக்கமாட்டாத பரமக்ருபை

3. மதிபுரையும் தண்மை. அனைவருக்கும் தண்மையும் மகிழ்ச்சியும் தரும் மதிபோல குளிர்ச்சியே வடிவாக உடைய அருள்.

4. நல்ஞானம். தத்வ - ஹித - புருஷார்த்தங்களைப்

acharya.org

பற்றியதும் ஸாரதமமுமாயிருக்கிற உண்மை ஞானம், (இராமானுநூற்றந்தாதி - பிள்ளை லோகம் ஜீயர் வ்யாக்யானம்

கோவிந்தா

1. விலங்கனையரான ஸம்ஸாரிகளை ரக்ஷிக்கைக்காக பூமியை வந்தடைந்தவர். (கோ = பூமி. விந்தர் = அடைந்தவர்)

2. பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளைப்பெற்றவர்

3. அற்பமே உணர்ந்தவனைக்கண்டு வேதம் அஞ்சுகிறது. அதனுடைய பீதியைப்போக்கி ரக்ஷித்தவர்.

உன்தன்னைப்பாடி

1. நம்மாழ்வார் - 'பாடீர் அவன் நாமம் வீடேபெறலாமே'

2. அமுதனார் - 'சொல்லுவோம் அவன் நாமங்களே'

3. वक्तव्यं आचार्यवैभवं என்கிறபடியே ப்ரதமபர்வத்தில் சரமபர்வமான எம்பெருமானார் பெருமையை ஆர்வத்துடன்பாடி

4. काषायशोभि யாய் த்ரிதண்ட ஹஸ்தமானதேவருடைய வடிவழகை அநுபவித்து அதுக்குப் போக்குவீடாகப்பாடி.

பறைகொண்டு

निरुपधिरंगवृत्तिरसिकान् अभिताण्डवयन्
निगमविमर्शकेलिरसिकैर्निभृतैः विघृतः ।
गुणपरिणद्धसूक्ति दढ कोणविघट्टनया
रटति दिशामुखेषु यतिराजयशः पटहः ॥

(யதிராஜ ஸப்ததி - 35)

acharya.org

(வேதாந்த விசார லீலையில் ரஸிகர்களாலே தரிக்கப்பட்டதான யதிராஜருடைய புகழாகிற பறையானது, பகவத்-குணங்களாலே நிறைந்த திவ்ய சூக்திகளாகிற தடியினால் அடிக்கப்பட்டு, வேறுபயன் கருதாது பகவானுடைய சேவைக்காக திருவரங்கவாஸ, ரஸிகர்களை ஆடவைத்துக் கொண்டு திசைகளில் எல்லாம் முழங்குகிறது) என்கிறபடியே எம்பெருமானாருடைய புகழை மனதில் தியானித்துக் கொண்டு.

யாம்பெறு சம்மானம்

அதுவே யாம்பெறு ஸம்மானம். பரமாசார்ய த்யானமல்லவா சம்மானம்.

நாடுபுகழும் பரிசினால்

வாழ்வர்வாழ்வெய்தி ஞாலம்புகழவே என்கிறபடியே நாடு நன்கு கொண்டாடும்படி

சூடகமே - காப்பு. பட்டம் சூடகமாவனபராவர குருக்கள் பூட்டும் ஆத்ம பூஷணங்கள் (ஆசார்யஹ்ருதயம்.)

1. கைக்கு ஆபரணம் அஞ்ஜலி

2. மங்களாசாஸனம்

மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு

உகந்தருளின நிலங்களை அநுஸந்தித்தால் ஊணும் உறக்கமுமின்றிக்கே இவருடைய யாத்ரையே எல்லார்க்கும் நம் யாத்ரையாக வேணும். (ஸ்ரீவசன பூஷணம் 259). இதுவே மங்களாசாஸனம்

தாள்வளையே

இருதோளுக்குமிடும் ஆபரணம். அதாவது சங்கு சக்கரப்பொறி இட்டுக் கொள்ளல்.

தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின் கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று (திருப்பல்லாண்டு - 7)

acharya.org

தோடே

1. இரண்டாய் வட்டமாய் இருக்கும்.

2. மந்த்ரமும் மந்த்ரசேஷமும்

3. வட்டமான ப்ரணவமும் அதன் விவரணமான மந்த்ரசேஷமும்

4. ப்ரணவம் - ஓம். விவரணம் - நமோ நாராயணாய

செவிப்பூவே

1. தோட்டின் மேலிடும் ஆபரணம். கர்ணபத்ரம் என்பர். அதுமிகவும் போக்யமாயிருக்கும். இரண்டு கூறுக இருக்கும் த்வயம் பயனாகிய கைங்கர்யத்தை முக்கியமாகக் கொண்டிருப்பதால் போக்யமாயிருக்கும்.

2. காதுக்கு அணி பெரியோர்களிடம் கேட்பது

श्रोत्रं श्रुतेनैव न कुण्डलेन (பெரியவர்களிடம் கேட்பதால் காது அழகுபெறும். குண்டலத்தாலல்ல) அதாவது செவிச்செல்வம்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்று தமிழ் முனிவர் வாக்கு. ஆதலால் ஸதாசார்யனிடம் ஆழ்வார் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளைக்கேட்டல்.

பாடகமே

1. காலுக்கு இடுமாபரணம். காப்பு. எம்பெருமானைப் பெறுகைக்குத்தடையாகஉள்ள உபாயாந்தரங்களை விடச் சொல்லும் சரமச்லோகம். சரமச்லோகம் விரோதி போக்கு-கையிலே நோக்காக இருப்பதால் காப்பு எனப்படுகிறது.

2. காலுக்கு அழகு - திருப்பதிகள் தோறும் சென்று மங்களாசாஸனம் செய்தல்

தமிழ்: திருப்பதி மிதியாப் பாதம் இருந்தும் பயனற்றது என்கிறது.

acharya.org

3. "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர்மல்லை என்று மண்டினார்க்கு உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே."

4. மாமலராள் புணர்ந்தபொன்மார்பன் பொருந்தும் பதிதொறும்புக்கு நிற்கும் குணம் திகழ் கொண்டல் என்றல்லவா எம்பெருமானார் அனுட்டான மிருப்பது.

என்றனைய

என்று சொல்லப்படுகிற இவ்விதமான.

பல்கலனும்

ஞான, பக்தி, வைராக்ய ப்ரகாசகமான ஆபரணங்களும்.

யாம்

ஆசார்யனணிவிக்க அணிய இருக்கிற நாம்.

அணிவோம்

அணிந்து ஸத்தைபெறுவோம். தேவர் அருளாத போது ஸத்தையில்லையே.

ஆடையுடுப்போம்

ஆடை — நான் எம்பெருமானுக்கு அடிமை என்ற ஜ்ஞானம்

ஆடை —உடலைமறைத்து அழகு தருவதோடு மானத்தைக் காக்கிறது.

சேஷத்வஜ்ஞானம் - உடலை மறைக்கச்செய்து ஆத்மாவுக்கு அழகு தந்து ஸ்வரூபத்தைக் காக்கும்.

ஆடை மழைவெய்யிலுக்குப் பாதுகாப்பாக இருக்கும். சேஷத்வஜ்ஞானம் அஹங்கார மமகாரங்கள் பாதிக்காத வண்ணம் ஆத்ம ரக்ஷணம் பண்ணும்.

acharya.org

விலங்குதான் ஆடை உடுத்தாது. விலங்கனையராய் ஆடை உடுத்தத் தகுதியில்லாத நாங்கள் விலங்காயிருந்தோம். தேவரீர் அருளால், பகவானுக்கு அடிமை என்ற ஜ்ஞானம் ஆகிய உடை உடுத்து, விலங்கனையர் என்ற இகழ்ச்சி ஒழிந்தோம்.

அதன் பின்னே

அதுக்குமேலே.

பால்சோறு

பாலில் வெந்த சோறு, உன் பாலே போல் சீர் என்கையாலே, பால் என்கிறது குணத்தை.

சோறு. 'அஹமந்நம், அஹமந்நம்,' என்கையாலும் 'உண்ணும் சோறு' (நம்மாழ்வார்) என்கையாலும் உயர்வறவுயர் நலத்தால் போக்யனான பகவான்.

வேதம், ஸம்ஸாரம் நீங்கிய அந்தமுக்தன் ப்ரஹ்மத்துடன் அவன் குணங்களனைத்தையும் அநுபவிக்கிறான் என்கிறது. ஆக அளவிறந்த கல்யாண குணங்களையுடையனான பகவானுடைய அநுபவம் என்றதாயிற்று.

மூட நெய்பெய்து

நீர் - பால் - அமுது - நெய்

நீர்.... பரபக்தி, பால் - பரஜ்ஞானம்

நெய் - பரமபக்தி

நீர் பால் நெய்யமுதாய் நிரம்பின ஏரி நெளிக்குமாபோலே பரபக்த்யாதிமய ஜ்ஞாநாம்ருதாப்தி - (ஆசார்யஹ்ருதயம் - 188) என்கிற பரபக்தியாலே குணாநுபவத்தை நிறைத்து.

acharya.org

முழங்கைவழிவார

ஓராண்வழியாக உபதேசம் பெற்று.

கூடியிருந்து குளிர்ந்து

எம்பெருமானோடும் அவனடியாரோடும் கூடி இருந்து ஸகலதாபங்களும் தீரப்பெற்று இன்புறுவோம். அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை அல்லவா?

பாசுரம் - 28

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யா முடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன் தன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால்-உன்தன்னைச்
சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே
இறைவா! நீதாராய் பறை ஏலோரெம்பாவாய்

கறவைகள் பின்சென்று

விலங்கு போன்ற பாமர ஜனங்களை அநுவர்த்தித்து

கானம் சேர்ந்து உண்போம்

ஸம்ஸாரமாகிய பாலைவனத்திலே படிந்து, விஷயாநுபவம் பண்ணி, பழுதே நாளைக் கழித்தோம்.

கறவைகள் பின்சென்று

காமதேனுக்களைப் போலே ஞானப்பாலைச் சுரக்கும் ஆசார்யர்களை அநுவர்த்தித்து

acharya.org

கானம் சேர்ந்து உண்போம்

एतत् साम गायन् आस्ते *(ஏதத் ஸாம காயந் ஆஸ்தே)*

— என்கிறபடியே ஸாமகானம் பண்ணுமிடத்தே சேர்ந்து பரப்ரஹ்மமாகிற அன்னத்தை அநுபவித்துக் களித்து இருக்கக்கடவோம்.

குறிப்பு:— இன்றைய நிலையைச் சொன்னபடியால் வாக்கியத்தை இரட்டித்து முந்தைய நிலையையும் கொள்ள வேண்டும்.

அறிவொன்றுமில்லாத

தத்வ-ஹித-புருஷார்த்தங்களில் ஒன்றிலும் உணர்வில்லாத

ஆய்க்குலத்து

இடையர் இடக்கைவலக்கையறியாதிருப்பினும் கண்ணனல்லால் தெய்வமில்லை என்றிருந்ததுபோல உன்னையன்றி மற்றொரு தெய்வமில்லை (நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே) என்கிற ஜ்ஞானமுடையவர் நடுவே.

உன்தன்னைப் பிறவிபெறுந்தனை

உன்னையே வந்து பிறவி பிறக்கும்படியாக - தேவரீர் வந்து அவதரிக்கும்படி

புண்ணியம் யாமுடையோம்

புண்ணியனாகிய தேவரீரே வந்து பிறக்கும்படியான பாக்கியமுடையோம்.

''இராமாநுசன் மிக்க புண்ணியனே'' (இராமா.நூற்றந்தாதி 91)

acharya.org

''புண்ணியநோன்பு புரிந்துமிலேன்-அடிபோற்றி செய்யும்
நுண்ணருங் கேள்வி நுவன்றுமிலேன் செம்மை நூற் புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி இராமானுச இன்றுநீ புகுந்துஎன்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற இக்காரணம் கட்டுரையே''

(இராமா.நூற்றந்தாதி 92)

''उपवीतिनं ऊर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तं''

— என்கிற யதிராஜஸப்ததி ஶ்லோகம் - 11 காண்மின்.

குறையொன்றுமில்லாத

1. குறையில்லாத - குறைஒன்றில்லாத-
குறையொன்றுமில்லாத.

2. ஞானம், அநுட்டானம், பிறர் மினுக்கம் கண்டு மகிழ்தல் என்கிற மூன்றும் ஆசார்யஸிம்ஹாஸனம் ஏறினார்க்கு அவசியமானது. ஆகையாலே இம் மூன்றாலும் குறையில்லாதவராய்.

கோவிந்தா

1. பசுப்ராயரான (விலங்களையர்) எங்களிடையே
வந்தவதரித்த எம்பெருமானாரே!
2. பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளை அடைந்த யதிராசா!

यथाभूतस्वार्था यतिनृपतिसूक्ति : त्रिजयते
सुधासन्दोहाब्धिः सुचरित विपक्तिः श्रुतिमतां

(யதிராஜ ஸப்ததி - 54)

(எம்பெருமானார் திவ்ய ஸூக்தி தான் சொல்லும் அர்த்தத்தில் உண்மையானது. அமுதக்குவியலில் கடல் - வேதத்தை ப்ரமாணமாக உடைய வைதிகர்களுக்குப் பலித்த பாக்யம்) இப்படிப்பட்ட திவ்யசூக்திகளைப் பெற்ற யதிராசர்.

acharya.org

உன்தன்னோடு உறவு

மாடு மனையும் கிளையும் மறைமுனிவர்
தேடுமுயர் வீடும் செந்நெறியும்-பீடுடைய
எட்டெழுத்தும் தந்தவனே- (ஞானசாரம் - 30) —
என்கிறபடியால் தேவரீருடனே எல்லா உறவும்

இங்கு ஒழிக்க ஒழியாது

இந்த விபூதியோடு ஒழிக்க ஒழியுமதன்று-அங்கும் உண்டு- அதாவது நித்யமானது.

அறியாத பிள்ளைகளோம்

தேவரீர்பெருமையையறியாத சிறியோமான நாங்கள்

அன்பினால்

தேவரீரிடம் உள்ள பக்தியினால்

உன்தன்னை

தேவரீரை

சிறுபேரழைத்தனவும்

தேவரீர் பெருமையை சிறிது சொல்லப்புகுந்ததும்: உன் பெருமை வாக்கால் சொல்லவொண்ணாது (பேர்-பெருமை)

''போற்றரும் சீலத் திராமானுச நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வு. அது தீரில் உன் சீர்தனக்கு ஓர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் என்மனம் ஏத்தியன்றி
ஆற்றகில்லாது. இதற்கு என் நினைவாயென்றிட்டு
அஞ்சுவனே'' (இரா. நூற்றந்தாதி.89)

acharya.org

சீறியருளாதே

திருவுள்ளத்தில் சீற்றம் கொள்ளாது பொறுத்தருள வேணும்

இறைவா

எங்களுக்கு நீயன்றோ இறைவன். ஸர்வேச்வரனல்ல. வானோரிறையை நினைத்தன்று. இருள் தருமா ஞாலத்தில் வந்து தோன்றிய அண்ணலாம் எம் இராமாநுசனன்றோ இறைவன்.

நீ தாராய் பறை

ஆறொன்றுமில்லை அப்பேறளித்தற்கு. மற்றச் சரணன்றி பேறு ஒன்று மற்றில்லை நின் சரணன்றி-என்கையாலே, நீரே உபாயம். கைங்கர்யமாகிற பேற்றினை தேவரீரே அளிக்க வேணும்.

பாசுரம் 29

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து-உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து-நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப்பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும்-உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கே நாமாட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

acharya.org

சிற்றம் சிறுகாலே

காலே-தாமஸரும் உணரும்படியான காலம். சிறுகாலே அஜ்ஞானதசை குலேந்து ப்ராப்திதசைபுகுருவதற்கு முன்புத்தை ஜ்ஞான தசை.

சிற்றஞ்சிறுகாலே - முமுக்ஷுத்வம் உண்டான நிலே. ஜ்ஞான தீர்த்தாவகாஹத்திற்கு உரியகாலம்.

(ஸதாசார்யோபதேச மூலமாக)

வந்து

தேவரீர் திருவடிகளிலே வந்து

உன்னேச் சேவித்து

தேவரீரைச் சேவித்து

உன்பொன் தாமரையடி

தாமரையடி-எம்பெருமான் திருவடி
பொற்றுமரையடி-ஆசார்யன் திருவடி.

இராமானுசன் அம்பொற்பாதம் (இரா.நூற்றந்தாதி-12) என்கிறபடியே, போக்யமாயும், "இராமானுசன் மன்னுமாமலர்த்தாள் அயரேன்" (இரா.நூற்-35) — எப்போதும் தியானம் பண்ணிக்கொண்டு மறவேன் என்று भरसमर्पण யோக்யமாயும், "ஒன்னலர் நெஞ்சமஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன இராமானுசன் இணேயடி" (இரா.நூற்றந்தாதி 50) என்று விரோதிகளேப் போக்கவல்லதாயும், "உன்னிணே மலர்த்தாள் இன்பந்தரும்" (இரா.நூற்-76) என்று இன்பம் தருவனவாகவும் "போந்ததென்னஞ்சென்னும் பொன்வண்டு.

acharya.org

உனதடிப் போதில் ஒண் சீராம் தெளிதேனுண்டு அமர்ந்திட வேண்டி.'' (இரா.நூற்-100) என்று விரும்பப்படுவனாகவும், ''நம்தலை மிசையே பொங்கிய கீர்த்தி இராமானுசனடிப் பூ மன்னவே'' (இரா.நூற்.108) — என்று தலையில் சூட விரும்புவதுமான உன் திருவடிகளை.

போற்றும் பொருள் கேளாய்

போற்றுதலாகிய ப்ரயோஜனம் கேட்க வேணும்.

பெற்றம் மேய்த்து

वृत्त्या पशुः नरवपुः என்கிறபடியே விலங்கனையரான எங்களை ரக்ஷித்து

உண்ணும்

பகவத் குணானுபவம் பண்ணி வைக்கும்.

குலத்தில் பிறந்து

ஆளவந்தார் ஜ்ஞானஸந்ததியில் பிறந்து.

रामानुजाङ्घ्रिशरणोऽस्मि कुलप्रदीपः
त्वासीत् स यामुनमुनेः (வர.ஸ்தவம் 102)

(அடியேன் எம்பெருமானார் திருவடிகளை சரணமாக உடையேன். எம்பெருமானார், ஆளவந்தார், குலவிளக்கு)

குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது

அந்தரங்கமான கைங்கர்யத்தைக் கொள்ளமாலிருக்க வொண்ணாது.

acharya.org

எங்களை

அடிமையின் சுவையறிந்து அதில் ருசியும் த்வரையும் விளைந்து மேல் விழுகிற எங்களை

இற்றைப் பறை கொள்வான் அன்று காண்

இன்று தேவர் பக்கலிலே தேவரையொழிந்த வேறு பலங்களைக் கொள்வதற்கல்ல.

கோவிந்தா

பசுப்ராயரான ஸம்ஸாரிகளை வாழ்விக்க மண்ணில் தலத்துதித்த தேவா! எம்பெருமானுரே.

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்

என்றும், ஏழேழ் பிறவியிலும்.

உன்தன்னோடுற்றோமேயாவோம்

எல்லாவித உறவும் உன்னோடேயாக வேணும்.

உனக்கே நாமாட் செய்வோம்

தேவரீருடைய முகமலர்ச்சிக்குறுப்பாக ஸர்வ கைங்கர்யங்களும் செய்வோம்.

மற்றை நம் காமங்கள் மாற்று

மற்றை ஸ்வரூப விரோதிகளாய் 'தனது' என்று அபிமானிக்கப் பெற்ற பயன்களைப் போக்கு.

acharya.org

பாசுரம் 30

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழை யார் சென்றிறைஞ்சி
அங்கப்பறை கொண்டவாற்றை அணி புதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப்பரிசு ரைப்பார் ஈரிரண்டுமால் வரைத் தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

வங்கக் கடல் கடைந்த

வங்கம் - தோணி, ஓடம். கோவிந்தன் என்பதோர் தோணி கிடக்கின்ற கடல் - உபநிஷத் கடல், தமிழ் வேதக் கடல். இவற்றைக் கடைந்த. நிலத்தேவர் அநுபவிக்கும்படி' **एष सेतुः** *என்கிறபடியே ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவிக்கும் எம்பெருமான் விளங்கும், உபயவேதக் கடலைக் கடைந்து* **पाराशर्यवचः सुधां** *வ்யாஸ ஸூக்தி அமுதத்தை, ஸ்ரீபாஷ்ய மூலமாகத் தந்த*

மாதவனை

"அருமுனிவர் தொழுந்தவத்தோன் எம் இராமானுசன்"

(இராம. நூற்றந்தாதி 61)

மிகவும் துர்லபரான நம்மாழ்வார் ஆளவந்தார் முதலியோர் தொழும்படியாக - பகவச்சரணாகதியாகிற, தவத்திலே ஊன்றியவராய்.

acharya.org

கேசவனை

இந்திரியங்களாகிற குதிரைகளை அடக்கியவரான யதிராஜரல்லவா? இதர விஷய வ்யாமோஹத்தைப் போக்கினவராய்

திங்கள் திருமுகத்து

ஆசார்யனிடமிருந்து பெற்றதாய், தாபஹரமாய், போக்யமாய் உள்ள அர்த்த விசேஷங்களால் ஸௌம்யமான திருமுக மண்டலத்தை உடைய

சேயிழையார்

சம-தம-ஜ்ஞான-பக்தி-வைராக்யங்களாகிற ஆத்ம பூஷணங்களையுடையரான சிஷ்யர்கள்.

சென்று இறைஞ்சி

அணுகி-மங்களா சாஸனம் செய்து.

அங்கு அப்பறை கொண்டவாற்றை

அங்கு அக்கைங்கர்யம் பெற்றபடியை.

அணிபுதுவை

ஸம்ஸாரத்துக்கு அணிகலனாக விளங்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான.

பைங்கமலத்தண் தெரியல்

துளசி-தாமரைமணி மாலை அணிந்த.

acharya.org

பட்டர்பிரான கோதை சொன்ன

பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் தொனிப்பொருளாக அருளிய.

சங்கத் தமிழ்மாலே

இராமனுசனடியார் குழாங்களாயிருந்து அநுபவிக்கும் பூமாலேபோல் மிக்க இனிமையான இப்பாசுரம்.

முப்பதும் தப்பாமே

ஒரு பாசுரமும் குறையாதே.

இங்கு இப்பரிசுரைப்பார்

இங்கு இப்படி எம்பெருமானுர் வைபவம் சொல்லுவார்.

ஈரிரண்டுமால்வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்

பீதகவாடைப்பிரானுர் பிரமகுருவாக வந்து என்றும் தேனுர்கமலத் திருமாமகள் கொழுநன் என்றும், **सामूर्तिः मुरमर्दनस्य जयति** *(யதிராஜ ஸப்ததி - 63)* என்றும், சொல்லுகிறபடியே நாராயணுவதாரமான, எம்பெருமானுர் திருவருள் பெற்று.

எங்கும்

லீலா விபூதி.நித்ய விபூதி, உபய விபூதியிலும்.

இன்புறுவர்

அமுதக் கடலில் மூழ்கினுப் போலே ஸர்வாவயவங்களும் சுகித்து ஆனந்தமடைவர்.

acharya.org

ஸ்ரீ அண்ணா ஸம்ஸ்க்ருத வித்யாபீட தருமஸ்தாபனம்

பேரன்புடையீர் !

ஸ்ரீ அண்ணா ஸம்ஸ்க்ருத வித்யாபீட தருமஸ்தாபனம், பூஜ்ய ஸ்ரீ அண்ணா அவர்களின் ஆசீர்வாதத்துடன் கீழ்க்கண்ட உயரிய நோக்கங்களுக்காக உருவானது.

1. ஸம்ஸ்க்ருத மொழியை எல்லா வகைகளிலும் பரப்புவது.
2. மக்களின் நன்மைக்காக, சிறந்த பக்தி, மத, தத்துவ ரீதியான புத்தகங்களை ஸம்ஸ்க்ருதம், தமிழ், ஆங்கிலம் முதலிய மொழிகளில் வெளியிடுவது.
3. பொருளாதார ரீதியாக கஷ்டப்படுகின்ற பண்டிதர்களுக்கும், ஸம்ஸ்க்ருத மொழியின் மேம்பாட்டுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் உதவித் தொகை அளிப்பது.
4. மக்களின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு சிறந்த கருத்தரங்குகள், விரிவுரைகள், பிரசங்கங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் ஸம்ஸ்கிருத மொழியை பரவச்செய்வது.

ஸம்ஸ்க்ருத மொழி உலகில் மிகப் பழமையான மொழிகளில் ஒன்று. இப்போது மரபில் உள்ள பல மொழிகளுக்கும் ஸம்ஸ்கிருதம் தாய் ஆகும். நமது வேதங்கள் இதிகாஸங்கள், இலக்கியங்கள், மூதாதையரின் படைப்புகள் ஆகியவற்றின் பரந்த வளமான உயரிய கருத்துகள் இதன் சிறப்பிற்கு அத்தாட்சி. மேலும், நம் நாட்டில் அன்னியர் படையெடுப்புகளும் பலவித வல்லரசுகளும், அரசாட்சிகளும் வந்து சென்ற போதிலும் ஸம்ஸ்க்ருத மொழி குன்றாமல் குறையாமல் 'மறுமலர்ச்சியுடன்' தழைத்து வந்திருப்பது அதன் வளத்திற்கும் குணத்திற்கும், முக்கிய சான்று.

ஸம்ஸ்க்ருத நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தும் விரிவுரை / வியாக்கியானங்கள் வழங்கியும், ஸம்ஸ்க்ருதம் அறியாதவருக்கும் விளங்கும்படி எழுத்துக்களை தமிழ் படுத்தியும் 40 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆஸ்திக இரத்தினம் ஸ்ரீ அண்ணா (என்கிற திரு. சுப்பிரமணி ஐயர்) ஆற்றிய மகத்தான சமுதாயப்பணியை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

நமது தேசத்தின் பாரம்பர்யமான ஆன்மீகச் சிந்தனைகளையும், கலாசாரம் மற்றும் பண்பாடு / கோட்பாடுகளையும் நன்கு அறிந்து கொள்வதற்கு ஸம்ஸ்க்ருத மொழி இன்றியமையாததாகும். எங்களது நோக்கங்கள் சீரிய முறையில் நிறைவேறுவதற்கு உங்களது ஆதரவையும் / உதவியையும் நாடுகிறோம்.

நன்கொடை அனுப்ப விரும்புவோர். எழுத வேண்டிய முகவரி :-

ஸ்ரீ அண்ணா ஸம்ஸ்க்ருத வித்யாபீட தருமஸ்தாபனம்,
குரு க்ருபா
19, மங்கம்மா நகர், ஸ்ரீரங்கம், திருச்சி - 6

acharya.org

திருப்பாவையில் எம்பெருமானார்

— ஓர் ஆய்வு நூல்

ஸ்ரீரங்கம் கோயில் வித்வான்

உ.வே. நரஸிம்ஹாசாரியார்

வெளியிடுவோர்

ஸ்ரீ அண்ணா ஸம்ஸ்க்ருத வித்யாபீட

தருமஸ்தாபனம்

acharya.org